# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-14
Issue-1

ஜனவரி-2021 (ஜமாதில் அவ்வல்-1442)

விலை ரூ. 20/-




## மகாத்மா காந்திஜியை கொலை செய்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்.?

## கோவிட்-19 ம் உச்ச நீதி மன்றமும்

## முஸ்லிம்களை கொலை செய்யும் முகநூல்

## இந்திய முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்? - வி.டி.இராஜசேகர்

بسم الله الرحمن الرحيم

"

எந்த ஒரு சமுதாயமும் தன் உள்ளத்திலுள்ள (போக்குகளை) மாற்றிக் கொள்ளாத வரையில், அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய அருட்கொடைகளை மாற்றி விடுவதில்லை – நிச்சயமாக அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவியுறுபவனாகவும், (யாவற்றையும்) நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.

(அல்குர்ஆன் – 8:53)

"


மகாத்மா காந்திஜியை – கொலை செய்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்.? - 4

கம்யூனிஸ்ட் கட்சியில் சாதிய ஆதிக்கம் – இஸ்லாத்தை ஏற்ற பெண் - 11

உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 3 கோவிட்-19 ம் உச்ச நீதிமன்றமும் - 12

முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகள் - 16

காங்கிரஸின் தோற்றமும் முஸ்லிம்களின் பங்களிப்பும் - 28

முஸ்லிம்களை கொலை செய்யும் முகநூல் – 33

இந்திய முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்? – 37

பெண்களின் நிலை இஸ்லாத்திற்கு முன்னும் பின்னும் - 47

மருத்துவம் - 49

சிலுவைப்போர் 2.0 - 51

தலையங்கம் – 54

உச்ச நீதிமன்றத்தை சீர் செய்யும் நமது முயற்சிகள் வீணாகவில்லை.! – 56

பேராசிரியர் : பெருந்தகை நிலாமுதீன் அவர்களை அல்லாஹ் (20.12.2020)இல் அழைத்துக் கொண்டான் – 58



ஜனவரி–2021

# வைகறை வெளிச்சம்

ஜமாதில் அவ்வல்–1442

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி,
ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in



## மகாத்மா காந்திஜியை

# கொலை செய்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்.?

### முஸ்லிம்களைப் பலிகடாக்கள் ஆக்கிட

மகாத்மா காந்தி அவர்கள், *30.12.1948* இல் கொலை செய்யப்பட்டார்கள். கொலை செய்தது ஓர் இந்துத்துவ தீவிரவாதி. இதுவே சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்.

அன்று காந்தியைக் கொலை செய்தவர்கள் இத்துணை வீராப்போடு பேசிடவில்லை. மாறாக இந்தக் கொலை முஸ்லிம்கள்தாம் செய்தார்கள், என்றொரு பிம்பத்தை உருவாக்கிட முயற்சி செய்தார்கள்.

கொலைக்கு முன்பு கோட்சே இஸ்மாயில், எனப் பச்சைக் குத்திக் கொண்டான். மும்பை யிலுள்ள ஜே.ஜே. மருத்துவமனைக்குச் சென்று விருத்தசேதனம் செய்து கொண்டான். ஆகவே காந்தி கொலை பழியை முஸ்லிம்களின் மேல் போடுவதற்கு எல்லாவிதமான முன் ஏற்பாடு களையும் செய்து கொண்டான்.

அந்தப் பழியை முஸ்லிம்கள்மேல் போட்டிட இயலவில்லை. ஏனெனில் அப்போதிருந்த ஒரே செய்தி ஊடகம் ஆகர்ஷவாணி என்ற ஆல் இந்தியா ரேடியோ. அது ஒரு முஸ்லிம், காந்தி கொலை செய்து விட்டார் என்ற செய்தியை உருவாக்கிட விரிவான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.



கோட்சேவும் ஆப்தியும்

காந்திஜி அவர்கள் *30.12.1948* இல் மாலை ஐந்து மணிக்கு 20 நிமிடங்களுக்கு கொலை செய்யப்பட்டார். பிர்லா ஹவுஸ் என்ற மாளிகை யின் முன் வைத்து, அவரது மாலை நேரப் பிரார்த் தனையில் கலந்துகொள்ள வந்த மக்கள் அவரது உடலைச் சூழ்ந்து கொண்டார்கள் என்ற செய்தி இந்தியாவின் கடைசி ஆங்கிலேயே அதிகாரி மௌவுண்ட் பேட்டனுக்கு சென்றது. அவர் அரசு மாளிகையில் இருந்தார்.

சற்றும் தாமதிக்காமல் பிர்லா ஹவுஸ்—க்கு வந்தார். காந்திஜியின் உடலுக்குப் பக்கத்தில் வந்தார். அங்கே ஒருவர் தன்னை மறந்து கொலை செய்தவர் ஒரு முஸ்லிம் என கத்திக் கொண்டி ருந்தார்.

அவருடைய சட்டையைப் பிடித்து இழுத்தார் மௌவுண்ட் பேட்டன். முட்டாளே (காந்தி ஜியை) கொலை செய்தவன் முஸ்லிம் என்று உனக்கு எப்படித் தெரியும்? எனக் கேட்டார். இதனை அவர் தாழ்வான குரலில் கேட்கவில்லை. உரத்த குரலிலேயே கேட்டார். அவன் பதில்

சொல்லத் தெரியாமல் விழிபிதுங்கி நின்றான். உடனேயே தன்னுடைய குரலை எப்போதுமில்லாத அளவுக்கு உயர்த்தி கொலைகாரன் ஓர் இந்து என உரக்கக் கத்தினார்.

அதன்பின் ஆல் இந்தியா ரேடியோ என்ற வானொலியை அழைத்து காந்திஜி கொலைப் பற்றிய செய்தியை, சற்று தாமதமாக அறிவிக்கலாம் எனக் கூறினார்.

நாடெங்கும் உள்ள இராணுவத்தையும் காவல் துறையையும் உஷார்ப்படுத்தினார். பின்னர் வானொலியில் படிக்கவிருக்கும் செய்தியை வாங்கிப் படித்துப் பார்த்தார். அதனை சீர் செய்து கொடுத்தார். இத்தனையையும் சிலமணித் துளிக்குள் முடித்தார்.

மாலை 6 மணிக்கு வழக்கம்போல் வானொலி செய்தியைக் கேட்க நாடெங்கும் வானொலிகளின் முன் குழுமிய மக்களுக்கு இப்படிச் செய்தி சொல்லப்பட்டது.

“மகாத்மா காந்தி புதுடெல்லியில் இன்று மாலை ஐந்து மணி, 20 நிமிடங்களுக்குக் கொலை செய்யப்பட்டார். அவரை கொலை செய்தவர் ஒரு இந்து” FREEDOM AT MIDNIGHT : P.555

முஸ்லிம்களுக்கெதிரான ஒரு பெரும் கொலை பாதகம் தவிர்க்கப்பட்டது. வரலாற்றில் அவர்கள் ஒரு பெரும் பழி இழிவிலிருந்து தப்பித்தார்கள்.

நேருவும், வல்லபாய் பட்டேலும் பிர்லா ஹவுஸ் வந்தார்கள். நேரு கண்களில் வழிந்த கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் அழுது கொண்டே இருந்தார்.

வல்லபாய் பட்டேல் காந்திஜியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார். அந்தப் பார்வைக்கு என்ன பொருள் எனத் தெரியாது. ஆனால் இன்றைக்கு காந்தியைக் கொலை செய்த கோட்சேயின் வாரிசுகள் அவருக்கு ஒரு சிலையை சைனாவில் செய்து கொண்டு வந்து வைத்தபோதுதான் மக்கள் புரிந்திருப்பார்கள்.

## காந்திஜியின் கொலையில் இன்றளவும் விடைதேடும் வினாக்கள்

காந்திஜியைக் கொலை செய்ய நாதூராம் கோட்சேவும், அப்தியும், புனாவிலிருந்து பம்பாயிக்கும், பின்னர் அங்கிருந்து டெல்லிக்கும் 17, ஜனவரி 1948 இல் புறப்பட்டார்கள். இவர்கள் இருவரும் ஏர் இந்தியா லிமிடெட் DC 3 என்ற விமானத்தில் புறப்பட்டார்கள். அன்றே டெல்லி வந்து சேர்ந்தார்கள். இவர்கள் இருவரும் 1945 ஆம் ஆண்டிலிருந்தே உளவுத்துறையின் கண்காணிப்பில் இருந்தார்கள். அப்படி இருந்தும் அவர்கள் டெல்லியில் தங்கி காந்திஜியின் கொலையைத் திட்டமிடவும், அதை எளிதாக நிறைவேற்றவும் எப்படி முடிந்தது. உளவுத் துறையினர் எல்லாம் நடக்கட்டும் என வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தார்களா?

அதேநாளில் அதாவது கோட்சேவும் ஆப்தியும் விமானத்தில் புறப்பட்ட 17ஆம் நாள் ஜனவரி 1948இல், கோட்சேயின் சகோதரன் கோபால் கோட்சே, ரெயில் மூலம் டெல்லிக்கு “காந்தியைக் கொலை செய்யப் போகின்றேன், எனக்கூறிக் கொண்டேதான் ரெயிலில் புறப்பட்டார். இன்னும் பல ஆர்.எஸ்.எஸ். காரர்களும் ரெயிலில் டெல்லி வந்தார்கள். அத்தனை பேரும் காந்திஜியை கொலை செய்யப் போகின்றோம் எனச் சொல்லிக் கொண்டேதான் வந்தார்கள்.



உளவுத்துறை என்ன செய்து கொண்டிருந்தது. நாராயணன் ஆப்தியைப் பொறுத்தவரை, அவனைப்பற்றி உளவுத்துறையிடமிருந்த கோப்பில் POTENTIALLY DANGEROUS என்ற குறிப்பு இருந்தது. 1947 லேயே.

ஆகவே பிரபல்யங்களின் கொலையில், உளவுத்துறையின் ஒப்புதல் இருக்கும் அல்லது அதன் கையிலிருக்கும் என்ற உண்மையே இங்கேயும் மேலோங்குகின்றது.

காந்திஜி கொலை செய்யப்பட்ட அந்த நொடியே, அங்கே ஒருவர் காந்திஜிக்கு மிகவும்

அருகாமையில் நின்றவர் “காந்தி ஜியைக் கொலை செய்தவன் ஒரு முஸ்லிம்”எனஉரக்கக்கத்தினான். அவன் உண்மையான கொலை யாளியை மறைக்கவும், நாடெங் கும் அப்பாவி முஸ்லிம்களைக் கொலை செய்யவுமே, அவ்வாறு கத்தினான் மௌவுண்ட் பேட்டன் அவர்கள் உடனேயே எதிர் கத்துதல் கத்தவில்லை என் றால், உண்மை சிலகாலமாவது மறைக்கப்பட்டிருக்கும். நாடெங் கும் முஸ்லிம்கள் குற்றப்பட்டு நின்றிருப்பார்கள். அந்தக் குற்ற வுணர்விலிருந்து மீளுவதற்கு முன்னாலேயே அவர்களின் பல லட்சம் அல்லது பல ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டிருப் பார்கள்.

> “ நீதிபதி J.L.கபுர் தனது அறிக்கையை சமர்ப் பித்தபின், இப்படி ஆதங்கப்பட்டார். இந்தியாவின் தேசிய கதாநாயகர் "NATIONAL HERO" கொலை செய்யப்பட்ட விவகாரம், அதற்குரிய முக்கியத்துவத் தோடும், அக்கறை யோடும் அணுகப் படவில்லை. ”
>
> "Freedom Midnight, Page 527

சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் 1947இல் தான் ஆறு லட்சம் முஸ்லிம்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். – இனி காந்திஜியைக் கொலை செய்தவன் ஒரு முஸ்லிம் எனக் கத்தியவன், அதே கோட்சே கும்பலைச் சார்ந்தவனாகத் தானிருப்பான். அவனை ஏன் கைது செய்ய வில்லை. அவனை விசாரிக்க வில்லை.

நாதுராம் – கோட்சே, கோபால் கோட்சே ஆகியோர் காந்திஜியைக் கொலை செய்ய திட்டம்தீட்டிடும்போது சாவர்க்கர், காந்தி, நேரு சுஹ்ரவார்த்தி மூன்று பேரையும் முடித்துவிட விரும்புகின்றார் என “பாட்ஜி” என்ற கூட்டுக் கொலைகாரனிடம் சொன்னார். - SAVARKAR WANTED GANDHI, NEHRU, AND SUHRA WARDY 'FINISHED OFF' - எனக் கூறித்தான் தங்கள் திட்டத்தைத் தொடங்கினார்கள். இது ஊரறிந்த உண்மை அன்று. இருந்தும், காந்தியின் பாதுகாப்பு வேண்டுமென்றே கைவிடப்பட்டது. "FREEDON AT MIDNIGHT" PAG. 486.

சாவர்கர் இந்தச் சதியிலிருந்தும் அதன் கொலை வழக்கிலும் விடுவிக்கப்பட்டார். இதில் வல்லபாயின் கைகள் அழுத்தமாகவே இருந்தது.

நேரு இந்த விவகாரத்தில் உண்மையைக் கண்டறிய முயற்சி செய்த போதெல்லாம் பட்டேல் வழிமறித்து உண்மைகள் வெளியே வந்து விடாமல் தடுத்தார். அதனால்தான் காந்திஜி கொலையின் உண்மையான சதிகாரர்கள் பலர் சாவர்க்கர் உட்பட தப்பித்தார். இது இன்ற ளவும் வெளிவரவில்லை.

பட்டேல் இந்துத்துவவாதி களுக்கு பாதுகாப்பாகவும், முஸ் லிம்களுக்கு எதிராகவும் கால மெல்லாம் பணியாற்றினார். நாடு இன்று பாசிசத்தின் கோரப் பிடியில் சிக்கித் தவிப்பதற்கு இதுவே காரணம்.

ஆனால், இன்று சாவர்க்கர், பட்டேல், கோட்சே ஆகியோர் இன்று தேசிய கதாநாயகர் களாகப் போற்றப்படுகின்றனர்

பட்டேல் இந்துத்துவவாதி களுக்குச் செய்த பெரிய உதவி, அவர் வாழ்ந்த காலம்வரை டிசம்பர் 15, 1950இல் காந்தி கொலையைப் பற்றிய ஓர் விசாரணை மேற்கொள்ள உருப்படி யான முயற்சி எதையும் எடுக்கவில்லை. அவர் நாடு சுதந்திரமடைந்த 15, ஆகஸ்ட் 1947 முதல் 1950 வரை உள்துறை அமைச்சராகவும், நேருவுக்கு துணை பிரதமராகவுமிருந்தார்.

காந்திஜி கொலையைப் பற்றி விசாரிக்க, அதில் நடந்த சதி (CONSPIRALY) யைப் பற்றி விசாரிக்க, ஓர் விசாரணை கமிஷன் 1960 – இல் தான் போடப்பட்டது. அந்நிலையில் கொலை யோடு சம்மந்தப்பட்ட பலர் இறந்து போயி ருந்தார்கள். அந்தக்கொலையைவிசாரித்துகுற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்த காவல்துறை அதிகாரிகள் பலர் இறந்து போயிருந்தார்கள். அதைப்போலவே பல உள்துறை அதிகாரிகளும் இறந்து போயிருந்தார்கள்.

காந்தி கொலையைப் பற்றி விசாரிக்க, அதில் நடந்த ஆர்.எஸ்.எஸ். சதியை அம்பலப்படுத்திட 1960 ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி J.L. KAPUR - கபுர் என்பவர் நியமிக்கப்பட்டார்.

காந்திஜியை கொலை செய்ய நடந்த 6 தாக்குதல் முயற்சியில், ஒன்று ஜனவரி 10, 1948–இல் நடந்தது. அதாவது காந்திஜியைக்



கோபால் கோட்சே

சுட்டுக் கொலை செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு நடைபெற்றது. அதுமுதல் இந்த சங்கப் பரிவாரக் கும்பல் மீதான கண்காணிப்பு பலப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். காந்தியைக் கொலை செய்வதற்கு முன் இவர் சிறை பிடிக்கப் பட்டிருக்க வேண்டும். இது ஏன் நடக்கவில்லை என்பதை ஆய்வு செய்ய முனைந்த நீதிபதி கபுர் அவர்கள் திரும்பும் திசையெல்லாம், திகைப்பையே சந்தித்தார்கள்.

கடைசியாக தனது ஆய்வறிக்கையை 30, செப்டம்பர் 1969இல் சமர்ப்பித்தார். அப்போது அதை கண்டுகொள்வார் யாருமில்லை. ஏனெனில் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் காங்கிரஸுக்குள் தாராளமாகவும், ஏராளமாகவும் ஊடுருவி இருந்தார்கள்.

நீதிபதி கபுர் தனது அறிக்கையை சமர்ப் பித்தபின், இப்படி ஆதங்கப்பட்டார். இந்தியாவின் தேசிய கதாநாயகர் "NATIONAL HERO" கொலை செய்யப்பட்ட விவகாரம், அதற்குரிய முக்கியத்துவத்தோடும், அக்கறையோடும் அணுகப்படவில்லை. "FREEDOM MIDNIGHT, PAGE 527

## கோட்சேயின் குடும்பம் இன்று செய்து கொண்டிருப்பதென்ன..?

நாதுராம் கோட்சேதான் காந்தியைக் கொலை செய்தான் என்ற உண்மையை ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஒரு காலக்கட்டம் வரை ஒத்துக்கொள்ளவில்லை. அவர்களின் மொத்த கவனமும் முஸ்லிம்களின் மேல் பழியைப் போடுவதிலேயே இருந்தது.

பின்னர் நாதுராம் கோட்சே ஒரு பெரும் ஹீரோவாகத் தன்னைக் காட்டிக் கொண்டு தான்தான் காந்திஜியைக் கொலை செய்ததாக ஒத்துக்கொண்டார்.

அதன்பின்னர் அவர், ஆர்.எஸ்.எஸ்.காரர் அல்ல என வாதிட தொடங்கினார்கள். ஆனால், 1965இல் நாதுராம் கோட்சேயின் சகோதரர் கோபால் கோட்சே பத்திரிகைக்கு பல பேட்டி களைத் தந்தார். அதில் நாதுராம் கோட்சேயும், நானும் என் குடும்பத்தவர்களும் ஆர்.எஸ். எஸ். அமைப்பைச் சார்ந்தவர்கள்தாம் என்பதை வெளிப்படுத்தினார். ஆதாரங்களைத் தந்தார்.

1996 இல் வெளிவந்த 'நடு இரவில் சுதந்திரம், FREEDOM AT MIDNIGHT - என்ற நூல் ஆணித்தரமான ஆதாரங்கள் வழி நாதுராம் கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ். காரர் என்பதைத் தெளிவுபடுத்தியது. நாதுராம் கோட்சேயை பற்றிக் குறிப்பிடும்போது அந்த நூலின் ஆசிரியர் லாரி காலிங்ஸ் மற்றும் டாமினிக் லேப்பேரி இப்படிக் குறிப்பிட்டார்கள்.

“அவன் நாதுராம் கோட்சே கோயிலுக்குப் போவதில்லை. ஆர்.எஸ்.எஸ். தலைமையகந்தான் இவனுக்குக்கோயில்.” FREEDOM AT MIDNIGHT, PAGE 458.

“அதேபோல் இந்தியா விடுதலையடைந்த நாளில், அவன் தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தச் செல்லவில்லை. மாறாக ஹிட்லரின் சுவஸ்திக்கா இலட்சினை பதித்த ஆர்.எஸ்.எஸ்.–இன் பதாகை ஒன்றுக்கு வணக்கம் செலுத்தச் சென்றான்.” FREEDOM AT MIDNIGHT, PAGE - 451.

1948 இல் காந்திஜியைக் கொலை செய்த தோடு இவர்கள் தங்கள் தீவிரவாதத்தை நிறுத் திட வில்லை.

இவர்கள் செய்த கொலைகள் இந்து ராஷ்டிராவாக இந்தியாவை மாற்றிடத்தான். இந்த லட்சியத்தை கொலைகளைச் செய்தும் – தீவிரவாத செயல்களைச் செய்தும், இந்து ராஷ்டிராவுக்கு வழிவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கோபால் கோட்சே–இன் மனைவி பிந்துத் தாய் கோட்சே, 1948 ஆண்டு ஜனவரி 17 ஆம் நாள் பூனா ரெயில், தன் கணவனுக்கு வழியனுப்பி வைக்கும் போது, செல்லுங்கள் காந்தியை கொல் லுங்கள், என்னைப் பற்றியோ குழந்தைகளைப் பற்றியோ கவலைப்படாதீர்கள். நான் என்னை

சமாளித்துக் கொள்வேன் என்றார்.

அதேபோல் சமாளித்துக் கொண்டார். ஆனால், அவர்களின் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாமே சவார்க்கரின் குடும்பத்தாரோடுதான் இருந்தது.

கோபால் கோட்சேவின் மகள் ஹிமானி சாவர்க்கர்தான் பூனாவை மையப்படுத்தி அபிநவ் பாரத் என்ற அமைப்பை தொடங்கி தொடர்ந்து கொலைகளை நிகழ்த்தி வருகின்றார்கள்.

அபிநவ் பாரத் என்ற அமைப்பின் பார்வையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தீவிரவாதம் போதாது. அவர்களால் நாட்டை இந்து ராஷ்டிராவாக ஆக்கிட இயலாது. அதற்கு இன்னும் வேகமான தீவிரவாதம் தேவைப்படுகின்றது. அதனால் அதற்கென ஒரு புது அமைப்பை உருவாக்கிட வேண்டும். அதுதான் அபிநவ்பாரத்.

இந்த அமைப்பு நாட்டில் பல பெரிய குண்டு வெடிப்புகளை நடத்தி, அந்தப் பழியை முஸ்லிம்களின் மேல் போடுவதில் வெற்றி கண்டுள்ளது. ஆனால், அதன் முழு வடிவம், 26/11 என அடையாளப்படுத்தப்படும், 2008, நவம்பர், 26 ஆம் நாள் நடந்த மும்பை தாக்குதலுக்குப் பின்னர்தான் தெரியவந்தது.

இந்த அமைப்பில் நம் நாட்டின் இராணுவத்தில் பணியாற்றும் பல உயர் அதிகாரிகள் பொறுப்பு வகிக்கின்றார்கள்.

அவர்களில் கர்னல் பிரசாந்த் புரோகித் என்பவர் முக்கியமனாவர். இவர் நமது இராணுவத்தில் M.I. என்ற இராணுவ உளவுத் துறையின் அதிகாரியாகப் பணியாற்றுகின்றார்.

ஆனால், அபிநவ்பாரத் அமைப்பின் செயலாளராகவும் பணியாற்றினார். இவர் பதவியிலிருந்த போது இராணுவத்திலிருந்து, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருள்களைக் கடத்திவந்து நாட்டில் நடந்தபலகுண்டுவெடிப்புகளை நடத்தி இருக்கின்றார்.

இவற்றையெல்லாம் நாம், மூன்று நூல்கள் வழி வெளியிட்டிருக்கின்றோம்.

1) அவை, கர்கரேயைக் கொலை செய்தது யார்..? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் ;

2) 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?, கசாப்–ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? இதில்முதன் இரண்டு நூல்கள், எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கம்.

ஆங்கிலத்தில் அந்த நூலின் பெயர்


1) WHO KILLED KARKARE, THE REAL FACE OF TERRORIUSM IN INDIA

2) 26/11 WHY JUDICIARY ALSO FAILED.

மூன்றாவது நூல் இந்த இரண்டு நூல்களையும் அடியொற்றி மு. குலாம் முஹம்மத் தமிழில் எழுதியது.

அபிநவ் பாரத் என்ற கோட்சேயின் குடும்பத்தினர் நடத்தி வரும் அமைப்பின் நோக்கங்கள் எல்லாம் 26/11 தாக்குதல் என்ற மும்பைத் தாக்குதலின் போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஓர் எதிர் மனுவில் வருகின்றது.

“நாட்டில் பல குண்டு வெடிப்புகளை நடத்திடும் திட்டம் ஒன்று அபிநவ் பாரத் அமைப்பால் தீட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் ஹிமானி சாவர்க்கர் அவர்கள்தாம் அபிநவ் பாரத் அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்









பட்டார். இதனை 26/11, மும்பைத் தாக்குதல், அதற்கு முன்னர் மாலேகான் என்னுமிடத்தில் முஸ்லிம்கள் அதிகமாகக் கூடும் பள்ளிவாசலில் நடந்த குண்டு வெடிப்பு. இவற்றின் புலனாய்வில் ஹிமானி சாவர்க்கர் கொடுத்த வாக்குமூலம் ஊர்ஜிதப்படுத்தும் (ஹிமானி சாவர்களின் வாக்குமூலம் பக்கம் எண். 19,20)

மாலேகான் குண்டு வெடிப்பு சதித் திட்டத்தை நிறைவேற்றிய சதித் திட்டத்தில் அவரும் பங்கேற்றார்.

அத்தோடு அவர்கள் திட்டம் நிற்கவில்லை. அபிநவ் பாரத்–ஐ சார்ந்தவர்கள், இந்தியாவில் நடப்பிலிருக்கும், அரசியல் சாசனச் சட்டத்தை தூக்கி வீசிவிட்டு அந்த இடத்தில் இந்துத்துவ சட்டம் ஒன்றைக் கொண்டு வந்திட வேண்டும் என்று திட்டம் தீட்டி, இந்துத்துவ அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்றை எழுதியும் விட்டார்கள். அதனை பலமுறை விவாதித்தும் விட்டார்கள்.

இந்து ராஷ்ட்ரத்திற்கான கொடி ஒன்று வடிவமைக்கப்பட்டது.

இந்து ராஷ்டிரா ஒன்று நிறுவப்பட்டது. அதற்கு ஓர் தலைமையகம் இஸ்ரேலில் அமைத்திட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இதற்காக இஸ்ரேலை தொடர்புகொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.


அதேபோல் இஸ்ரேல் தலைமையகத்திலிருந்து இந்து ராஷ்டிரா 'M-EXICE' இந்தியாவுக்கு வெளியே இருந்துகொண்டு இந்து ராஷ்டிராவை இந்தியாவில் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கான மந்திரி சபையும் ஒன்றும் அமைக்கப்பட்டது.

இஸ்ரேலிலிருந்து கொண்டு இந்தியாவில் இரத்த புரட்சி மூலம் ஒரு இந்து ராஷ்டிராவை அமைப்பது என்றும் முடிவு செய்ய வேண்டியது. இதற்கான ஆள் பலத்தை அபிநவ் பாரத் தரும் என்றும், அதற்கான பயிற்சிகளையும், ஆயுதங்களையும் இஸ்ரேல் தந்திட வேண்டும் என்றும் இஸ்ரேலிடம் கேட்பது என முடிவு செய்யப்பட்டது.

ஒரு இரத்தப் புரட்சி நடந்திடும்போது, முஸ்லிம்களும், கிருஸ்தவர்களும் அதிகமாகக் கொலை செய்யப்படுவார்கள். இதனால் சர்வ தேச அமைப்புகள் – நாடுகள் இவை தலையிட முற்படும். அதையும் இஸ்ரேல், அமெரிக்கா மீது தனக்கிருக்கும் உறவைப் பயன்படுத்தி தடுத்திட வேண்டும்.

இந்த உறுதிகளையெல்லாம் இஸ்ரேல் சென்று கலோனல் பிரசாந்த் புரோகித் பெற்று வர வேண்டும்.

கலோனல் பிரசாந்த் புரோகித், இஸ்ரேல் சென்றார். இவற்றையெல்லாம் இஸ்ரேலின் பிரதிநிதிகளுடன் பேசினார். அவர்கள் இந்து ராஷ்டிராவுக்கான அலுவலகம் தருவதாக ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அங்கே இந்து ராஷ்டிராவுக்கான கொடியை பறக்கவிட

முடியாது. காரணம் இந்தியாவிலிருக்கும் காங்கிரஸ் அரசுடனான உறவைக் கெடுக்கும்.

அதேபோல், ஆயுதங்களும், பயிற்சிகளையும் தருவோம். ஆனால், அதற்கான (பணத்தை) கட்டணத்தைத் தந்திட வேண்டும் என்றார்கள். அதனையும் அபிநவ் பாரத் சார்பாக சென்ற கலோனல் புரோகித் ஒத்துக் கொண்டார்.

இந்து ராஷ்டிர இஸ்ரேலை தலைமையமாகக் கொண்டு இயங்கிடத் தொடங்கியது. இஸ்ரேல் தரும் ஆயுதங்களுக்காகவும், கட்டணங்களுக் காகவும் செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு நிதி திரட்டவும் தொடங்கினார்கள். அதற்காக நேபாளி மன்னரிடம் நிதியும் கோரப்பட்டது.

இந்த நிலையில் நாங்கள் குண்டு வெடிப்புகளை நடத்திடும் தகுதியைப் பெற்ற வர்கள் என்பதைக் காட்டிடவே, மாலேகானில் செப்டம்பர் 29, ஆம் நாள் குண்டு வெடிப்புகளை நடத்தினார்கள். இஸ்ரேலும் அமோதித்தது.

இந்தத் திட்டங்களை ஹேமந்த் கர்கரே என்ற மராட்டிய காவல்துறை அதிகாரி, புரோகித்– இன் லேப்டாப்பிலிருந்து எடுத்து, மராட்டிய நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். அந்தக் குற்றப் பத்திரிகையில் இருந்து எடுக்கப்பட்டதே இந்தத் தகவல்கள் – இதனை இன்னும் பல தகவல்களையும், வேர்கள் பதிப்பகம் – புரோகித் –இன் லேப்டாப்பில் இருந்தது என்ன? நீதிமன்ற ஆவணங்களிலிருந்து என்ற தலைப்பில் புத்தமாகவும் தந்திருக்கின்றோம்.

இதனை அபிநவ் பாரத் – இன் தலைவி தனது வாக்கு மூலத்திலும் ஒப்புக்கொண்டுள்ளார். இந்தப் பதிவுகள், மராட்டிய காவல்துறையின் இன்னொரு அதிகாரி எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய

WHO KILLED KARKARE என்ற நூலிலும் *26/11* WHY JUDICIARY ALSO FAILED என்ற நூலில் தந்துள்ளார்.

**ஆக, காந்திஜி கொலையில் தொடங்கி அபிநவ் பாரத் தனது தீவிர செயல்களைத் தொடர்ந்து கொண்டேதானிருக்கிறது.**

**வாசகர்கள் மேலும் விளக்கம் பெற நாம் மேலே குறிப்பிட்டுள்ள நூல்களைப் படிக்கவும். இவை அனைத்தும் உச்ச நீதிமன்றத்தில் மும்பை உயர் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டவை**

- MGM






# கம்யூனிஸ்ட் கட்சியில் சாதிய ஆதிக்கம்

# இஸ்லாத்தை ஏற்ற பெண்

கேரளாவை சேர்ந்த தலித் பெண் அதுவும் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகிய ஒரு தலித் பெண் கம்யூனிஸ்ட் கட்சியில் சாதி ரீதியான ஏற்றத்தாழ்வுகள் இருக்கிறது என்று கூறி சாதிக்கு தீர்வாக இஸ்லாத்தை ஏற்றிருக்கிறார்.

இஸ்லாத்தை ஏற்ற பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கைக்கு அதனை நேர்காணலாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

நான் ஒரு தலித் சமூகத்தை சார்ந்த பெண்ணாக இருந்து கம்யூனிஸ் கட்சியினரால் (கேரளா) கடைபிடிக்கும் சாதிய ஏற்றத்தாழ்வுகளை கேள்வி கேட்டதன் காரணமாகவே நிறைய தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டேன். இதனால் எனது சொந்த கிராமமான பாயனூரை விட்டே ஓடி வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டேன். அங்கிருந்து ஓடி வந்து கண்ணூர் மாவட்டம் கட்டம்பள்ளியில் வீடு எடுத்து தங்கிய பிறகும் எனக்கு அவர்களால் தொல்லை தொடர்ந்தது.

ஒரு ஆட்டோ ரிக்சாவை எனது தொழிலுக்காக நான் வாங்கினேன். அது 2005ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களால் எரிக்கப்பட்டது.

கேரளாவில் இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் தலைவர் உம்மன் சாண்டி ஆட்சியில் எனக்கு 5 செண்ட் நிலமும் அதில் வீடு கட்டுவதற்காக 5 லட்ச ரூபாயும் வழங்கப்பட்டது. ஆனால் 2016ல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்ததும் அந்த உத்தரவு திரும்ப பெறப்பட்டது. இப்போதும் உயர் நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடந்து வருகிறது.

இப்படி சந்திரலேகா தொடர்ச்சியாக நெடுங்காலமாக கம்யூனிஸ்ட் கட்சியால் தொல்லைக்கு உள்ளாவதாக தெரிவித்திருக்கிறார்.

இந்த சாதிய வன்கொடுமைகளுக்கு தீர்வாக நான் இஸ்லாத்தை தேர்ந்தெடுத்தேன். அதற்காக இஸ்லாத்தை பற்றி கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது. இறுதியாக தற்போது இஸ்லாத்தை ஏற்றிருப்பதை வெளிப்படையாக அறிவிக்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இந்திய மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சி எதிர்கட்சி என அனைத்திலுமே சாதிய ஏற்றத்தாழ்வுகளும், கொடுமைகளும் நடந்து கொண்டே தான் இருக்கின்றன. இதற்கு எந்த கட்சிகளும் விதிவிலக்கல்ல.

இந்த சாதிய கட்டமைப்பில் இருந்து வெளிவர அம்பேத்கர் அவர்களும் பெரியார் அவர்களும் கூறியது போல இந்து மதத்தில் இருந்து வெளியேறுவது கட்டாயமாக இருக்கிறது. அதில் இன்றைக்கு முழுமையாக சாதியிலிருந்து விடுபட இஸ்லாம் ஒன்றே ஒற்றை தீர்வாக முன் வைக்கப்படுகிறது. ஏற்றுக் கொள்ளப் படுகிறது.

அபூ சித்திக்.

ஆதாரங்கள்:

http://muslimmirror.com/eng/dalit-woman-in-kerala-to-embrace-islam-after-facing-torture-for-speaking-against-casteist-communist-party/

https://www.google.com/amp/s/www.newindianexpress.com/states/kerala/2020/nov/18/tired-of-casteist-cpm-dalit-woman-in-kerala-to-seek-solace-in-islam-2224682.amp



## உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 3

# கோவிட்-19 ம் உச்ச நீதிமன்றமும்

சாதாரண காலங்களில் அரசியல் அமைப்புச் சட்டம் முக்கியமானது என சவாசமாகப் பேசிக் கொள்ளலாம். ஆனால், நெருக்கடியான நேரங்களில், அரசியல் நிர்ணயச்சட்டம், அதனை செயல்படுத்திடும், வழிமுறைகள், அதனை செயல்படுத்திட வேண்டிய உச்ச நீதிமன்றத்தின் அக்கறை அனைத்தும் சோதிக்கப்படுகின்றன.

இந்த சோதனைகளில் நமது உச்ச நீதிமன்றம் வெகுவாகவே தோற்றுப்போய்விட்டது.

கோவிட்–19 காலத்தில் உச்ச நீதிமன்றத்தின் வீழ்ச்சி அவமானமானது.

– இந்த ஆய்வு, நமது உச்ச நீதிமன்றம் எப்படி ஓர் அவவேளையில் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தையும், மக்களையும் ஒட்டுமொத்தமாகக் காலை வாரிவிட்டது என்பதைப் பற்றியதே!

உச்ச நீதிமன்றத்திற்கு வரும் சில வழக்குகள் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளை கொண்டனவாக இருக்கக் கூடாது என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். அதாவது நீதிபதிகள் முழு விஞ்ஞானிகளாகவோ, மருத்துவர்களாகவோ, இருக்க வேண்டாம் என யாரும் எதிர்பார்த்திட வேண்டாம்.

ஆனால், அவர்கள் – நீதிபதிகள் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றியும் – அரசியல் சாசனத்தின் வழிகாட்டும் கொள்கைகளைப் பற்றியும் அவற்றின் நோக்கங்களைப் பற்றியும் நன்றாக தெரிந்திருக்க வேண்டும். இந்த விவகாரங்களில் நீதிபதிகள், அதிகாரவர்க்கத்தின் அபிலாஷைகளை மனதில் வைத்துக்கொண்டு, மேலே சொன்னவற்றில் சாதாரண அறிவுகூட இல்லாதவர்களைப் போல் நடந்து கொள்வதும் எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.

அதிகாரத்தின் ஆசைகளை நிறைவேற்றாமல், நீதியின் பக்கம் நிலைத்து நிற்கும் நீதிபதிகளை அதிரடியாக இடமாற்றம் செய்வது.

கஷ்மீர் மக்களை கண்ணை மூடிக்கொண்டு கைது செய்து, அவர்கள் மீது "ஊபா"' UAPA -ஐ பாய்ச்சியது. அந்த மக்களையும், மக்கள் தலைவர்களையும், கண்ணுக்குத் தெரியாத இடத்தில் அடைத்து வைப்பது, அது குறித்த வந்த மனுக்களையும் ஊதாசீனம் செய்வது.

குடிஉரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த் தவர்களை துவம்சம் பண்ணிய போது, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொள்வது ஆகியவை சில மனசாட்சியுள்ள வழக்கறிஞர்களை வழக்கறி ஞர் தொழில் மீதே விரக்திக் கொள்ளச் செய்தது. இவர்கள், மனித உரிமைகளுக்காக வாதாடி, வழக்காடி வந்தவர்கள்.



*கஷ்மீர் மக்கள் விவகாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆள்கொணர் மனுக்கள்கையாளப்பட்ட விதம், நமது அரசியல் சாசனத்தின் முக்கியமான பிரிவுகளை கொலை செய்துவிட்டது. உச்ச நீதிமன்றம் எனலாம். அதேபோல் அரசியல் கட்சிகள் அரசியல் கடன் பத்திரங்களைக் கொடுத்து பணம் வாங்கலாம் என்ற மோடி அரசின் விதிகள், விசித்திரமானவை. பெரிய, பெரிய கம்பெனிகளிடமிருந்து பணங்களைப் பிடுங்கிட இந்தக் கடன் பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.*

*இப்படிப் பிடுங்கப்பட்ட பணங்களைப் பற்றிய எந்த விவரத்தையும் வெளியே சொல்லிட வேண்டாம். யாரிடமும் கணக்குக் காட்டிட வேண்டாம் என்ற விதிகள் முறையற்றவை என நீதிமன்றம் வந்தபோது உச்ச நீதிமன்றம் அதனை கண்டு கொள்ளாமல் மறுத்தது. காரணம் ஆளும் பாரதீய ஜனதா கட்சி தான் அதிகமான நிதியைத் திரட்டி இருந்தது. இந்தக் கடன் பத்திரங்கள் வழி!*

*உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஒரு பெண் ஊழியரிடம் தகாத முறையில் நடந்து கொண்டார். அந்தப் பெண் ஊழியர் புகார் செய்தார். அதனை அதே உச்ச நீதிமன்ற நீதிபதியே விசாரிப்பேன். தீர்ப்பு வழங்குவேன் என அடம்பிடித்தார். இந்தக் கேடுகெட்ட நிலையை என்னவென்பது.*

*தரத்தில் தாழ்ச்சியும், வீழ்ச்சியும் என்பது நமது நீதித்துறைக்கே பொருத்தமான சொல்லாட்சியாக மாறிவிட்டது. உச்ச நீதிமன்றம் எவ்வழியில் நடந்து கொள்கின்றதோ அவ்வழியே உயர் நீதிமன்றங்களும் நடந்து கொள்கின்றன. உச்ச நீதிமன்றம் வீழும்போது உயர் நீதி மன்றங்களும் வீழுகின்றன.*

> “ மீண்டும் ஏப்ரல் 13, ஆம் தேதி உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அதில் அசாம் தடுப்புக் காவல் முகாம்களிலிருப்பவர்களை உடனேயே விடுதலை செய்திட வேண்டும். குறிப்பாக மூன்றாண்டுகள் தடுப்புக்காவல் முகாம் களில் இருந்தவர்கள் உடனேயே விடுதலை செய்யப்பட வேண்டும். அதேபோல் இரண்டாடுகள் தடுப்புக்காவல் முகாம் களில் இருந்தவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும், எனவும் உத்தரவிட்டது.
>
> இத்தோடு நில்லாமல், இன்னொருபடி மேலே போய், தடுப்புக்காவல் முகாம்களிலிருந்து விடுபட இருந்த பிணை தொகையை ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் 5000 ஐந்தாயிரமாக குறைந்தது. ”

*உண்மையைச் சொன்னால் பல உயர் நீதிமன்றங்கள், அதிகார வர்க்கம் அநியாயமான சட்டங்களும், அவற்றைச் செயல்படுத்தும் திட்டங்களோடும், வந்த போது, அவற்றை எதிர்த்து நீதி பக்கம்நின்றிருக்கின்றன. நாட்டில் ஒரளவுக்காவது நீதி நிலைக்க, இந்த உயர் நீதிமன்றங்கள் செய்த சேவையைக் கூட உச்ச நீதிமன்றம் செய்திடவில்லை.*

*ஒருவாதத்திற்காக “CAA” என்ற குடியுரிமைத் திருத்தச் சட்டமும், UAPA என்ற சட்டங்களுக்கும் புறம்பான செயல்களின் தடுப்புச் சட்டம், என்ன அரசியல் விவகாரம்எனவைத்துக்கொள்வோம். கோவிட்–19 காலத்தில் நடந்தவை எல்லாம், அடிப்படை உரிமைகள், அடிப்படை வாழ்வாதாரம், அடித்தட்டு மக்களின்உயிர் இவற்றோடு சம்மந்தப்பட்டவை. ஏராளமாக குடிமக்கள் – ஏழை பாழைகள் – வாழ்வா – சாவா என வினாடிகளைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த காலம்.*

*எமது கணிப்பில் CAA, UAPA யும் அரசியல் விவகாரமல்ல. அவை ஒரு சமுதாயத்தை பூண்டோடு ஒழிக்கத் திட்டங்கள்.*

*அதேபோல் புலம் பெயர்ந்து வாழ்க்கையைத் தேடிவந்த மக்களின் வாடிய வாழ்க்கையோடு சம்மந்தப்பட்டப் பிரச்சினை. இவையெல்லாம் அரசியல் பிரச்*



சினைகள் அல்ல, அடிப்படை உரிமையோடு சம்மந்தப்பட்டப் பிரச்சினை. அதாவது இவை ஏனைய எல்லா பிரச்சினைகளை விடவும், நெருக்கடிகளை விடவும், அவசரமானவை. நெருக்கடியானவை.

இந்த நெருக்கடிகளிலெல்லாம் உச்ச நீதிமன்றம், அந்தப் பக்கமே திரும்பிப் பார்த்திட வில்லை.

கோவிட்−19 என்பது ஒரு பேரிடர். அது எல்லோரையும் பாதித்தது. ஏழைகளைப் பொறுத்தவரை மரணிப்பதைத் தவிர வேறு வழிகள் எதுவுமில்லை ; என்ற நிலை.

குறிப்பாக வறுமைக் கோட்டுக்கீழே வாழ்ந்த வர்கள். புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், குழந்தைகள் பெண்கள், தலீத்கள், ஆதிவாசிகள், பாலியல் தொழிலாளர்கள் Transgenters - திருநங்கையர்கள். இவர்கள்தாம் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் தாம் மக்கள் தொகையிடில் 70% சதவிகிதத்தினர். இந்த மக்கள் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கும்போது உச்ச நீதிமன்றத்தால் எதுவும் செய்திட இயல வில்லை என்றால், இந்த உச்ச நீதிமன்றம் இருந்தென்ன? இறந்தென்ன?

உச்ச நீதிமன்றத்திற்கு சில வரம்புகள் இருக்கலாம். ஆனால், பட்டினியால் செத்து சுண்ணாம்பான இந்த மக்களின் சார்பில் சமர்ப் பிக்கப்பட்ட வழக்குகளை ஏறெடுத்தும் பார்த் திட மறுப்பது, எந்த விதத்தில் நியாயமானது.

உண்மையைச் சொன்னால், உச்ச நீதிமன்றம் − நீதித்துறை அதிகார வர்க்கத்தின் முன் முற்ற ாதக சரணடைந்துவிட்டது. இது வெறும் நீதிதுறையின் தோல்வி மட்டுமல்ல, நீதிபதிகளின் தனிப்பட்ட தோல்வியும் கூட.

## உச்ச நீதிமன்றம் மனது வைத்தால்

கொரோனா பெருந்தொற்று எதிர்பார்க்காத ஒன்றுதான். உச்ச நீதிமன்றம் தொடக்கக் காலத்தில், இந்த விவகாரத்தில் சற்று தயக்கம் காட்டியது நியாயப்படுத்தலாம். இதுகூட சரியில்லை.

இங்கேயும், உச்ச நீதிமன்றத்திற்கு எதுவும் தெரியாது எனச் சொல்லிடுவதற்கு எதுவு மில்லை. காரணம், மார்ச்சு 22, 2020ல் மொத்த ஊரடங்கிற்கு முன்னால், மார்ச்சு, 16 ஆம் நாள் (2020) உச்ச நீதிமன்றம் தானாகவே முன்வந்து ஓர் நடவடிக்கையை எடுத்தது. அது, சிறையிலி ருக்கும் கைதிகளின் பாதுகாப்பிற்காக, பிணையில் விட வேண்டியவர்களே விடலாம். சிறையில் கைதிகள் அடர்த்தியாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுகுறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை உச்ச நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், எல்லா மாநில நீதிமன்றங்களுக்கும் ஆணையிட்டது.

மார்ச்சு மாதம் 23 ஆம் நாள் (2020) அன்று இன்னொரு ஆணையைப் பிறப்பித்தது. இது எல்லா மாநிலங்களுக்கும், யூனியன் பிரதேசங் களுக்கும், இன்னொரு ஆணையைப் பிறப் பித்தது.

அதில், விசாரணை − கைதிகளையும், தண்டனை கைதிகளையும் விடுதலை செய்ய உயர் அதிகாரம் கொண்ட ஓர் குழுவை High Powered Committee. அமைத்து ஆலோசனைப் பெற வேண்டும். அதன்படி விடுதலை செய்திட வேண்டும் என்றும் கூறியது.

இந்த உயர் அதிகாரம் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன. விசாரணை கைதிகளும், சிலபல தண்டனைக் கைதிகளும், விடுதலை செய்யப்பட்டனர். இதை மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் உடனேயே செய்தன. காரணம் உச்ச நீதிமன்றத்திலிருந்து மீண்டும் அழுத்தங்கள் வரும் என்ற அச்சத்தால். பல நூறு கைதிகள் விடுதலையடைந்தார்கள்.

யார், யாரை விடுதலை செய்தார்கள். அதில் நடந்த பாரபட்சங்கள் என்னென்ன என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால், ஒரு நீதிமன்றம் − உச்ச நீதிமன்றம் − மனதுமு வைத்தால் என்ன செய்யலாம் என்பதற்கான உன்னதமான எடுத்துக்காட்டு இது.

மீண்டும் ஏப்ரல் 13, ஆம் தேதி உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அதில் அசாம் தடுப்புக் காவல் முகாம்களிலிருப்பவர்களை உடனேயே விடுதலை செய்திட வேண்டும். குறிப் பாக மூன்றாண்டுகள் தடுப்புக்காவல் முகாம் களில் இருந்தவர்கள் உடனேயே விடுதலை




செய்யப்பட வேண்டும். அதேபோல் இரண்டாண்டுகள் தடுப்புக்காவல் முகாம்களில் இருந்தவர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும், எனவும் உத்தரவிட்டது.

இத்தோடு நில்லாமல், இன்னொருபடி மேலே போய், தடுப்புக்காவல் முகாம்களிலிருந்து விடுபட இருந்த பிணை தொகையை ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் 5000 ஐந்தாயிரமாக குறைந்தது.

இவையெல்லாம் பராட்டத்தக்கச்செயல்கள். மத்திய அரசு எதிர்த்தபோதும் உச்ச நீதிமன்றம் இவற்றைச் செய்தது தோல்விகள். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் இந்தப் பொறுப்புணர்வு தொடரவில்லை. நாட்கள் நகர நகர கோவிட்–19 என்ற கொரனோ பெருந்தொற்றின் கோரப்பிடியில் அடித்தட்டு மக்கள் அகப்பட்டு, நொந்தார்கள். நெழிந்தார்கள். செத்தார்கள். ஆனால், உச்ச நீதிமன்றம் தன் கடமையில் தவறிக் கொண்டே இருந்தது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், குழந்தைகள், குழந்தைகளைவயிற்றிலே சுமந்த கர்ப்பிணிப் பெண்கள், வயோதிகர்கள் இவர்களெல்லாம் ஆயிரம் மைல்களை நடந்தே, நடந்துசென்று கொண்டிருந்தார்கள். இந்த நெடும் பயணத்தில் பலர் மடிந்தார்கள். இவர்கள் குறித்த மனுக்கள் உச்ச நீதிமன்றம் வந்தபோது, உச்ச நீதிமன்றம் இந்த மனுக்களைக் கண்டுகொள்ளவில்லை. (மோடி அரசுக்கு அஞ்சி) இது வெறும் கால தாமதமான நீதி அல்ல, நிச்சயமாக இது உச்ச நீதிமன்றம் முற்றத்தைத் தன் பொறுப்பைத் தட்டிக் கழித்த ஒன்று.

கைதிகள் விவகாரத்தை சுவோ மோஹோ (SUO MOHO)வாக, தானாக முன் வந்து, எந்த மனுவுமில்லாமல், உச்ச நீதிமன்றம், கையிலெடுக்க முடியும் என்றால், ஏன் நடைபாதைகளில் நடந்து கொண்டிருந்த விவகாரத்தை தானே முன்வந்து எடுக்கக் கூடாது.


கைதிகள் விவாகரத்தைக் கையிலே எடுத்தபோது, லாக்டவுன் (lock down) என்ற – ஊரடங்குப் பிறப்பிக்கப்படவில்லை என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். ஆனால், பட்டினப் பட்டாளமாக அடித்தட்டு மக்கள் புலம் பெயர்ந்து வயிறு பிழைக்க வந்தவர்கள்,

கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் விவகாரத்தை ஊரடங்கின் உச்ச கட்டத்தில் சுவோ மோஹா–வாக தானாக முன் வந்து எடுத்திருக்க வேண்டும், பொறுப்புள்ள நீதிமன்றம்.

ஆனால், என்ன நடந்தது?

உச்ச நீதிமன்றத்தில் அடுக்கடுக்காக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரும், அது கண்டு கொள்ளவில்லை. இதைவிட மனிதாபிமான மற்றதொரு செயல் அவனியில் இருக்கவியலாது.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.
– மிகிர்தேசாய் Senior Council in Bombay High Court.






# முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகள்

## அக்டோபர்-டிசம்பர், 2020

கடந்த நவம்பர் மாதம் சர்வதேச இனப்படுகொலைகளுக்கு எதிரான அமைப்பு இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிரான இனப் படுகொலைகள் நடக்கவிருக்கிறது என்று எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

இந்த எச்சரிக்கை மிகச் சாதரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால். தொடர்ச்சியாக நாட்டில் நடக்கும் செய்திகளை கவனிப்போருக்கு இதன் ஆபத்து தெளிவாக புரியும். இந்தியாவில், யூதர்கள் எப்படி இனப்படுகொலை நடப்பதற்கு முன்னால் ஜென்மனியில் நடத்தப்பட்டார்களோ அதே நிலைதான் தற்போது முஸ்லிம்களுக்கும் நடக்கிறது.

நாம் கடந்த மூன்று மாதத்தில் முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட அநீதிகளின் தொகுப்புகளை இங்கே தருகிறோம். இதன் முடிவில் இங்கே இந்தியாவில் முஸ்லிம்களுக்கெதிரானஇனப் படுகொலைகளுக்கான தயாரிப்பு நடந்துகொண்டிருக்கிறது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

### அக்டோபர்

அக்டோபர் 1 – டெல்லி கலவர வழக்கில் கைது செய்யப்பட்ட நூர் முஹம்மதுக்கு டெல்லியில் உள்ள கர்கர்தும்மா நீதிமன்றம் சில கட்டுப்பாடுகளுடன் பிணை வழங்கியது. 20000 ரூபாய் முன்பணமும் அதே போல அவரது செல்போனில் ஆரோக்யா சேது என்ற செயலியை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் நீதிமன்றம் கூறிய ஆரோக்யா சேது என்ற செயலி மத்திய அரசுடையது அல்ல. அது யாரால் உருவாக்கப்பட்டது என்பதே மத்திய அரசுக்கு தெரியாது என்று நீதிமன்றத்தில் பதிலத்திருக்கிறது.

ஆரோக்ய சேது உளவு பார்க்க பயன்படுத்தப் படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கும் போது அதனை உருவாக்கியவர்கள் யார் என்றே தெரியாத போது நீதிமன்றம் அதனை பதிவிறக்கம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடுவது எப்படி நீதமாக இருக்க முடியும்?.

அக்டோபர் 1 – டெல்லி கலவரத்தில் முஸ்லிம்கள் கொடூரமாக கொல்லப்பட்டனர். ஆனால் இந்த கலவரத்திற்கும் முஸ்லிம்கள் தான் காரணம் என்பது போல காவல்துறையினர் சித்தரித்தனர். ஆனால், இதனை கள ஆய்வு செய்து கேரவன் பத்திரிக்கை டெல்லி கலவரத்திற்கு காரணம் ஆர்.எஸ்.எஸ் – பாஜக கும்பல் தான். இதற்கு காவல்துறை மொத்தமாக துணை போனது என்றும் வெளிக்கொண்டு வந்தது.

இதனை தமிழில் தீக்கதிர் தினசரி பத்திரிக்கை தொடராக வெளியிட்டார்கள்.

அக்டோபர் 2 – சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதால் ஆதரவற்றகுழந்தைகளை பராமரிக்கும் இரண்டு முஸ்லிம்கள் நடத்தும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள் பிஜேபி அரசின் அதிகார வட்டத்தால் பணமுறை கேடு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சோதனைக் குள்ளாக்கப்பட்டது.

அக்டோபர் 2 – கிருஷ்ணர் பிறந்த இடம் காசி மற்றும் மதுராவில் இருக்கிறது. அதனால் அங்கிருக்கும் பள்ளிவாசலை இந்துக்களிடம் தர வேண்டும் என்று இந்துத்துவ கும்பல் கோரிக்கையும் அதை தொடர்ந்து வழக்கும் தொடுத்துள்ளனர்.

அக்டோபர் 2 – 2014ல் தீவிரவாத வழக்கில் அன்சாரி UAPA 43(D)(5) கீழ் கைது செய்யப்பட்டார், இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை. காவலர்கள் பதிவு செய்த முதற் தகவல் அறிக்கையில் இவரது பெயர் இல்லை. குற்றப் பத்திரிக்கையில் தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று கூறி ஆறு வருடங்களுக்கு பிறகு பிணை கிடைத்திருக்கிறது.

UAPA 43(D)(5) என்ற பிரிவின் கீழ் ஒருவர் கைது செய்யப்படுவாரானால் அவரை எத்துனை ஆண்டுகள் வேண்டுமானாலும் விசாரணை முடியும் வரை சிறையில் வைக்கலாம். ஆறு வருடத்திற்கு பிறகே பிணை கொடுத்தற்கு நீதிபதியின் நேர்மையே காரணம் என்று வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள்.

அக்டோபர் 3 – உபி, உத்தரகாண்ட், மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு கவர்னராக இருந்த அஜீஸ் குரேஷி சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதால் உபி காவல்துறை கைது நடவடிக்கைக்கான சம்மனை அனுப்பியது.

அக்டோபர் 4 – காஷ்மீரில் ஜூலை 18ம் தேதி மூன்று இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்ற செய்தி வெளியிடப்பட்டது. எப்போதும் போல அடையாளம் தெரியாதவாறு இந்த எண்கவுண்டர் சம்பவம் முடிந்து சடலத்தை புதைத்துவிட்டார்கள். ஆனால், இந்த சம்பவம் தொடர்பான வெளியான போட்டக்கள் மூலம் குடும்பத்தார்களுக்கு தெரிந்து தங்கள் குழந்தைகள் அப்பாவிகள் என்று கோரிக்கை எழுப்பினர்.

இது தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடக்க இறுதியாக சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து பரிசோதனை செய்ததில் இது போலி எண்கவுண்டர் என தெரிய வந்தது.

ஆனாலும் இந்த சம்பவத்திற்கு எந்தெந்த இராணுவ அதிகாரிகள் காரணம்! என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? என்ற கேள்விக்கு பதில் இல்லை.

அக்டோபர் 5 – டெல்லி கலவர வழக்கில் ஏர்டல் சிம் விற்கும் பைசல் கான் தீவிரவாத வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். பைசல் கான் மீது இருந்த பகையை மனதில் கொண்டு இதனை காவல்துறை செய்திருப்பதாக குற்றம் சாட்டுகிறார்கள் குடும்பத்தார்.

அதுமட்டுமல்லாமல் பைசல் கான் பற்றி காவல்துறை இரண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். இரண்டிலும் ஒன்றுக்கொன்று முரணான தகவலை பதிவு செய்திருக்கிறார்கள் காவலர்கள்.

பைசல் கானின் உறவினர் சொல்லும் போது, பைசல் கான் ஏர்டல் நிறுவத்தின் சிம் விற்பனை செய்கிறார். தனது டார்கெட் முடிப்பதற்காக சில சிம்களை உரிய ஆவணம் இல்லாமல் விற்பனை செய்வான். இது இயல்பாக சிம் விற்கும் அனைவரும் செய்யக்கூடியது. ஆனால், இந்த சிறிய குற்றத்தை காரணம் காட்டி தீவிரவாத வழக்கில் கைது செய்வது அநியாயம் என்கின்றனர்.

காவலர்கள் முதலில் குற்றப்பத்திரிக்கையில் பைசல் கான் கொடுத்த சிம்மை வைத்து உமர் காலித், தன்ஹா இன்னும் சில மாணவர்கள் இணைந்து ஜனவரி 8ம் தேதி ஒன்று சேர்ந்து அமெரிக்க அதிபர் இந்தியா வரும் போது

கலவரம் நிகழ்த்த சதித்திட்டம் தீட்டினார்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், ஊட கங்கள் ஜனவரி 13ம் தேதி தான் அமெரிக்க அதிபர் இந்தியா வரும் தகவலே வெளியிடப் பட்டது என்று வெளிக்கொண்டு வந்தார்கள். காவல்துறையினர் நடத்திய நாடகம் வெளி வந்த வுடன் அடுத்த குற்றப்பத்திரிக்கையில் தேதியை மாற்றி அமைத்தார்கள் காவலர்கள்.

அக்டோபர் 7 – பாலிவுட்டில் மிர்சாபூர் என்ற திரைப்படம் பிரபலமானது. இதில் முன்னணி நடிகராக நடித்த அலி பைசல் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததால் அவரை குறிப்பிட்டு பல்வேறு பொய்ச்செய்திகள் பரப்பப்பட்டன, டெல்லி கலவரத்தில் இந்துக்



களை கொல்வதற்கு ஆதரவுக்குரல் கொடுத்தார் என பல்வேறு பொய்க்குற்றச்சாட்டுகள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டன.

இந்தியாவில் பிரபலமாக இருக்கும் முஸ்லிம் கள் மீது தொடர்ச்சியாக பொய்ச்செய்திகள் பரப்பப்பட்டு அவர்கள் மீது வெறுப்புணர்வு உருவாக்குவதற்கான வேலையை சங்பரிவார அமைப்புகள் செய்து வருகிறார்கள்.

அக்டோபர் 8 – உச்சநீதிமன்றம் சாஹின் பாக் போன்ற போராடங்களை அனுமதிக்க முடியாது. அது பயணிகளுக்கு இடையூறாக இருக்கிறது என்று கூறியது.

இந்த தீர்ப்பை விமர்சித்து பல சமூக ஆர்வலர்கள் குரல் எழுப்பினார்கள். இந்தியாவில் நடந்த சாஹின் பாக் முழுக்க பயணிகளுக்கு முடிந்த வகையில் இடையூறு இல்லாமல் மாற்றுப்பாதையை ஏற்படுத்தி விட்டு நடந்த போராட்டம்.

இப்படியான அமைதி போராட்டங்களுக்கு அனுமதியில்லை என்ற சாஹின் பாக் தீர்ப்பு அமைதியான போராட்டங்களை நடத்த விடா மல் கட்டுப்படுத்தவே உதவும் என்றும் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

அக்டோபர் 8 –

உபி மாநிலத்தில் ஹத்ராஸ் மாவட்டத்தில் ஒரு தலித் பெண் கற்பழித்து கொல்லப்பட்ட விவகாரம் நாடு முழுக்க பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியது.

இந்த செய்தியை சேகரிக்க சென்ற பத்திரிக்கையாளர் சித்திக்காப்பான் என்றசெய்தி யாளர், கார் ஓட்டுனரான ஆலம், ஆதிக்கூர் ரஹ்மான் மற்றும் மன்சூர் அஹமது ஆகிய நான்கு பேரை கைது செய்த உபி காவல்துறை தீவிரவாதிகள் என்று கைது செய்து ஆள் தூக்கி சட்டமான தேசத் துரோகச் சட்டம் மற்றும் UAPA சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

பத்திரிக்கையாளரான சித்திக்காப்பான் தன் வேலையை செய்ய சென்றதற்கு எதற்கு தேசத் துரோக வழக்கு என்று சமூக ஆர்வலர்கள் கண்டனங்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த கைதுக்கு எதிராக பத்திரிக்கையாளர்கள் சங்கங்கள் கண்டனக் குரல் எழுப்பினாலும் எந்த நன்மையும் ஏற்படவில்லை.

அக்டோபர் 8 – ராஜஸ்தானில் உள்ள தோல்பூர் பகுதியில் பஞ்சாயத்து தேர்தல் நடந்துள்ளது. அதில் தோல்வியை தழுவியவர் தன் தோல்விக்கு காரணம் முஸ்லிம்கள் தான் என்று முஸ்லிம்களுக்கு சொந்தமான 20 கடை களுக்கு தீ வைத்து எரித்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் கைது செய்யப்படவில்லை.

அக்டோபர் 8 – டெல்லியில் உணவு விற்பனை செய்யும் ஒரு வியாபாரி சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் பங்கெடுத்தவர்களுக்கு இரண்டு முறை உணவு வழங்கியிருக்கிறார்.


இவரை காவலர்கள் மிரட்டி நீ, நாங்கள் கைக்காட்டும் நபர்களால் தான் கலவரம் நடந்தது என்று சாட்சி கூற வேண்டும் மறுத்தால் உன்னை

யும் வழக்கில் சேர்த்து உன் குழந்தைகளின் எதிர்காலத்தை பாழாக்கி விடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள்.

முதலில் மறுத்தவர் வேறு வழியில்லாமல் போலீசார் என்ன கூறினார்களோ அப்படியே வாக்குமூலமும் கொடுத்திருக்கிறார். வாக்கு மூலம் கொடுத்து முடித்த பிறகு தன் குற்ற உணர் வின் காரணமாக உண்மையை ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அக்டோபர் 9 – டெல்லி கலவரத்தில் தன் கையை இழந்த அக்ரம் கானுக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீடு தொகை தரப்படும் என டெல்லி கெஜ்ரிவால் அரசு கூறியிருந்தது, ஆனால், 10 மாதங்கள் கடந்தும் வெறும் 20,000 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டிருக் கிறது.

அக்டோபர் 10 – சீக்கியர் ஒருவர் தன் மகளின் கால்களில் டர்பனை கழட்டி வைத்து அழுவது போன்ற ஒரு வீடியோவை போட்டு சீக்கிய தந்தை தன் மகள் லவ் ஜிஹாத் மூலம் கவரப்பட்டு இருப்பதாகவும் அதனால் இவர் கதறி அழுவதாகவும் குறிப் பிட்டு சமூக வலைத் தளங்களில் சங் பரிவார அமைப்புகள் பரப்பினார்கள்.




உண்மையில், வீடியோவில் இருப் பது போல அவரது பெண் முஸ்லிம் ஒருவரை திருமணம் செய்யவில்லை மாறாக அவரது சமூகத்தில் உள்ள ஒரு பையனேயே திருமணம் செய்துள்ளார்கள். இதனையே அவரது தந்தை எதிர்த்தார். இதற்கும் லவ் ஜிஹாதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அக்டோபர் 10 – டெல்லியில் பிப்ரவரி மாதம் நடைபெற்ற கலவரத்தில் 53 உயிர்கள் கொல்லப்பட்டது. அதில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள். இந்த கலவரத்திற்கும் முஸ்லிம்கள் தான் குற்றவாளிகளாக கைது செய்யப்பட்டி ருக்கிறார்கள்.

இந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்றும் இழப்பீடோ நிவாரணமோ வழங்கப்படவில்லை.

அதுபோல கலவரத்தில் ஜெய் ஸ்ரீ ராம் கூறி காலில் சுடப்பட்டு நடக்க முடியாமல் கஷ்டப் படும் சல்மானுக்கு 10 மாதங்கள் கடந்தும் காலில் இருந்து குண்டு இன்னும் அகற்றப்படவில்லை.

அக்டோபர் 10 – இந்தியாவில் முஸ்லிம்கள் அனைத்து உரிமைகளுடன் வாழ்கிறார்கள். இங்கே முஸ்லிம்கள் இருக்க வேண்டுமென்றால் இந்துக்களின் மேன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் பேசினார்.

அக்டோபர் 10 – மதுரை மாவட்டத்தில் உள்ளநெல்பேட்டைபகுதியில்75% முஸ்லிம்கள் தான் வசிக்கிறார்கள். இந்த காரணத்தினாலேயே முஸ்லிம்கள் காவல்துறையினால் கொடுமைக்கு உள்ளாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் தொடர்கிறது. பாஸ்போர்ட் கூட இப்பகுதி மக்களுக்கு கிடைப்பதில்லை என்று ஆய்வு செய்து நக்கீரன் பத்திரிக்கையில் அறிக்கை வெளிவந்திருந்தது.

அக்டோபர் 11 மத்தியபிரதேசம் ராஜ்தர்க் மாவட்டத்தில் நான்கு முஸ்லிம்கள் முஹர்ரம் பண்டிகை கொண்டாடியதற்காக அவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் போடப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் எந்த விசாரணையும் இல்லா மல் 12 மாதங்கள் சிறையில் வைக்க முடியும்.

கைது செய்யப்பட்ட ஒருவரின் சகோதரன் மத்திய பிரதேச நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கில் நீதிமன்றம் கடுமையாக மாவட்ட நிர்வாகத்தை எச்சரித்ததோடு 10,000 ரூபாய் இழப்பீடு ஒவ்வொருவருக்கும் வழங்க வேண்டும் என உத்தரவிட்டது.

அக்டோபர் 11 – உபிமாநிலத்தில்மொத்தம் 139 பேர் மீது இந்த வருடத்தில் மட்டும்

தேசியபாதுகாப்பு சட்டம் போடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். 139 பேரில் 79 பேர் மாட்டை அறுத்த குற்றச் சாட்டில் இந்த ஆள்தூக்கி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதில் பெரும்பாலா னோர் முஸ்லிம்கள்.

ஒரு தனி மனிதரால் இந்தியாவிற்கு ஆபத்து என்று முடிவு செய்யும்போதேதேசிய பாது காப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர். இச்சட்டத்தின்கீழ் 12 மாதங்கள் எந்த விசாரணையும் இன்றி சிறைப்படுத்த முடியும்.

இதன்படி மாட்டின் பெயரைக்கொண்டு முஸ்லிம்களை போலியாக சிறைகளுக்கு பின்னால் உபி அரசு தள்ளுகிறது என பலர் குற்றம் சாட்டுகிறார்கள்.

அக்டோபர் 13 – OTT இணையத்தளத்தில் வெளிவந்து மிகவும் பிரபலமடைந்த படம் மிர்சாபுர். இந்த படத்தில் அலி பைசல் என்ற நடிகர் நடித்திருக்கிறார். இவர் பிஜேபி கொண்டு வந்த சிஏஏ சட்டத்திற்கு எதிராக பேசியதால் இவரது படத்தை இனி திரையிடக்கூடாது என இந்துத்துவ பாசிச சக்திகள் நெருக்கடிகளை ஏற்படுத்தினர்.

அக்டோபர் 15 – சிஏஏ சட்டத்தின் காரண மாக இந்தியாவில் 107வது மரணம் அஸ்ஸமில் நடந்தது.

மூசா முண்டால் வெளிநாட்டவர் என்று அறிவிக்கப்பட்டவுடன் தன் உரிமையை நிலை நாட்ட நீதிமன்றத்தை அணுகியிருக்கிறார். பெரும் தொகை செலவு செய்தும் நீதிமன்றம் இறுதியில் வெளிநாட்டவர் என்று அறிவித்து விட்டது. இந்நிலையில் மூசாவின் வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்திற்கு செல்லலாம் ஆனால் மனு போடுவதற்கே 80,000 ரூபாய் ஆகும் என்றிருக்கிறார். பொருளாதாரமும் இல்லாமல் வீட்டிற்கு அருகே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் மூசா.

மூசாவின் தந்தை வோயெஜ் முண்டால் மற்றும் சித்தப்பா பொயெஜ் முண்டால் பெயர்கள் இந்தியாவில் 1965 மற்றும் 1970களில் வாக்காளர் பட்டியலில் இருக்கிறது. இத்தனைக் கும் மூசாவின் சித்தப்பா மகனுக்கு குடியுரிமை கிடைத்து விட்டது. ஆனால் மூசாவிற்கு கிடைக்க வில்லை.

மூசா இருக்கும் பகுதியான காயஸ்தா பாராவில் இன்னும் 42 பேர் வெளிநாட்டவர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் களின் நிலையும் இப்படி மாறி விடுமோ என்று பயமாக இருக்கிறது என்று கூறுகிறார் அவ்வூரின் படித்த இளைஞர் ஷாஜகான் அலி.

அக்டோபர் 19 – ஆசிப் இக்பால் தன்ஹா என்ற ஜாமியா மில்லியா கல்லூரியில் படித்து வரும் மாணவர் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதால் டெல்லி கலவரத்தில் தொடர்ப்பிருப்பதாக கூறி தீவிரவாத தொடர்பு என்று கூறி கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அக்டோபர் 20 – உத்திர பிரதேசத்தின் காசியாபாத் நகரில் பாஜக எம்.எல்.ஏ நவராத்திரி அன்று இந்துக்கள் கறி சாப்பிடக்கூடாது என்று கூறி அடாவடியாக சட்டவிரோத முறையில் அனைத்து இறைச்சி கடைகளையும் அடைக்க உத்தரவிட்டார். அங்கு இறைச்சி வியாபாரம் செய்பவர்களில் 70% பேர் முஸ்லிம்கள்.

அக்டோபர் 20 – ஒரு பெண்ணை கத்தியால் வாலிபன் ஒருவன் குத்தும் காணொளியை போட்டு முஸ்லிம் ஆண்கள் இந்து பெண்களை இப்படி தான் லவ் ஜிஹாத் செய்கிறார்கள் என்ற குற்றசாட்டுடன் பல்வேறு இந்துத்துவ ஆதவாளர்கள் பரப்பிக்கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இந்த சம்பவம் 2019ம் ஆண்டு நடந்தது. அரவிந்த் குமார் என்ற இந்து இளைஞன் தன் காதலி மற்றொரு நபருடன் பேசினார் என்ற சந்தேகத்தில் கத்தியால் குத்தியதால் சிறைக்கு சென்றார், இந்த சம்பவத்தையே முஸ்லிம் பெயர் குறிப்பிட்டு மதக் கண்ணோட் டதுடன் இணையங்களில் பரப்பபட்டது.

அக்டோபர் 20 – டெல்லி கலவர வழக்கில் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட தால் ஜாமியா கல்லூரியின் மாணவர் குல்ஃபிசா பாத்திமா கைது செய்யப்பட்டிருக்கிறார்,

பாத்திமா தன்னை காவலர்கள் ஆபாச மாகவும் மதத்தை கூறியும் துன்புறுத்துவதாக நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

அக்டோபர் 21 – உத்திரபிரதேசத்தில் செப்டம்பர் மாதம் அல்தாப் ஆலம் என்ற கார் ஓட்டுனரை வழியில் நிறுத்தி இந்துத்துவ தீவிர வாத கும்பல் ஜெய் ஸ்ரீ ராம் சொல் என்று கூறி

அடித்து கொண்றனர். இது முடிந்து ஒன்றரை மாதம் கடந்தும் கூட இந்த வழக்கில் காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஆலமின் மகன் முஹம்மது சபிர் பேட்டி யளித்திருக்கிறார்.

அக்டோபர் 21 – மத்திய பிரதேச பாஜக அமைச்சர் உஷா தாகூர் அனைத்து தீவிரவாதி களும் மதரசாக்களில் உருவாக்கப்படுகிறார்கள். அதனால் மாநிலத்தில் உள்ள மதரசாக்களை மூட வேண்டும் என்று வெளிப்படையாக பேசினார்.

அக்டோபர் 23 – இந்தியாவிற்கும் பாகிஸ் தானிற்கும் 1965ல் நடந்த போரில் இந்தியாவிற் காக போரில் ஈடுபட்ட முஸ்லிம் இராணுவ குழு பாகிஸ்தானுக்கு எதிராக போரிட மாட்டோம் என்று பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்ட தாக ஒரு பொய்த்தகவலை இந்துத்துவாவினர் பெரிதளவில் பரபினர்.

இராணுவத்தில் இதுவரை அப்படியொரு குழு இல்லை. இது இராணுவத்திற்குள் மதப் பிரிவை உருவாக்க திட்டமிட்டு பரப்பப் படுகிறது என்று முன்னாள் இராணுவ வீரர்கள் 120 பேர் குடியரசு தலைவருக்கு கடிதம் எழுதினார்கள்.

அக்டோபர் 23 – இந்தியாவில் மருத்துவ நுழைவுத்தேர்வானநீட் தேர்வில்சோயப்அப்தாப் என்ற முஸ்லிம் மாணவன் முதலிடத்தில் தேர் ச்சி பெற்றான். உடனே முஸ்லிம்கள் நீட் ஜிகாத் செய் கிறார்கள் என்று பொய்ச் செய்திகள் பரப்பட்டது.

முதல் ஐந்து இடத்தில் முஸ்லிம்கள் தான் இருக்கிறார்கள் என்று பொய்யான ஐந்து முஸ்லிம் பெயர்களை போட்டு சமூக வலைத்தளங்களில் செய்திகளை பரப்பினார்கள் சங்கிகள்.

ஆனால், அது அத்தனையும் பொய்யானது. முதல் இடத்தை தவிர அடுத்த நான்கு இடத்தை யும் பிடித்தது இந்து மாணவர்கள் தாம். இப்படியான் சிறு விடயங்களிலும் முஸ்லிம் களுக்கெதிரான் வெறுப்புணர்வை அதிக மாக்கும் படி பொய்ச்செய்திகள் திட்டமிட்டு பரப்படுகின்றன.

அக்டோபர் 24 – டெல்லி கலவரத்தில் அஷ்வாக் என்ற முஸ்லிம் நபர் கொல்லப்பட்டார். இவரது கொலை வழக்கில் நான்கு இந்துக்களும், ஆரிஃப் என்ற ஒரு முஸ்லிம் இளைஞனும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஆரிஃப்க்கு கொல்லப்பட்டவர் மாமா முறை என்றாலும் கூட இந்த கொலை வழக்கில் ஆரிஃப் இணைக்கப்பட்டிருக்கிறார்.

நியூஸ் லாண்டரி என்ற ஊடக நிறுவனம் காவலர்கள் தரப்பில் கூறப்பட்ட தகவல்கள அனைத்தையும் வைத்து நடத்திய ஆய்வில் திட்டமிட்டு ஆரிஃப் கொலை குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருக்கிறார் என்று தெரிய வந்திருக்கிறது.

அக்டோபர் 24 – உபி மாநிலம் லக்னோவில் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட தற்காக 130 முஸ்லிம் பெண்கள் மீது சதித்திட்டம் உட்பட பல்வேறு கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அக்டோபர் 26 – ரஹிமுத்தின் என்ற முஸ்லிம் நபர் மாட்டை துன்புறுத்தியதாக கூறி ஒரு மாத கால சிறைக்கு பின் அலஹாபாத் உயர்நீதிமன் றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அப்போது உயர்நீதிமன்றம் காவலர்களை கடுமையாக சாடியது.

மாட்டை துன்புறுத்துதல் என்ற வழக்கில் கைது செய்யப்படுவரிடம் பறிமுதல் செய்யப் படும் இறைச்சி உண்மையில் மாட்டுடையது தானா என்று பெரும்பாலான நேரங்களில் ஆய்வு செய்யப்படாமல் சமர்பிக்கப்படுகிறது, இதனால் அப்பாவிகள் தண்டனைக்கு உள்ளாகிறார்கள்.

அதேபோல் குற்ற சம்பவம் (மாட்டை அறுக்கும் போது) பெரும்பாலும் கைது செய்யப் படுவதில்லை. பசுவதை சட்டம் தவறாக பயன் படுத்தப்படுகிறது என்று கூறியிருக்கிறது.

அக்டோபர் 26 – உத்திரபிரதேச மாநிலங் களவை உறுப்பினர் சாக்சி மஹராஜ் முஸ்லிம் களுக்கு சலுகையும் இந்துக்களுக்கு அநீதியும் இழைக்கப்படுகிறது. கிராமங்களில் முஸ்லிம் களுக்கு அடக்கஸ்தலம் பெரிதாகவும் இந்துக் களுக்கு சிறியதாகவும் இருக்கிறது. அதனால் இனி மக்கள் தொகைக்கு ஏற்பவே அடக்கஸ்தலம் இருக்க வேண்டும் என்று பேசினார்.

இவரின் கூற்றின் ஒரு சதவீதம் கூட உண்மை இல்லையென்றாலும் இந்து முஸ்லிம் பிளவை ஏற்படுத்தும் நோக்கில் தொடர்ச்சியாக பேசி வருகிறார்.



அக்டோபர் 27 – தாஜ் மஹாலுக்குள் காவிக்கொடியுடன் வந்து வளாகத்தில் சிவனுக்கு வழிபாடு செலுத்தின இந்துத்துவ அமைப்பினர். தாஜ் மஹால் சிவன் கோவில் இந்துக்களுக்கு சொந்தமானது என கூறி இச்செயலை செய்தனர்.

அக்டோபர் 27 – குஜராத் மாநிலத்தை சேர்ந்த பில்கிஸ் பானு 2002 குஜராத் கலவரத்தில் தான் ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்த போது கொடூரமாக தாக்கப்பட்டார். உச்சநீதிமன்றம் குற்றவாளிகளை கண்டறியாமல் பில்கிஸ் பானுவுக்கு குஜராத் மாநில அரசு 50 லட்சம் ரூபாய் இழப்பீடு தொகையும் அரசு வேலையும் தர வேண்டும் என்று உத்தரவிட்டது.

ஆனால், குஜராத் மாநில பாஜக அரசு வெறும் 50 சதுர அடி உள்ள தோட்ட நிலத்தையும் ஒப்பந்த ஊழியர் அடிப்படையில் தினசரி சம்பளம் முறையில் வழங்கப்படும் அரசு வேலையையும் ஒதுக்கியிருக்கிறது. இதனை எதிர்த்து மீண்டும் உச்சநீதிமன்றம் சென்றிருக்கிறார் பில்கிஸ் பானு.

அக்டோபர் 28 – டெல்லி நீதிமன்றம் டெல்லி கலவர வழக்கில் கைது செய்யட்டுள்ள ஜாமியா கல்லூரி மாணவர் ஆசிப் தன்ஹாவின் பிணை மனுவை விசாரித்த போது பிணை வழங்க மறுத்து விட்டது.

ஆசிப்பின் வழக்கறிஞர் கலவரத்தில் ஈடுபட்டதற்கான எந்த ஆதாரமும் காவல்துறையிடம் இல்லை பிறகு எப்படி தீவிரவாத வழக்கில் கைது செய்யலாம் என்று கேள்வி எழுப்பிய போது சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதை குறிப்பிட்டு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக பேசுவது கூட தீவிரவாதம் தான் என்றார் நீதிபதி.

சிஏஏ எதிர்ப்பு போராட்டம் நாட்டிற்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் என்ற பிஜேபியின் அதே குரலை நீதிபதியும் பேசினார்.

அக்டோபர் 29 – டெல்லியின் சிறுபான்மை பிரிவின் முன்னாள் தலைவராக இருந்த ஜஃப்ருல் கான் அவர்களது வீட்டில் NIA அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

ஜஃபருல் இஸ்லாம் கான் தான் தலைவராக இருந்த போது டெல்லி கலவரத்தை ஆராய உண்மை கண்டறியும் குழுவை உருவாக்கி இந்துத்துவ கும்பல் நடத்திய படுகொலைகளை வெளிக்கொண்டு வந்தார்.

அக்டோபர் 30 – இந்தியாவில் மதரசாக்களில் பாலியல் ரீதியான துன்புறுத்துதல் பெண்களுக்கு நடக்கிறது என்று ஒரு ஆபாசமான வீடியோவை குறிப்பிட்டு இந்தியாவில் மதரசாக்கள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு பல்வேறு இந்துத்துவ வட்டாரங்கள் இணையத்தில் பரப்பின.

ஆனால், உண்மையில் அந்த வீடியோ பங்களாதேஷ் நாட்டில் ஒரு குறும்படத்திற்காக உருவாக்கப்பட்டது. இதனை தவறாக முஸ்லிம்களுக்கு எதிராக திரித்து செய்தி வெளியிட்டனர் இந்துத்துவ சக்திகள்.

அக்டோபர் 30 – டெல்லி கலவரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் டெல்லியில் அவர்கள் வசித்து வந்த சொந்த வீட்டையும் மிக குறைந்த விலையில் நஷ்டத்திற்கு விற்று விட்டு வேறு பகுதிக்கு நகர்ந்து செல்கிறார்கள்.

கலவரத்திற்கு பிறகு நாங்கள் (முஸ்லிம்கள்) வெளியில் வந்தாலே வேறு விதமாக பார்க்கிறார்கள். சிலர் வைரஸ் வருகிறது என்று சொல்கிறார்கள். அதனால் நாங்கள் மொத்தமாக நிரந்தரமாக சொந்த வீட்டை விற்று விட்டு வெளியேறுகிறோம் என்கிறார்கள் ஒரு குடும்பத்தினர்.

டெல்லியில் கலவரம் நடந்த சிவ நகர் பகுதியில் இந்த நிலை நீடித்தால் முஸ்லிம்களே இல்லாத நிலை உருவாகும் என்று வருத்தம் தெரிவிக்கிறார்கள் அப்பகுதியினர்.

## நவம்பர்

நவம்பர் 2 – ஆர்.எஸ்.எஸ் தலைவர்

கல்லாத்கா பிரபாகர் பொதுக்கூட்டத்தில் பேசும் போது கர்நாடகாவின் உல்லால் என்ற பகுதியை பாகிஸ்தானுடன் ஒப்பிட்டு அங்கே முஸ்லிம்கள் வளர்ந்து வருகிறார்கள். இது ஆபத்தானது என்று பேசினார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நவம்பர் 6 – பாஜகவின் அஸ்ஸாம் எம்.எல்.ஏ ஹிமாந்தா பாஷா AIDUF அமைப்பின் தலைவர் மௌலானா பஹ்ருத்தின் அஜ்மல் விமான நிலையத்திற்கு வரும் போது அவரது ஆதரவாளர்கள் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று கோசமிட்டார்கள் என்று போலி வீடியோவை வெளியிட்டார்.

ஆனால் இந்த செய்தியை பலர் தங்களில் முகநூலில் பரப்பினார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ், ஏசியா நெட் போன்ற செய்தி நிறுவனங்கள் கூட பரப்பினார்கள்.

உண்மையில் அந்த வீடியோவில் அஜ்மல் ஜிந்தாபாத் என்றே ஆதவாளர்கள் கூறினார்கள். அதனை மார்பிங் செய்து இந்துத்துவ கும்பல் பரப்பினார்கள்.

நவம்பர் 6 – மத்திய பிரதேசத்தில் இந்துத்துவ அமைப்புகள் முஸ்லிம்கள் தீபாவளி வெடிகளை விற்கக் கூடாது என்று மிரட்டி பல கடைகளை மூட வைத்தனர்.

வெடிகளில் தெய்வங்களின் படம் இருக்கக் கூடாது என்று கூறி முஸ்லிம்களின் கடைகளை மட்டும் மிரட்டி மூடினர்.

நவம்பர் 6 – அஸ்ஸாம் மாநிலத்தில் பாஜக ஆட்சியில் முக்கிய அமைச்சராக இருக்கும் ஹிமாந்த பாஸ் சர்மா பாஜக மீண்டுமொரு முறை ஆட்சிக்கு வரும் போது NRC மீண்டும் எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம்கள் குறைவாகவும் இந்துக்கள் அதிக மாகவும் NRC நடைமுறையில் வெளி நாட்ட வர்கள் என்று பட்டியல் வெளியாகிருப்பதால் இந்த NRC யை ஏற்க முடியாது என்று பல முறை பாஜகவினர் கூறி வந்தனர்.

அந்த வகையில் ஹிமாந்த் பாஸா முகலா யர்களை இன்னும் வெளியேற்றவில்லை என்று முஸ்லிம்களை குறிப்பிட்டு இவர்கள் முறை கேடு செய்து NRC பட்டியலுக்குள் வந்து விட்டார்கள். இப்பட்டியலில் உள்ளவர்களுக்கு மீண்டும் சோதனை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

நவம்பர் 9 – தீபக் சௌராசியா எனும் இந்தி ஊடக பத்திரியக்கையாளர் தான் நடத்தும் நிகழ்ச்சியில் முஸ்லிம்கள் மதமாற்ற ஜிஹாத் செய்கிறர்கள் என்று முஸ்லிம்கள் மீது வெறுப்பை பர்ப்புமாறு நிகழ்ச்சியை நடத்தினார்.

நவம்பர் 10 – அஸ்ஸாம் மாநிலத்தில் சவுக்கத் அலி என்ற முஸ்லிம் துணை காவல் கண்காணிப்பாளர் தன் பணி நேரத்தில் தலையில் குல்லா வைத்திருக்கும் படி போட்டோ வெளி யானதால் தற்கால பணி நீக்கம் செய்யப்பட்டார்.

நவம்பர் 11 – மௌலானா கலீமுத்தின் ஒரு வருடம் கழித்து நீதிமன்றத்தின் பிணையால் விடுதலையானார். கலீமுத்தின் அல் குவைதா இயக்கத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச் சாட்டில் UAPA பிரிவின் கீழ் கைது செய்யப் பட்டார். ஒரு வருடம் கழித்து அவர் மீது வைத்த குற்றச்சாட்டுக்கு எந்த வித ஆதாரங்களும் இல்லையென்று கூறி நீதிமன்றம் பிணை கொடுத்திருக்கிறது.

நவம்பர் 12 – பீகாரில் ஜாமுஆ என்ற கிராமத்தில் பாஜக தேர்தலில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியை கொண்டாடும் விதமாக அப் பகுதியில் இருக்கும் பள்ளிவாசலுக்குள் புகுந்து அனைத்தையும் இடித்து தொழுது கொண்டிருந்த ஐந்து பேரின் மீது கடுமையான தாக்குதல் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

நவம்பர் 12 – அமெரிக்காவில் செனட்டர் சபை கூடி இந்தியா உட்பட உலக நாடுகளில் முஸ்லிம்களுக்கெதிரான குற்றங்கள் அதிகரிக்க



பேஸ்புக் பயன்படுத்தப்படுகிறது. பேஸ்புக் நிறுவனமும் இதனை தடுக்கும் வேலைகளில் கவனம் செலுத்துவதில்லை.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக பொய்ச்செய்திகள் மூலமாக வெறுப்புணர்வை ஏற்படுத்த பேஸ்புக் மற்றும் வாட்சாப் ஒரு காரணியாக செயல்படுகிறது. இதனை முகநூல் நிர்வாகம் சரி செய்ய வேண்டும் என்று கோரிக்கையும் வைக்கப்பட்டது.

நவம்பர் 17 – இந்தியாவின் தேசிய மகளின் ஆணையத்தின் தற்போதய தலைவராக இருக்கும் ரேகா சர்மா இந்தியாவில் லவ் ஜிஹாத்தின் மூலம் பெண்கள் தொல்லைக்கு உள்ளாவதாக சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார். அதோடு அமைச்சரை சந்தித்தும் இது தொடர்பாக பேசியதாகவும் கூறினார்.

இதனையடுத்து லவ் ஜிஹாத் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களை பற்றி RTI போட்டு கேட்ட போது தேசிய மகளிர் ஆணையம் லவ் ஜிஹாத் மூலம் பாதிக்கப்பட்ட பெண்கள் என்று எந்த தகவலும் எங்களிடம் இல்லை என்று அதிகாரப்பூர்வமாக தெரிவித்தார்கள்.

தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவரான ரேகா சர்மா இந்துத்துவ சிந்தனை கொண்டவர். அதனால் தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகளை பகிர்ந்து வருகிறார்.

நவம்பர் 17 – பீகாரில் வைசாலி மாவட்டத்தில் குல்னாஸ் காத்துன் என்ற முஸ்லிம் பெண்மனி தன் ஆசைக்கு இணங்க மறுத்தற்காக இளைஞனால் உயிருடன் எரிக்கப்பட்டார்.

சதிஸ் என்ற இளைஞன் தொடர்ச்சியாக காதல் தொல்லை தரும் போது, தான் முஸ்லிம் நீ இந்து பெரிய பிரச்சனை வந்து விடும் என பல முறை எச்சரித்திருக்கிறார் குல்னாஸ்காத்துன். ஆனால், தன் விருப்பத்தை ஏற்றுக் கொள்ள வில்லை என தீ வைத்து விட்டார்.

பெண்ணின் மரணத்திற்கு நியாயமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குல்னாஸின் தாயார் போராடி வருகிறார்.

இதுவே ஒரு முஸ்லிம் இளைஞன் ஒரு இந்து பெண்ணிடம் நடந்திருந்தால் பெரும் இந்து – முஸ்லிம் கலவரத்தையே உருவாக்கியிருப்பார்கள் இந்துத்துவ சக்திகள்.

நவம்பர் 17 – உத்திரபிரதேச மாநிலத்தில் பஹ்ரைச் மாவட்டத்தில் 23 வயது முஸ்லிம் இளைஞன் பொதுவான பாதையில் சிறுநீர் கழித்து விட்டான் என்று கூறி ராம் மூரத், ஆத்மா ராம், ராம்பால், சநேகி மறும் மஞ்சீத் ஆகியோர் அடித்தே கொன்று விட்டனர்.

நவம்பர் 19 – அஸ்ஸாமில் நடைமுறைப் படுத்தப்பட்ட NRC முறையால் ஜப்பார் அலியின் குடும்பம் உணவுக்கு வழியில்லாமல் தற்கொலை செய்து கொள்ள தயாராக இருக்கிறது. ஜப்பார் அலியின் பெயர் 2019 இறுதியில் வெளியான NRC பட்டியலில் இல்லை. ஆனால் ஜப்பாரின் தந்தை ஜலீலுத்தின் செய்க்கின் பெயர் 1951க்கு பிறகு வெளியான அனைத்து வாக்காளர் பட்டியலிலும் உள்ளது.

இருந்தும் தந்தை இருந்த முகவரியும் தற்போதைய முகவரிக்கும் சரியான சான்று இல்லை என்று கூறி குடியுரிமை மறுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் ஒரு லட்சம் செலவு செய்தும் பலனில்லை.

சிறைக்கு அனுப்பபடுவோம் என்ற பயத்தில் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார் ஜப்பார் அலி. அவரது மனைவி ஹனிஃபா பேகம் வீட்டின் உணவுத்தேவைக்கு கூட வழியில்லாமல் தன் ஐந்து குழந்தைகளுடன் வாழ வழியற்று இருக்கிறார்.

நவம்பர் 19 – கணவனும் மனைவியும் சேர்ந்து ஜிம் ஒன்றில் நெருக்கமாக உடற்பயிற்சி செய்யும் வீடியோவை தவறாக இப்படித்தான் முஸ்லிம் ஆண்கள் ஜிம்மிற்கு உடற்பயிற்சிக்கு வரும் இந்து பெண்களை கவர்கிறார்கள் என்ற தலைப்பில் இந்துத்துவ அமைப்பை சேர்ந்தவர்கள் பரப்பினார்கள்.

நவம்பர் 20 – உத்திரபிரதேச மாநிலத்தில் ஹுசைன் என்ற 15 வயது சிறுவன் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டான் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 11 மாதங்கள் சிறை வாழக்கைக்கு பிறகு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஹுசைனின் குடும்பத்தார் அவன் எந்த போராட்டத்திலும் பங்கு கொள்ளவில்லை என்று சொல்கின்றனர்.

ஹுசைனின் வழக்கறிஞர் இதுபோல் இன்னும் பல சிறுவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். எந்த தவறும் செய்யாமல் ஹுசைனின் ஒருவருட வாழ்க்கை வீணாகி விட்டது என்று கூறினார்.

நவம்பர் 20 – பிரான்சில் சாமுவேல் என்ற ஆசிரியர் கொலைக்கு இந்தியாவில் முஸ்லிம்கள் கண்டனம் தெரிவித்து கொண்டிருந்த வேளையில் இந்தியாவில் யாதி நரசிங்கானந்த சரஸ்வதி என்ற சாமியார் – பிரான்சில் நடந்த சம்பவத்தை முன்மாதிரியாக கொண்டு இந்தியாவில் லவ் ஜிஹாத் செய்பவரை கத்தியால் குத்த வேண்டும். இது இந்துக்கள் கையில் வாளை எடுக்க வேண்டிய நேரம் என்று பொதுவெளியில் பேசினார்.

நவம்பர் 24 – உத்திரபிரதேசம் கான்பூர் மாவட்டத்தில் முஸ்லிம்கள் மாற்று மதத்தாரை திருமணம் செய்கிறார்கள் அதன் பின்னால் பெரிய சதியும் வெளிநாட்டு நிதியுதவிகளும் இருக்கிறது என பாஜக அரசு தொடர்ச்சியாக குற்றச்சாட்டு வைத்தது.

இதன்படி பதியப்பட்ட 14 வழக்குகளை ஆய்வு செய்த சிறப்பு புலனாய்வு அமைப்பு இதன் பின்னால் எந்த சதித்திடமும், வெளிநாட்டு நிதியுதவிகளும் இல்லையென்று தீர்க்கமாக கூறி விட்டது.

நவம்பவர் 24 – உத்திரபிரதேசம் லக்னோ மாவட்டத்தில் 52 வயதான முஹம்மது நயீம் காவலர்களால் தொடர் சித்வரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

நயீமின் குடும்பமே சமூக சேவைகளை செய்பவராக இருந்துள்ளார்கள். சிஏஏ எதிர்ப்பு போராட்டத்திலும் முன்னிலையில் இருந்துள்ளார்கள். இதன் காரணத்தை வைத்து பிரான்ஸ் அதிபரை பற்றி தவறாக பேசி விட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைது நடவடிக்கை நடத்தப்படும் போது நயீமின் மகளையும், மனைவியையும் ஆபாசமாக பேசி அடித்து கைது செய்துள்ளார்கள்.

உங்கள் ஐடி கார்டுகளை காட்டுங்கள் என்று கேட்டதற்கு, வேண்டுமா இங்க வா காட்டுறேன் என்று காவலர்கள் மோசமாக பேசியிருக்கிறார்கள். உங்கள் குடும்பம் தான் சமூக சேவை செய்யும் குடும்பாயிற்றே இன்று நாங்கள் சமூக சேவை என்றால் என்னவென்று கற்றுத்தருகிறோம் என்று கூறி அடித்து நயீமை கைது செய்திருக்கிறார்கள்.

நவம்பர் 27 – முஸ்லிம் மதரசா மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து இந்து வேதங்களை படிக்கும் வீடியோவை பரப்பி அதில் முஸ்லிம்கள் இந்து மத வேதங்களை மாற்றம் செய்கிறார்கள். இனி அடுத்த 20 வருடத்தில் இந்து மத வேதங்கள் காணாமல் போகும் என்று அடிக்குறிப்பு எழுதி பரப்பினார்கள்.

ஆனால், முஸ்லிம் மாணவர்கள் இந்து மற்றும் முஸ்லிம் வேதங்களில் உள்ள பொதுவான விடயங்களை பற்றி ஆய்வு நடத்தும் கூட்டத்தில் பங்கெடுத்தவர்கள்.

நவம்பர் 29 – இரவு 11 மணிக்கு காஷ்மீரில் பிலால் ஹுசைனை விசாரணைக்காக இழுத்து சென்ற இராணுவத்தினர் வாயில் துப்பாக்கி வைத்து ஜெய் ஸ்ரீ ராம் சொல்லச்சொல்லி துன்புறுத்தியிருக்கின்றனர்.

இரவு இழுத்து செல்லப்பட்ட தன் அண்ணன் சுட்டுக்கொல்லப்படாமல் வீட்டிற்கு வந்ததற்காக பிலாலின் சகோதரி இனிப்பு வழங்கினார்.

வடநாட்டில் முஸ்லிம்களை கொலை செய்ய பயன்படுத்தப்படும் கோஷமாக ஜெய் ஸ்ரீ ராம் இருந்தது. ராணுவத்திலும் இந்த மனநிலை பரப்பப்பட்டிருக்கிறது.

## டிசம்பர்

டிசம்பர் 10 – யூசுப் அஹ்மது என்ற முஸ்லிம் இளைஞன் உத்திரபிரதேசத்தில் முதற்தகவல் அறிக்கையும் பதிவு செய்யாமல் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்.

யூசுப் அஹ்மதும் இந்து சமூகத்தை சார்ந்த பெண் ஒருவரும் காதலித்து வந்திருக்கிறார்கள். இதனை பெற்றோர்கள் எதிர்த்திருக்கிறார்கள். இதனை கையிலெடுத்த இந்துத்துவ அமைப்புகள் போராட்டங்கள் செய்து யூசுபை சிறையில் தள்ளி விட்டனர்.

யூசுபை காதலித்த இளம்பெண் கூறும் போது

எனக்கு தொடக்கத்திலிருந்தே யூசுப் என்ன மதம் என்று தெரிந்து தான் காதலித்தேன். அது ஒரு பெரிய விசயமில்லை என்று தெரிவித்திருக் கிறார்.

பெண்ணின் பெற்றோர்கள் புகார் கொடுத்தால் தான் உத்திரபிரதேசத்தில் புதிதாக கொண்டுவரப்பட்டிருக்கும் மதமாற்றத்திற்கு எதிரான சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும். ஆனால் அவர்கள் முன்வராவிட்டாலும் இந்துத் துவ அமைப்புகளின் கோரிக்கைக்கு ஏற்ப சிறையில் வைத்திருக்கிறார்கள் காவலர்கள்.

டிசம்பர் 14 – தெற்காசிய சிறுபான்மையினர் குழு சார்பாக ஒரு அறிக்கை வெளியிடப் பட்டது. அதில், இந்தியா முஸ்லிம்கள் வாழ் வதற்கு மோசமான வன்முறைகள் மிகுந்த இடமாக மோடி அரசிற்கு கீழ் இருக்கிறது என்று வெளியிடப்பட்டது.

டிசம்பர் 18 – பீகாரில் 32 வயதான முஹம்மது என்பவரை மாட்டை திருடி விட்டார் என்ற சந்தேகத்தின் பெயரில் அடித்தே கொன்று விட்டனர் இந்துத்துவ வெறியர்கள்.

டிசம்பர் 18 – காஷ்மீர் வழக்கறிஞர் பாபர் காத்ரியின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப் பட்டு காஷ்மீரை சேர்ந்த மூவர் டெல்லியில் கைது செய்யப்பட்டனர். ஆனால். இந்த மூவரும் அப்பாவிகள் இதில் திட்டமிட்டு சேர்க்கப்படு கிறார்கள் என்று குடும்பத்தார்கள் கூறுகிறார்கள்.

பாபர் காத்ரி தொடர்ச்சியாக பாஜக அரசுக்கு எதிராக பேசி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் 20 – முஸ்கான் மற்றும் ராஷித் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். இதில் முஸ்கான் தானே விருப்பப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். இருவரும் ரகசியமாக திருமணம் செய்து வாழ்ந்து வந்தனர்.

இதில் முஸ்கான் மூன்று மாத கர்ப்பிணியாக இருக்கும் போது பஜ்ரங் தள் அமைப்பினரால் பிரச்சனைக்குள்ளாகிறார். இதன் முடிவில் முஸ்கான் மதம் மாறியிருப்பதால் உத்திர பிரதேசத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய மதமாற்றத்திற்கு எதிரான சட்டத்தில் ராஷித் கைது செய்யப்படுகிறார். முஸ்கான் பெண்கள் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்.

இதில் முஸ்கான் தங்க வைக்கப்பட்ட முகாம் சிறைச்சாலை போல மோசமாக இருந்ததாக கூறுகிறார். தனக்கு வயிறு வலி வந்தும் எந்த சிகிச்சையும் அளிக்காமல் வலி அதிகமான பிறகு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கே என்ன ஊசி போடப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால், அதன் பிறகு என் கரு கலைந்து விட்டது என்று தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் நீதிமன்றம் ராஷித்தின் மீது எந்த குற்றமும் இல்லையென்று பிணையில் விடுதலை செய்திருக்கிறது.

டிசம்பர் 22 – உத்திரபிரதேசத்தில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய மதமாற்றத்துக்கு எதிரான



சட்டத்தின் கீழ் நிறைய முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். அவர்களுக்காக வாதாடும் வழக்கறிஞராக இருந்த ஹாசிம் அன்சாரி உபி காவல்துறையால் கடும் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்.

டிசம்பர் 23 – ஹரியானாவின் புகழ்பெற்ற பாதுஷா கான் என்ற அரசு மருத்துவமனையின் பெயரை இந்துத்துவ கும்பல்களின் கோரிக்கை ஏற்ப அடல் பிஹாரி வாஜ்பாய் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்தியா முழுக்க முஸ்லிம்களின் பெயர்களில் இயங்கி வரும் அரசு நிறுவனங்கள், ஊர்களின் பெயர்களை மாற்றி முஸ்லிம் அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

டிசம்பர் 23 – சோனு சாகிப் என்ற இளைஞன் தன் உடன் படிக்கும் 16 வயது தலித் பெண்ணுடன் கடைக்கு பீட்சா சாப்பிட சென்றிருக்கிறார். அதனை பிரச்சனையாக்கிய இந்துத்துவாவினரின் தூண்டுதலுக்கு இணங்க உபி அரசு புதியதாக கொண்டு வந்திருக்கிற மதமாற்றத்துக்கு எதிரான சட்டத்தில் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தலித் பெண்ணின் தந்தையின் பெயரில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் காவலர்கள் மிரட்டி புகார் கொடுக்க வைத்ததாக தந்தை கூறுகிறார். குறிப்பிட்ட அந்த பெண்ணும் மதத்தை குறித்து எதுவுமே பேசவில்லை எங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறியிருக்கிறார்.

டிசம்பர் 23 – ஹாத்ராஸில் தலித் பெண் கற்பழித்து கொல்லப்பட்டதை பற்றி செய்தி சேகரிக்க சென்ற சித்திக் காப்பான் என்ற பத்திரிக்கையாளர் கைது செய்யப்பட்டார். அவரை காவலர்கள் சிறையில் சித்ரவதை செய்வதாக அவரது மனைவி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நம் கைகளில் கிடைத்த செய்திகளின் அடிப்படையில் மட்டும் தொகுத்த தகவல்கள் இவை. இதனைமுழுமையாகபடித்தவர்கள்கண்டிப்பாக இந்தியாவில் முஸ்லிம்களின்நிலையை புரிந்து கொள்வார்கள்.


– அபூ சித்திக்






# காங்கிரஸின் தோற்றமும் முஸ்லிம்களின் பங்களிப்பும்

ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்



பம்பாய் அசோசியன் ஆதரவில் பம்பாய் கோகுல்தாஸ் மஹால் சமஸ்கிருத கல்லூரியில் கி.பி. 1885 – டிசம்பர் 28, 29 தேதி அகில இந்திய காங்கிரஸ் முதல் மகா சபை ஆலன் ஆக்டேவியன் ஹூயூம், வெட்டர்பன், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. 72 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் ரகமதுல்லா ஸயானி கலந்து கொண்டார்.

கி.பி. 1886–ல் கல்கத்தாவில் இரண்டாவது காங்கிரஸ் சபை கூடியது. இக்கூட்டத்தில் அப்துல் கரீம் பிரதிநிதியாக கலந்துகொண்டார்.

கி.பி. 1887–ல் பம்பாய் அஞ்சுமன் சங்க காரியதரீசி பக்ருத்தீன் தயாப்ஜி சாகிப் தலைமை வகித்தார். 607 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். 35 பேர்திப்புசுல்தானின் குடும்பத்தார். இக்கூட்டத்தில் மூக்கன் ஆசாரி தமிழில் பேசினார்.

கி.பி. 1888–ல் அலகாபாத் காங்கிரஸ் மாநாடு டிசம்பர் 26–ல் சென்னையிலிருந்து 6 பக்ருத்தீன் சாகிப், ஹோஹரி சாகிப், அப்துல் ரகுமான் சாகிப், முகம்மது யூசுப் ஆகியோர் கலந்துகொண்டனர். கி.பி. 1889–ல் டிசம்பர் 26 தேதி கூடிய பம்பாய் காங்கிரஸ் மாஉசேன்ஷாவ. முகம்மது சேசிப், அ.அஜீமுத்தின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கி.பி. 1890–ல் 116 பேர் முஸ்லிம் பிரதிநிதிகள் கி.பி. 1891–ல் டிசம்பர் 28. 30 காங்கிரஸ் மகா சபை கி.பி. 1892–ல் அலகாபாத்தில் டிசம்பர் 28–ல் முகம்மது அப்துல் காதிர் சென்னை மாகாண பிரதிநிதியாக கலந்துகொண்டார். கி.பி. 1893–ல் லாகூரில் காங்கிரஸ் மகா சபை கூடியது.

கி.பி. 1894–ல் காங்கிரஸ் மகா சபை கூடியது. ஜியாவுத்தீன் முகம்மது, ஷேக் பர்சத் சாகிப், மக்தூம் இராவுத்தர் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.

கி.பி. 1895–ல் டிசம்பர் 27, காங்கிரஸ் மகா சபை கூடியது.

கி.பி. 1896–ல் டிசம்பர் அப்பாஸ் முகம்மது, ரகுமதுல்லா ஸயானி தலைமையில் கல்கத்தாவில் கூடியது. கி.பி. 1897–ல் அமராவதியில் டிசம்பர், 27 தேதி காங்கிரஸ் மகா சபை கூடியது. அஜிமுத்தீன் சாகிப், அபூபக்கர் சாகிப், முகம்மது அக்பர் சாகிப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கி.பி. 1898–ல் டிசம்பர் 29, 30 தேதி சென்னையில் காங்கிரஸ் மகா சபை கூடியது. எம்.எம். காகா, காசிம் இராவுத்தர் போன்றோர் கலந்து கொண்டனர். கி.பி. 1889–ல் லக்னோவில் காங்கிரஸ் மகா சபை கூடியது.

கி.பி. 1900–ல் லாகூரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. உதீந்திரம்மதார் சாகிப் அப்துல் லத்தீப் சாகிபும் கலந்துகொண்டனர்.

கி.பி. 1901–ல் கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபை கூடியது. கி.பி. 1902–ல் அலகாபாத்தில் காங்கிரஸ் மகா சபை கூடியது.

கி.பி. 1903–ல் சென்னையில், 1904 பம்பாயில் 1905 பனாரஸ், 1906–ல் கல்கத்தாவில் காங்கிரஸ் மகா சபை கூடியது. கி.பி. 1907–ல் டிசம்பர் 26 தேதி சூரத்தில் காங்கிரஸ் மகா சபை கூடியது.

கி.பி. 1908–ல் டிசம்பர் 28 தேதியில் சென்னையிலும், கி.பி. 1909–ல் லாகூரிலும், கி.பி. 1910–ல் அலகாபாத்திலும், 1911–ல் கல்கத்தாவிலும் காங்கிரஸ் மகாசபை கூடியது.

கி.பி. 1912–ல் பங்கிப்பூர், கி.பி. 1913–ல் கராச்சி காங்கிரஸ் மகா சபை சென்னை நவாப் செய்யது முகம்மது பகதூர் தலைமையில் நடைபெற்றது.

கி.பி. 1914–ல் சென்னையிலும் கி.பி. 1915–ல் டிசம்பர் 27 தேதி பாம்பேயில் காங்கிரஸ் மகா சபை கூடியது. கி.பி. 1916–ல் லக்னோவிலும் கி.பி. 1917–ல் கல்கத்தாவிலும் காங்கிரஸ் மகா சபை கூடியது. கி.பி. 1916–ல் லக்னோவிலும், கி.பி.1917–ல் கல்கத்தாவிலும் காங்கிரஸ் மகா சபை கூடியது.

கி.பி. 1918–ல் டெல்லியிலும் மகாசபை கூடியது. சென்னை யாகோப் ஹசன்சேட் மாகாண உறுப்பினராகவும் சேலம் விஜயராக வாச்சாரி, சி.பி.இராமசுவாமி ஐயர் கமிட்டி உறுப்பினர்கள், கி.பி. 1918–ல் டிசம்பர், 29–ல் கூடிய காங்கிரஸ் மகாசபை ஹசன் இமாம் அலி தலைமையில் கூடியது.

கி.பி. 1919–ல் டிசம்பர் 27,28,29.30 தேதிகளில் அமிர்தசரஸ் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்கு மோதிலாம் நேரு தலைமை தாங்கினார். டாக்டர் எம்.ஏ., அன்சாரி பொதுச் செயலாளர்



## காந்திஜியின் இந்திய அரசியல் பிரவேசம்

2–10–1869 – 30–1–1948 கி.பி. 1893, ஏப்ரலில் தாதா அப்துல்லாஹ் கம்பெனியில் வழக்கறிஞராக 1893–ல் தென்னாப்பிரிக்கா சென்று அங்கு போராட்டங்களில் பங்குபெற்று, கி.பி. 1914 ஜூலை 18–ஆம் தேதி இந்தியா வந்தார். காங்கிரஸில் தீவிரவாதிகளான சுபாஸ் சந்திரபோஸ், திலகர்,வ.உ.சி. போன்றோர் அணுகுமுறை தோற்க காந்திஜியின காங்கிரஸ் தலைமை ஏற்று சாத்வீக முறையில் ஆங்கிலேயரை எதிர்த்து போராட வழிவகை வகுத்தார். இதன் விளைவு கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கமும், 1005 முதல் 1857 வரை 852 வருடம் வரை இஸ்லாமிய ஆட்சி இந்தியாவில் இல்லாத நிலை.

முஸ்லிம்களின் குறைகளை உரிமைகளை மனுவாக தூதுக்குழு சிம்லாவுக்கு வந்த மின்டோமார்லின் பிரபுவிடம் கொடுத்தது. இதன்மூலம் முஸ்லிம்களுக்கு தேர்தலில் தனித்தொகுதி கிடைத்தது.

## பக்ருத்தீன் தயாப்ஜி

கி.பி. 1844 அக்டோபர், 8–ல் பம்பாயில் பிறந்தார். லண்டனில் கல்வி கற்று, 1867–ல் பாரிஸ்டரானார். 1882–ல் பட்பாய் சட்டசபை உறுப்பினர். 1887–ல் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா சபைத் தலைவர். இவர் தலைமையில் காங்கிரஸ் செயல்திட்டம் வகுக்கப் பட்டது. பம்பாய் நீதிமன்றத்தின் நீதிபதி. 1909 ஆகஸ்ட், 19–ல் இங்கிலாந்தில் கண் வைத்தியத்திற்கு சென்றபோது காலமானார்.

## முகம்மது ரகமத்துல்லா எம். ஸயானி

இவர் 1847 ஏப்ரல் 5–ல் பிறந்தார். பம்பாய் பல்கலைக்கழக உறுப்பினர், நகர சபை உறுப்பினர். 1888–ல் நகர சபைத் தலைவராக, சட்டசபை உறுப்பினராக 1896–ல் கூடிய காங்கிரஸ் மகா சபைத் தலைவராக பணியாற்றியவர். 1902–ல் காலமானார்.


## ஹஸன் இமாம்

கி.பி. 187 (ஆகஸ்ட் 31–ல் பிறந்தார். 1909 பீகார் மாணவர். காங்கிரஸ் தலைவர் வழக்கறிஞர். 1911–ல் ஹைகோர்ட் நீதிபதி 1911–ல் அலிகல்சர்வ கலா சாலை தலைவர். 1913–ல் ஹைகோர்ட் நீதிபதி பதவியை தூக்கி எறிந்தார். 1917–ல் பீகார் மாகாண காங்கிரஸ் மகா சபை தலைவர்.

## நவாப் செய்யது மஹ்மூத் பகதூர்

*1900 – 1902–ல் சென்னை சட்டசபை உறுப்பினர். 1904–ல் காங்கிரஸ் சட்டசபை திட்ட கமிட்டி உறுப்பினர். 26–12–1913–ல் கராச்சியில் கூடிய காங்கிரஸ் மகாசபைத் தலைவர், 1914–1916–ல் காங்கிரஸ் பொதுச் செயலாளர். 1916–ல் காலமானார். 1914–1916ல் காங்கிரஸ் பொதுச் செயலாளர் 1916 பிப்ரவரி 12–ல் காலமானார். தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கி காந்திஜியை இக்கூட்டத்தில் அறிமுகப்பட்டது.*

## மௌலானா முகம்மதலி ஜவஹர்



*இவரின் மூத்தவரே மௌலானா சவுகத்தலி. இருவரும் சுதந்திரப் போராட்ட வீரர்கள். காந்திஜி ஒரு பொழுது ஆங்கிலேயரைப் பார்த்து சொன்னார், என்னிடம் இரு சிங்கம் இருக்கிறது. ஆகவே நான் உங்களைப் பார்த்து பயப்பட மாட்டேன்.அவர்கள் வேறு யாருமல்ல, முகம்மதலி, சவுக்கத்தலி என்றார். அப்படிப்பட்ட போராட்ட வீரர்கள். காம்ரேட் ஹம்தர்த் இரு பத்திரிகை மூலம் சுதந்திர உணர்வு நாட்டு மக்களுக்கு ஊட்டப்பட்டது. 1921–ல் கைது செய்யப்பட்டு கராச்சி விசாரணையில் நீதிமன்றத்தில் வீரகர்ஜனை புரிந்தார். 1923–ல் காகி நாடா காங்கிரஸ் தலைவர் இங்கிலாந்தில் மூன்றாவது வட்ட மேஜை மாநாட்டில் கொடுத்தால் சுதந்திரம் கொடு, இல்லையானால் சுதந்திர திருநாட்டிலே ஓர் புதைகுழிகொடு என வீர கர்ஜனை புரிந்து அன்றிரவே மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு மரணமடைந்து இன்றைய இஸ்ரேலில் இருக்கும் பைத்துல் முகத்தஸில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.*

## ஹக்கீம் அஜ்மல்கான்

*யூனானி வைத்திய நிபுணர் 1918–ல் காங்கிரஸ் வரவேற்பு தலைவர். 1921–ல் கிலாபத் மாநாட்டின் தலைவர். 1921–ல் டிசம்பரில் அகமதாபாத் காங்கிரஸ் மகா சபை தலைவர்.*

## இப்ராஹீம் ரகுமத்அலி சக்கரியா

*இந்திய விடுதலைக்கு ஜெர்மனி சென்று படை திரட்டி நாஞ்சில் நாட்டு ஜெய்ஹிந்த் செண்பகராமன் பிள்ளையுடன் ஐந்து பேர் 15–9–1891 முதல் 26–5–1934 தொடர்புடையவர்களென ஆங்கில அரசு தெரிவித்த இருவரில் ஒருவர் குஷி முகம்மது மற்றொருவர் ரஹ்மத் அலி சக்கரியா.*

## டாக்டர் எம்.ஏ. அன்சாரி




*உத்திரப்பிரதேசம் காசிப்பூரில் பிறந்தவர்கள். கயாவில் நடந்த கிலாபத் மநாாட்டின் தலைவர் 1920, 1922, 1926, 1927, 1932 ஆண்டுகளில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் பொதுச் செயலாளர். 1927–ல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின் தலைவர். 1935–ல் டெல்லியில் கூடிய காங்கிரஸ் பொன்விழா மாநாட்டில் தலைமை ஏற்றவர். இவர் இராம்பூரிலிருந்து டெல்லிக்கு இரயிலில் வந்து கொண்டிருக்கும் போது 1936–ல் மாரடைப்பால் காலமானார்.*



## மௌலானா அபுல்கலாம் ஆசாத்

*முகலாய மன்னர் அக்பர் காலத்தில் வாழ்ந்த ஷேக் ஜமாலுத்தீன் தெஹ்லவி (ரழி) பரம்பரையில் வந்த மௌலானா காஹிமுத்தீனின் புதல்வராக 1888, செப்டம்பரில் மக்காவில் பிறந்தவர் மௌலானா அபுல் கலாம் ஆசாத். 1898–ல் குடும்பத்தாருடன் இந்தியாவில் கல்கத்தாவில் வசித்து 1905–ல் கெய்ரோ அல்அஸ் ஹர்பல் கழகத்தில் பயின்றவர். 1907–ல் இந்தியா திரும்பினார். 10–வது வயதில் ஹாபிஸானார்.*

*1912–ல் அல்ஹிஸால் (இளம்பிறை) என்ற உருது வாரஇதழ் மூலம் சுதந்திர வேட்கையை நாட்டு மக்களிடையே ஏற்படுத்தினார். அல்பஸாக் என்ற இதழ் மூலமும் சுதந்திர பிரச்சாரம்*

செய்தார். 1915–ல் ஆஸாதை ஆங்கிலேயே அரசு கல்கத்தாவிலிருந்து வெளியேற்றியது. நான்காண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார். காந்திஜி தலைமை வருவதற்கு முன்பே தமது எழுத்துப் பணியால் கடுங்காவல் தண்டனை அடைந்தார்.


நாடெங்கும் கண்டனக்குரல் எழுந்து அரசு பணிந்து அவரை விடுதலை செய்தது. விடுதலை யாகி காந்திஜி தலைமையில் காங்கிரஸில் இணைந்து பணியாற்றினார். 1921–1922 சி.ஆர். தாஸோடு சிறை சென்றார். சிறைக்குள்ளே விசாரணை நடைபெற்று ஒரு வருட கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார்.

1923–ல் டெல்லியில் நடந்த காங்கிரஸ் மகா சபையின் தலைவராக பணியாற்றினார். 1930–ல் உப்பு சத்தியாகிரகத்திலும், 1932–ல் சட்ட மறுப்பு இயக்கத்திலும் கலந்துகொண்டு சிறை சென்றார். 1940–ல் ராம்கரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகா சபையின் தலைவர். 1942–ல் ஆகஸ்ட் புரட்சியான அத்தனைப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார்.

1946–ல் இடைக்கால இந்திய அரசிலும் சுதந்திர இந்திய அரசிலும் கல்வி மந்திரியாக செயல்பட்டார். வன்மையாக, வளமையாகவும் பேசும் திறன்பட்ட ஆஸாத் எழுத்தாற்றல் மிக்கவர். இவரின் திருக்குர்ஆனின் சூரா பாத்திஹா சம்பந்தமான விளக்க உரை உலக இஸ்லாமிய அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இவர் 1958–ல் காலமாகி டெல்லி ஜூம்ஆ மஸ்ஜிதுக்கு முன்புள்ள பூந்தோட்டத்தில்அடக்கம்செய்யப்பட்டுள்ளது.

இவர் சமாதியோடு சுதந்திரப் போராட்ட வீரர் ஷாநவாஸ்கான் அடக்க இடம் உள்ளது. டெல்லி சென்ற நான் இருவர் அடக்க இடத்தையும் பார்த்தபோது என்னை அறியாமல் ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது.

டெல்லியில் காந்திஜியை வீட்டில் சென்று சந்திப்பார். நாடு பிரிவதில் கூடாது என்ற முடிவு டையவர் ஆசாத். காந்திஜி வீட்டில் ஆசாத் சிகரெட் சாம்பலை ஒற்ற உள்ள பீங்கானை எடுத்து வைக்க மனுபென் காந்தி மறந்து விட்டார். பேச்சினோடே காந்திஜி ஜன்னல் அருகே கிடந்த சிகரெட் ஒற்றும் பீங்கானை எடுத்து வந்து வைத்தார். இதை கவனித்த மௌலானா காந்திஜியிடம் நான் உங்களுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விட்டேனே என சொன்னார்கள். இதுகேட்ட காந்திஜி மௌலானாவிடம் இச்சிறிய சேவை செய்ய நான் கொடுத்து வைத்தேன் என பதில் சொன் னார்கள் என்றால் காந்திஜி எந்தளவு மௌலான ா அபுல் கலாம் ஆஸாதை மதித்தார்கள் என்பதை அறியலாம்.



## டாக்டர் ஜாகிர் உஸைன்

1897–ல் ஹைதரா பாத்தில் பிறந்தவர். 1913–ல் அலிகரில் பட் டப்படிப்பு, அலிகரில் காந்திஜியும் முகம்மது அலியும் கிலாபத்திற்கு ஆதுரவு திரட்டப்போய் ஆதரவில்லாமல் திரும்பிய விபரம் ஜாகிர் உஸைன் அறிந்து மாணவர்களை படிக்க வேண்டி இன்றும் டெல்லியில் இருக்கும் ஜாமியாமில்லி யாவை டாக்டர் ஜாகிர் உஸைனும், மௌலானா முகம்மதலியும் மற்றும் இஸ்லாமிய பெரியார் களுமாக அசேர்ந்து ஆரம்பித்ததுதான் இன்றும் டெல்லியில் சீரோடும் சிரப்போடும் கல்விப் பணியாற்றும் ஜாமியா மில்லியா.

ஜாமியா மில்லியா நடத்த முடியாத நிலை ஏற்பட்டபோது டாக்டர் அன்சாரி, அபுல்கலாம் ஆஸாத் சென்னை வந்தனர். சென்னையில் ஹாஜி ஜமால் முகம்மது சாகிப் பெரும் தொகை உதவி ஏனையோரிடம் பணம் வசூலித்து கொடுத்து உதவினார்கள். இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்து காலமானார்கள்.

## முபாரக் அலி

பதானில் நல்ல குடும்பத்தில் பிறந்தார். பாரசீக மொழியில் பண்டிதர். இவரது முழுப் பெயர் முன்ஸி முபாரக் அலி. மோதிலால் நேரு விடம் எழுத்தாளராக பணியாற்றினார். 1857–ல் முதல் இந்தியா சுதந்திரப் போரில் இவர் குடும்ப நண்பர்கள் பலரை ஆங்கிலேய அரசு கொன்று குவித்தது. குடும்பத்தை இழந்ததால் மனம் தளராமல் பொறுமையோடு வாழ்ந்தார்.

தாடி வளர்த்தவராக பழைய காலத்தவராக வாழ்ந்த வயோதிகரை நான் சிறுவனாக இருக்கும் பொழுது கட்டித் தழுவுவோம். அவர் 1857–ல் இந்திய சுதந்திரப் போரில் நடந்த நிகழ்வுகளை மற்று அரபியக் கதைகளையும் சொல்வதை இமை கொட்டாமல் கேட்டுக் கொண்டிருப்போம், சலிப்பே தோன்றாது. அவர் என் உள்ளத்தில் நீங்கா இடம் பிடித்துவிட்டார். அவர் என் மீது கொண்டிருந்த அன்பை, பண்பையும் என்றும் மறக்க கூடியதல்லயென பண்டித ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டுள்ளார்.


பிரிட்டீஸ் ஆட்சியாளர் விடுதலைப்போரில் ஈடுபட்டவர்களை செய்த சித்திரவதை ஆண்கள், பெண்கள் என செய்ததை முபாரக் அலி சிறுவயதில் நேருக்கு சொன்னதால் பிற்காலத்தில் நேரு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட இது காரணமாக அமைந்தது. நேருவை பின்பற்றி இந்திராகாந்தி, இவரது புல்வர் ராஜீவ்காந்தி ஆகியோர் சிறந்த நிர்வாகிகளாக வரக்காரணம் முன்ஸி முபாரக் அலி போட்ட சுதந்திரம் பற்றிய உணர்வாகும்.

தொகுப்பு – அபூ ஆஸாத், எழுத உதவிய புக் எழுத்தாளர் திவானின் விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் என்ற புத்தகம்

## மாஜிஸ்டிரேட் அப்பாஸ் அலிகான் தேசப்பற்று

1940–ல் காந்திஜியின் தலைமையில் பேச்சுரிமைப் போர் ஆரம்பமாயிற்று. இப்போராட்டத்தில் கலந்து இராஜாஜி கைது ஆனார். கைதான இராஜாஜி சென்னை மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்னால் வழக்கு வந்தபோது இராஜாஜியை பார்த்து மாஜிஸ்டிரேட் அப்பாஸ் அலி உணர்ச்சி வயப்பட்டு பகவத் கீதையின் முதல் அத்தியாயம் 29,30 வது சுலோகங்களையும், 2–வது அத்தியாயம் 47–வது சுலோகத்தையும் சொன்னார்.

என் அவயங்கள் வெலவெலக்கின்றன. வாய் உளறுகிறது. உடல் நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கின்றது. காண்டீ பம்பை கையிலிருந்து நழுவுகிறது. உடலில் எரிச்சல் உண்டாகிறது. மனம் பிரம்மிக்கின்றது. என்னால் நிற்க முடியவில்லை. தொழில்செய்ய உனக்கு அதிகாரமுண்டு அதன் பலன்களில் எப்பொழுதுமே உனக்கு அதிகாரமில்லை. செயலில் பலனை கருதாதே.



தொழில் செய்யாமல் இராதே என்பதை கூறி இராஜாஜிக்கு சட்டப்படி ஒரு வருட வெறுங் கடுங்காவல் தண்டனை கொடுத்தார்.

நீங்கள் விரைவில் விடுதலை அடைந்து மீண்டும் பிரதம மந்திரி பதவி வகித்தால் என்னைப் போன்று மகிழ்ச்சி அடைபவன் வேறு யாரும் இருக்க முடியாதென வாழ்த்தினார்

## -: அறிவிப்பு :-

**அன்பார்ந்த வாசகர்களே!**
**நமது வைகறை வெளிச்சத்தில் “பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்” என்றொரு தொடர் இடம்பெற்று வந்தது.**

**அந்த ஆங்கில நூல் சில திருத்தங்களுக்கும், விரிவாக்கங்களுக்கும் உள்ளாகி வருகின்றது என அதன் ஆசிரியர் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் கூறியுள்ளார்கள்.**

**அந்தத் திருத்தங்கள் விரிவாக்கங்கள் இவை முடிந்து புதிய பதிப்பு வெளிவந்தவுடன் இதைத் தொடராக தொடரும்.**

# முஸ்லிம்களை கொலை செய்யும் முகநூல்



உலகின் 8 பில்லியன் மக்கள் தொகையில் 3 பில்லியனுக்கு நிகராக முகநூல் கணக்குகள் இருக்கிறது. அதாவது உலக மக்கள் தொகையில் கால்வாசி. இவ்வளவு கோடிக்கணக்கான நபர்கள் உபயோகிக்கும் ஒரு தொழிற்நுட்ப சாதனம் முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக செயல்படுகிறது என்றால் அதன் விளைவு என்ன வாக அமையும்?. ஆம், முகநூலை பயன்படுத்தி தான் உலகம் முழுக்க பல பகுதிகளில் முஸ்லிம் களுக்கெதிரான படுகொலைக்கான அடித்தளம் போடப்படுகிறது. இதனை முகநூல் நிர்வாகமும் சில நேரங்களில் ஒத்துக்கொள்ளவும் செய்திருக் கிறது.

உலகிலுள்ள நாடுகளில் இந்தியா தான் முகநூலை அதிகமாக உபயோகிக்கிறது. அதே போல் முஸ்லிம்களுக்கெதிராக வெறுப்பு செய்தி களை முகநூல் வழியாக பரப்பப்படும் நாடா கவும் இந்தியா தான் உள்ளது.

முகநூல் வழியாக அதிகரிக்கும் முஸ்லிம் களுக்கெதிரான அநீதிகளுக்கு முகநூல் நிர்வாகம் துணை போகிறது அல்லது வேண்டுமெனவே கண்டு கொள்ளாமல் இருக்கிறது என அமெரிக் காவின் செனட்டர் சபையை சேர்ந்தவர்கள் கண்டனக்குரலையும் கோரிக்கையும் எழுப்பி யிருக்கிறார்கள். இந்த US செனட்டர் சபை சில சம்பவங்களையும் உதாரணங்களாக குறிப்பிட்டு முகநூலின் இயக்குனர் மார்க் ஜூபர்பெர்க்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்கள்.

அதில், உலகம் முழுக்க முகநூல் முஸ்லிம் களுக்கெதிரான வன்முறை நிகழ்த்துவதற்கு பயன்படுத்தப்படுவதாக தெரிகிறது.

மியான்மரில் 2018ல் அரசின் இராணுவத் துறை அதிகாரிகளாலேயே ரோஹிங்யா முஸ்லிம் களின் மீது வன்முறை நிகழ்த்துவதற்கு பயன் படுத்தப்பட்டிருக்கிறது. அதனை நவம்பர் 2018ல் முகநூல் நிர்வாகமே ஒப்புக்கொண்டது.

அதுபோல் இந்தியாவில் முகநூல் மற்றும் வாட்சாப் வழியாக முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை நிகழ்த்தப்படுகிறது.

இலங்கையிலும் முகநூல் வழியாக முஸ்லிம் களுக்கெதிரான வன்முறை பரப்பப்படுகிறது.

2019ல் நியூசிலாந்தில் ஒரு மசூதியில் துப்பாக்கியுடன் நுழைந்த தீவிரவாதி தன் முக நூலை நேரலை செய்து 51 பேரை சுட்டுக்கொன் றான். அவனது நேரலை 17 நிமிடங்கள் நீடித்த போதிலும் முகநூல் நிர்வாகம் முடக்கவில்லை.

இதுவரை இப்படி தொடர்ச்சியாக பரப்பப் படும் வன்முறை செய்திகளுக்கெதிராக முகநூல் நிர்வாகம் எடுத்த நடவடிக்கை என்ன என்பதனை அறிய விரும்புகிறோம். இனி இதில் கவனம்

செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும் கேட்டுக்கொள்கிறோம்.

## முன்னாள் நிர்வாகியின் ஒப்புதல் வாக்குமூலம்

முகநூலின் முன்னாள் முக்கிய தொழிற்நுட்ப நிர்வாகியாக இருந்த மார்க் லக்கி என்பவர் முகநூலை விட்டு விலகி முகநூல் வெறுப்பு பேச்சு தொடர்பான சட்டங்களையும் அதன் கொள்கைகளையும் சரியாக நடைமுறைப் படுத்துவதில்லை என்று கூறியிருக்கிறார்.

டெல்லியில் பிப்ரவரி மாதம் 2020ல் நடந்த கலவரத்தை முகநூல் நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டிருந்தால் கட்டுப்படுத்தியிருக் கலாம். 53 உயிர்கள் பறிபோகும் அளவுக்கு மோச மான நிலை ஏற்பட்டிருக்காது என்று கூறுகிறார்.

2017–2018 காலகட்டத்தில் முகநூலில் முக்கிய பணியாளராக வேலை பார்த்தார். ஆனால் 2018 இறுதியில் முகநூல் நிர்வாகத்தின் தவறான அணுகுமுறை சமூகங்களுக்குள் பிளவை உரு வாக்கும். இப்படி பிளவை உருவாக்கும் சம்ப வங்கள் நிகழ்ந்த போதும் எந்த நடவடிக்கையும் நிர்வாகத்தால் எடுக்கப்படாததை கண்டித்து முகநூலை விட்டு வெளியேறினார் மார்க் லக்கி.

டெல்லி கலவரம் தொடர்பாக டெல்லி அரசு உருவாக்கிய உண்மை கண்டறியும் குழுவினரிட மும் கலவரத்தில் முகநூலின் பங்கு பற்றி வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார்.

மேலும் முகநூல் நிர்வாகத்தின் இயக்குனர் மார்க் தன் வியாபரத்தை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கங்களுடன் தொடர்பு வைத்து கொள்கி றார் என்ற குற்றச்சாட்டையும் வைத்திருக்கிறார்.

## பாஜகவின் ஊதுகுழலான முகநூல் (FACEBOOK)

சமீபத்தில் அமெரிக்காவின் வால் ஸ்ட்ரீட் ஜர்னல் (Wall Street Journal) என்ற பத்திரிக்கை ஒரு ஆய்வை நடத்தி அதில் இந்தியாவில் முகநூல் பாஜகவின் வளர்ச்சிக்கு திட்டமிட்டு செயல் படுகிறது. பாஜகவினர் வெளியிடும் முஸ்லிம் களுக்கெதிரான வெறுப்பு கருத்துகளை பரவலாக பரப்புவதில் துணை நிற்கிறது என்று ஆதாரப் பூர்வமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

இதை தொடர்ந்து முகநூல் (Facebook) முழு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும், பிஜேபி ஆதரவானதாக செயல்பட்டதாக வைக் கப்படும் குற்றச்சாட்டில் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல்வேறு சமூக ஆர்வலர்கள் உலகம் முழுக்க குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

## அமெரிக்க பத்திரிக்கை வெளிப்படுத்திய தகவலின் சுருக்கம்

முகநூல் (Facebook) இந்தியாவில் பாஜக வுக்கு இணங்கி செயல்படுகிறது. முகநூல் நிறுவனத்தின் விதிப்படி வெறுப்பு கருத்துகள் பதிவிட்டால் உடனடி நீக்கப்படும். ஆனால், பாஜகவை சேர்ந்த் தலைவர்களின் வெறுப்பு கருத்துகள் நீக்கப்படுவதில்லை. இதற்கு மூன்று பாஜக தலைவர்களின் பதிவுகள் உதாரணமாக இருக்கிறது.

இந்தியாவில் முகநூல் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக இருக்கும் திருமதி, அஃங்கி தாஸ் (Ankhi Das) பாஜகவின் ஆதரவாகவே செயல்படு கிறார். மேலும் இந்தியாவில் இருக்கும் முகநூல் பணியாளர்களுக்கு, பாஜக தரப்பினர் செய்யும் விதிமீறல்களுக்கு நாம் நடவடிக்கை வேண்டாம். இது பாஜகவுக்கு மட்டும் அல்ல நமது நிறுவனத் திற்கும் பெரிய லாபத்தை தேடித்தரும் என்று கூறியிருக்கிறார். இது இந்தியாவில் நமது நிறுவனத்தின் லாபத்துக்கு எந்த பாதிப்பையும் தராமல் வைத்திருக்கும் என்று கூறியிருக்கிறார்.

தெலுங்கானாவை சேர்ந்த பாஜகவின் சிங் என்ற சட்டமன்ற உறுப்பினர் ரோஹிங்யா முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட வேண்டும், இந்திய முஸ்லிம்கள் துரோகிகள், மசூதிகளை இடித்து தள்ளுவோம் என்று முகநூலில் வெளிப் படுத்திய கருத்துகள் எவையும் முகநூல் நிர்வாகம் நீக்கவில்லை. இவர் மீது இத்தகைய வெறுப்பு பேச்சுக்கு பல்வேறு வழக்குகளும் நிலுவையில் இருக்கிறது.

பாஜகவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த் குமார் ஹெக்டே, இந்தியாவில் கொரோனா வைரஸை முஸ்லிம்கள் திட்டமிட்டு பரப்புகிறார்கள். இதற்கு பின்னால் கொரொனா ஜிகாத் என்ற சதித்திட்டம் இருக்கிறது என்று தன் முகநூலில் பதிவு செய்தார். இந்த கருத்தையும்

முகநூல் நிர்வாகம் நீக்கவில்லை.

அதே போல் டெல்லியை சேர்ந்த பாஜக தலைவர் கபில் மிஸ்ரா சிஏஏ சட்டத்திற்கு எதிராக அமைதியாக நடந்து கொண்டிருந்த போராட்டத்தை காவல்துறை அப்புறப்படுத்த வில்லை என்றால் நாங்கள் எங்கள் சக்தி கொண்டு அப்புறப்படுத்துவோம் என்ற வெறுப்பு பேச்சு இறுதியில் **53** உயிர்களை பறித்து முஸ்லிம் களுக்கு எதிரான கலவரமாக மாறியது. ஆனால் இந்த பதிவு முகநூலில் கபில் மிஸ்ரா பதிவிட்ட பிறகும் நீக்கப்படவில்லை.

உதாரணத்திற்கு சில பாஜக தலைவர்களின் பதிவுகளை குறிப்பிட்டு அவர்களுக்கு ஆதரவாக முகநூல் நிர்வாகம் எப்படி சாதகமாக செயல் படுகிறது என்பதனை தெளிவாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. (Times of India 17.08.2020)

## இந்தியாவில் கடந்த சில தினங்களாக பரப்பப்பட்ட பொய்ச்செய்திகள்




முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை முக நூலில் முஸ்லிம்களை பற்றி தவறாக சித்தரிக்கும் பொய்ச்செய்திகள் மூலமாகவே உருவாக்கப்படு கிறது. அந்த வகையில் சமீபத்தில் முஸ்லிம்களுக் கெதிராக பரப்படும் பொய்ச்செய்திகள் சில,

■ பாலிவுட்டில் மிர்சாபூர் என்ற திரைப்படம் பிரபலமானது. இதில் முன்னனி நடிகராக நடித்த அலி பைசல் சிஏஏ எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததால் அவரை குறிப்பிட்டு பல்வேறு பொய்ச்செய்திகள் பரப்பப்பட்டன, டெல்லி கலவரத்தில் இந்துக்களை கொல்வதற்கு ஆதரவுக்குரல் கொடுத்தார் என பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுகள் சமூக வலைத்தளங் களில் பரப்பப்பட்டன.

■ சீக்கியர் ஒருவர் தன் மகளின் கால்களில் டர்பனை கழட்டி வைத்து அழுவது போன்ற ஒரு வீடியோவை போட்டு சீக்கிய தந்தை தன் மகள் லவ் ஜிஹாத் மூலம் கவரப்பட்டு இருப்பதாகவும் அதனால் இவர் கதறி அழுவதாகவும் குறிப்பிட்டு சமூக வலைத்தளங்களில் சங் பரிவார அமைப்பு கள் பரப்பினார்கள்.

உண்மையில், வீடியோவில் இருப்பது போல அவரது பெண் முஸ்லிம் ஒருவரை திருமணம் செய்யவில்லை மாறாக அவரது சமூகத்தில் உள்ள ஒரு பையனேயே திருமணம் செய்துள்ளார்கள். இதனையே அவரது தந்தை எதிர்த்தார். இதற்கும் லவ் ஜிஹாதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

■ ஒரு பெண்ணை கத்தியால் வாலிபன் ஒருவன் குத்தும் காணொளியை போட்டு முஸ்லிம் ஆண்கள் இந்து பெண்களை இப்படி தான் லவ் ஜிஹாத் செய்கிறார்கள் என்ற குற்றசாட்டுடன் பல்வேறு இந்துத்துவ ஆதவாளர்கள் பரப்பிக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இந்த சம்பவம் **2019**ம் ஆண்டு நடந்தது. அரவிந்த் குமார் என்ற இந்து இளைஞன் தன் காதலி மற்றொரு நபருடன் பேசினார் என்ற சந்தேகத்தில் கத்தியால் குத்தியதால் சிறைக்கு சென்றார், இந்த சம்பவத்தையே முஸ்லிம் பெயர் குறிப்பிட்டு மதக் கண்ணோட் டதுடன் இணையங்களில் பரப்பட்டது.

■ இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் **1965**ல் நடந்த போரில் இந்தியாவிற்காக போரில் ஈடுபட்ட முஸ்லிம் இராணுவ குழு பாகிஸ் தானுக்கு எதிராக போரிட மாட்டோம் என்று பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டதாக ஒரு பொய்த்தகவலை இந்துத்துவாவினர் பெரிதள வில் பரபினர்.

இராணுவத்தில் இதுவரை அப்படியொரு குழு இல்லை. இது இராணுவத்திற்குள் மதப் பிரிவை உருவாக்க திட்டமிட்டு பரப்பபடுகிறது என்று முன்னாள் இராணுவ வீரர்கள் **120** பேர் குடியரசு தலைவருக்கு கடிதம் எழுதினார்கள்.

■ இந்தியாவில் மதரசாக்களில் பாலியல் ரீதியான துன்புறுத்துதல் பெண்களுக்கு நடக் கிறது என்று ஒரு ஆபாசமான வீடியோவை குறிப்பிட்டு இந்தியாவில் மதரசாக்கள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு

பல்வேறு இந்துத்துவ வட்டாரங்கள் இணையத்தில் பரப்பின.

ஆனால், உண்மையில் அந்த வீடியோ பங்களாதேஷ் நாட்டில் ஒரு குறும்படத்திற்காக உருவாக்கப்பட்டது. இதனை தவறாக முஸ்லிம்களுக்கு எதிராக திரித்து செய்தி வெளியிட்டனர் இந்துத்துவ சக்திகள்.

■ பாஜகவின் அஸ்ஸாம் எம்.எல்.ஏ ஹிமாந்தா பாஷா AIDUF அமைப்பின் தலைவர் மௌலானா பஹ்ருத்தின் அஜ்மல் விமான நிலையத்திற்கு வரும் போது அவரது ஆதரவாளர்கள் பாகிஸ்தான் ஜிந்தாபாத் என்று கோசமிட்டார்கள் என்று போலி வீடியோவை வெளியிட்டார்.

ஆனால் இந்த செய்தியை பலர் தங்களில் முகநூலில் பரப்பினார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ், ஏசியா நெட் போன்ற செய்தி நிறுவனங்கள் கூட பரப்பினார்கள்.


உண்மையில் அந்த வீடியோவில் அஜ்மல் ஜிந்தாபாத் என்றே ஆதவாளர்கள் கூறினார்கள். அதனை மார்பிங் செய்து இந்துத்துவ கும்பல் பரப்பினார்கள்.

■ முஸ்லிம் மதரசா மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து இந்து வேதங்களை படிக்கும் வீடியோவை பரப்பி அதில் முஸ்லிம்கள் இந்து மத வேதங்களை மாற்றம் செய்கிறார்கள். இனி அடுத்த 20 வருடத்தில் இந்து மத வேதங்கள் காணாமல் போகும் என்று அடிக்குறிப்பு எழுதி பரப்பினார்கள்.

ஆனால், முஸ்லிம் மாணவர்கள் இந்து மற்றும் முஸ்லிம் வேதங்களில் உள்ள பொதுவான விடயங்களை பற்றி ஆய்வு நடத்தும் கூட்டத்தில் பங்கெடுத்தவர்கள்.

இப்படியான பொய்ச்செய்திகள் தொடர்ச்சியாக பரப்பப்பட்டே இருக்கிறது. ஆனால் இதுவெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகை செய்யும் தொழிற்நுட்பம் இருந்தும் முகநூலில் தொடர்ச்சியாக அனுமதிக்கப்படுகிறது.

–அபூ சித்திக்.






# இந்திய முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்?

## முஸ்லிம்களும் ஏனைய சிறுபான்மையினரும் செய்ய வேண்டியது என்ன? தலித் மக்களுக்கு வேண்டுகோள்!

வி.டி.இராஜசேகர்

### ஷாபானு வழக்கு!

இதில் உச்ச நீதிமன்றம் தந்த இஸ்லாத்திற்கு எதிரான தீர்ப்பில் தங்கள் முழு பலத்தையும் பிரயோகித்து தங்கள் தனியார் சட்டத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் வாகை சூடிய முஸ்லிம்களுக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுகள்!

'சுதந்திர இந்தியா' எனப் பீற்றிக் கொள்ளப் படும் இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு அடுக்கடுக் காய் எத்தனையோ சோதனைகள்.

படையெடுத்து வரும் இந்தச் சோதனைகள் – ஷாபானு வழக்கில் – முஸ்லிம்களின் தனியார் சட்டத்திற்கு ஏற்பட்ட போராட்டத்தைப் போல் என்றும் எப்போது ஏற்பட்டதில்லை.

இதில் முஸ்லிம்களுக்கெதிராக இந்து தீவிர வாதிகள், காரல் மார்க்ஸ் அவர்களின் பொதுவு டமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டதுபோல் நடித்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் இந்துக் கள், இந்துக்களின் கைகளில் நின்று சிறுபான்மை யினருக்கு எதிராகச் சுழலும் பத்திரிகைத் துறை, பெண்களின் விடுதலைக்காகப் பேராடுவதாகப் பரப்பிக் கொள்ளும் பெண் விடுதலை இயக் கங்கள் – இவை அனைத்தும் ஒன்று திரண்டு ஒரே அணியில் நின்று தங்கள் முழு பலத்தையும் பிரயோகித்தன.

இத்தனையையும் எதிர்கொண்டு வெற்றியை ஈட்டி இருக்கின்றார்கள் முஸ்லிம்கள். இந்த ஷாபானு வழக்கில் முஸ்லிம்களின் முன் ஒரு பெரும் கேள்வி எழுப்பப்பட்டது.

அது, நீங்கள் திருக்குர்ஆனை, திருக்குர்ஆன் கூறுகின்றபடி பின்பற்றுவீர்களா? அல்லது திருக்குர்ஆனில் என்ன சொல்லி இருக்கின்றது என்று நாங்கள் கூறும் விளக்கத்திற்கேற்ப நடப்பீர்களா? இந்தக் கேள்விக்கு முஸ்லிம்கள் எத்தனை எதிர்ப்பும் இழப்பும் வரினும் நாங்கள் திருக்குர்ஆனை அது கூறுகின்றபடி அப்படியே பின்பற்றுவோம் என்று தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

சிலஇந்துநீதிபதிகள்முஸ்லிம்களுக்கெதிரான தோர் குரோத சிந்தனையை நெடுநாட்களாகத் தங்களுக்குள் வளர்த்து வருகின்றார்கள். இந்தக் குரோத சிந்தனையால் அவர்கள் இஸ்லாமியச் சட்டங்களைத் தங்கள் வழிக்கு வரவழைத்து முஸ்லிம்களைத் திசை திருப்ப முயன்று வருகின் றார்கள்.

இத்தனையும் நடந்து கொண்டிருக்கும் போதே ஷாபானு வழக்கில் அவர்கள் தங்கள் தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொண்டார் கள். எங்கள் தனியார் சட்டத்தில் யாரையும் தலை யிட விட மாட்டோம் என்பதைத் தெளிவாகவே உணர்த்திவிட்டார்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவுகள் 125, 127 ஆகியவற்றைத் திருத்திட வேண்டும் என்ற முஸ்லிம்களின் கோரிக்கை. அரசியல் நிர்ணயச் சட்டத்திலிருந்து பிரிவு 44 ஐ உடனேயே அகற்றிட வேண்டும் என்ற முஸ்லிம்களின் கோரிக்கை. இவை அனைத்தும் நியாயமானவையே!

முஸ்லிம்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு முஸ்லிம் பெண்கள் சட்டம் (1986) என்ற ஒரு சட்டத்தை 1986ஆம் ஆண்டு மே திங்களில் நிறைவேற்றியது முற்றிலும் நியாயமானதாகும்.

இது முஸ்லிம்களுக்குக் கிடைத்த பெரிய

வெற்றி என்றாலும் அவர்கள் அதைக் கொண் டாடவில்லை. இந்தியாவின்வரலாற்றில்முஸ்லிம் களை மட்டுந்தான் பிராமணியத்தால் விழுங்கிட இயலவில்லை.

பிராமணியத்தின் அகண்ட வாய்க்குள் சிக் காமல், இழப்புகளை இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டு, தங்கள் தனியார் சட்டத்தைக் காப் பாற்றி வருகின்றார்கள் முஸ்லிம்கள். இதனா லேயே என்னவோ அவர்களை ஒட்டுமொத்த மாக அழிக்க பெரியதொரு சதித்திட்டம் வகுக் கப்பட்டு, அந்தத் திட்டம் படிப்படியாக நிறை வேற்றப்பட்டு வருகின்றது.

இந்தச் சதித்திட்டங்கள் நிறைவேற்றப்பட முஸ்லிம்கள் தங்களைப் பாதுகாகத்துக் கொள்ள சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண் டேயாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப் படுகின்றார்கள்.

சூழ்நிலைகளின் கட்டாயத்தால் அவர்கள் மேற்கொள்ளும் இந்தத் தற்காப்பு நடவடிக்கை களே!

இப்படி முஸ்லிம்கள் எடுத்துக்கொண்ட எல்லா (தற்காப்பு) நடவடிக்கைகளுக்கும் அந்த நடவடிக்கைகளை அவர்கள்பால் திணித்த இந்துக்கள்தான் காரணம். இந்த உண்மையை இந்தியாவின் இன்றைய நிகழ்வுகள் அறிந்த யாரும் மறுத்திட இயலாது.

## இதோ இந்த உண்மைக்கு சில சான்றுகள் :

பசுக்களைஇறைச்சிக்காகஅறுத்திடக்கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டு ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பிந்தைய நாட்களில் அது முஸ்லிம்களுக்கெதிரான ஒரு பெரும் இயக்கமாக மாற்றப்பட்டது.

இதோடு கணபதி பூஜையையும் இணைத்துக் கொண்டார்கள். இந்தப் பூஜா விழாக்களின் போது பள்ளிவாயில்களுக்கு முன்னால் நின்று மேளம் கொட்டி முஸ்லிம்களைக் கொதிப்ப டையச் செய்தார்கள். பின்னர் இந்தப் பூஜை முஸ்லிம்களுக்கெதிரான அரசியல் விழாக்களாக, வன்முறை நாட்களாக மாற்றப்பட்டன.

இத்தனையும் பால கங்காதர திலகர் என்ப வரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடந்தன. இந்த பால கங்காதர திலகரைத்தான் 'லோக மான்யா' என்று அழைக்கின்றார்கள்.

இந்தக் கெடுபிடிகளிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள ஏதாவது செய்தாக வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு முஸ்லி ம்கள் தள்ளப்பட்டார்கள்.

*1893*ல் 'முஹம்மதன் தற்காப்புப் பேரவை' என்றொன்றை ஆரம்பித்தார்கள்.

*1906* ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்து தீவிரவாதிகள், இந்து மகா சபா என்றொரு அமைப்பை ஆரம்பித்தார்கள். இந்த இந்து மகாசபா 'இந்தியா இந்துக்களுக்கே' என்றொரு முழக்கத்தை முன் வைத்தது. இதில் அன்றுவரை இல்லாத இந்து வகுப்பு வெறி பளிச்சிட்டது.

இந்தப் பேராபத்திலிருந்து தங்களைக் காப் பாற்றிக் கொள்ள ஏதாவது செய்தாக வேண்டும் என்று முஸ்லிம்கள் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். ஆக, அதே ஆண்டின் இறுதியில் முஸ்லிம் லீக் உருவானது. *1906* டிசம்பரில் முஸ்லிம் லீக் நாட்டுக்கு அறிமுகமானது.



All India Muslim League 1906

*1923*ல் இந்து திவிரவாதிகள் ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். அதன் பெயர் 'சுத்தி இயக்கம்' அதாவது தூய்மைப்படுத்தும் இயக்கம். எதைத் தூய்மைப்படுத்த..?

அன்றைய நாட்களில் இந்தியாவை ஆண்ட முஸ்லிம் ஆட்சியாளர்கள், கட்டாயப்படுத்தி இந்த நாட்டு இந்துக்களை முஸ்லிம்களாக மாற்றிவிட்டார்களாம். இவர்களை மீண்டும் இந்து மதத்திற்கு மாற்றி அவர்களின் மாசகற்றித் தூய்மையுடையவர்களாக ஆக்க வேண்டுமாம்.

இதே காலக்கட்டத்தில்தான் கங்காதரன் என்ற ஒன்றுபடுத்தும் இயக்கம் ஆரம்பிக்கப்

பட்டது. இந்த இயக்கம் இதே கொள்கையை வேறு வார்த்தைகளால் சொன்னது. இந்த இயக்கங்களைத் தலைமை ஏற்று நடத்தியவர்கள் சுவாமி ஷாதானந்தா என்பவரும் பண்டிட் மதன் மோகன் மாளவியா என்பவரும் ஆவார்கள்.

இந்த இயக்கங்களின் தாக்குதலிலிருந்து தப்பிக்க முஸ்லிம்கள் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கையின் போது முகிழ்ந்தவைதாம் தன்சீம் பேரவையும், தப்லீக் பேரவையும்.

'இந்தி பிரச்சார சபை' என்றொரு ஆரம்பித்து அதன்மூலம் இந்தியைத் திணித்தார்கள். இந்தித் தணிப்புப் போதாதென்று உருது மொழியை பகை மொழியாகக் காட்டி அதனை அழிக்க அனேகம் திட்டங்களைத் தீட்டினார்கள்.

இஸ்லாமிய இலக்கியங்கள் நிறைந்த தங்கள் மொழி ஒழிக்கப்படுமுன் அதனைக் காப்பாற்றி யாக வேண்டும். அதற்காக ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் முஸ்லிம்கள்.

முடிவில் 'உருது அஞ்சுமன்கள்'
ஆரம்பமாயின!

**1916**ல் 'பனாரஸ்' இந்து பல்கலைக் கழகம்' என்றொன்றை ஆரம்பித்தார்கள். இந்தப் பல்லைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஏற்படுத்தப்பட்ட ஆர்ப்பாட்ங்கள்.

முஸ்லிம்கள் தங்களுக்கென ஓர் பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டும் என்று ஏன் நினைக்க வில்லை என்று கேட்பதுபோல் அமைந்திருந்தன.

'அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம்' ஆரம்ப மானது. பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் சட்டம் **1.4.1916**ல் செயலில் வந்தது. அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகச் சட்டம் **1.12.1920**ல் செயலில் வந்தது.

**1909** இல் இந்தியாவில் புதிய தேர்தல் பகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தத் தேர்தல் பகுதிகள் 'மின்றோ மார்லி சீர்திருத்தம்' என்ற பெயரில் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்த மின்றோ மார்லி சீர்திருத்தத்தை ஜின்னா அவர்கள் எதிர்த்தார்கள். இது ஆங்கி லேயர்களின் சதி. இந்தியர்கள் என்று பொதுவாய் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்திய சமுதாயத்தை இந்துக்களாகவும், முஸ்லிம்களாகவும் வகுப்பு வாரியாக பிரிக்க ஆங்கிலேயர்கள் அறிமுகப் படுத்தும் திட்டம் என்று ஜின்னா அவர்கள் அடித்துக் கூறினார்கள்.

சிறந்த தேச பக்தர் மதச்சார்பற்ற தன்மையைச் செயலில் காட்டி வாழ்ந்தவர் ஜின்னா!

இந்த ஜின்னாதான், இந்த மின்றோ மார்லி சீர்திருத்தம் இந்திய சமுதாயத்தை இந்துக்களா கவும் முஸ்லிம்களாகவும் கூறு போட தளம் அதைத்தபோது,

"ஒன்றுபட்டால் வாழ்வோம் / பிளந்து போனால் வீழ்ந்து போவோம்!!"

என்ற ஒற்றுமை முழக்கத்தை முன் வைத்தார்கள்.

இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றாக இணைத்து தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒருமுகப்படுத்திய அந்தப் பேராற்றல்தான் ஜின்னா அவர்களுக்கு "ஒருமைப்பாடு, அமைதி ஆகியவற்றின் தீர்க்கதரிசி" என்ற பெயரை பெற்றுத் தந்தது.

இந்த பெருஞ்சேவையை நினைவு கூரும் வகையில்தான் சரோஜினி நாயுடு அவர்கள் ஜின்னா நினைவரங்கத்தை மும்பையில் நிறுவிட முன் வந்தார்.

ஆங்கிலேயர்களின் சதியை முறியடித்து, இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே அணி யில் நிறுத்திட போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜின்னா அவர்கள் **1939** இல் முஸ்லிம்களுக்குத் தனி நாடு கேட்டிட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஏன், எப்படி?

இதற்கு **1921** முதல் **1938** வரையிலான காலக்கட்டங்களில், தேசியவாதிகள் எனப் பேசிக் கொண்டிருந்த தலைவர்கள் வெளிப்படுத்திய இந்து வெறித்தனமே காரணம்.

இந்தக் காலக்கட்டத்தில்தான், இந்து வெறித் தலைவர்களான லோக மான்யா திலகர், ஷரா னந்தா, மாளவியா, சாவர்க்கர் ஆகியோர் இந்திய தேசிய காங்கிரஸில் மதிப்புமிக்கவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

**1935** ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததும் பல அகடவிகடங்களை அது செயல்

படுத்திற்று.

அவற்றில் சில :

வந்தே மாதரம் என்பதைப் பகிரங்கமாகச் சட்டப் பேரவைகளிலேயே பாடியது. காங்கிரஸ் கட்சிக் கொடியைச் சட்டப் பேரவைகளில் ஏற்றியது. கல்விக் கூடங்கள் போன்ற முக்கிய நிறுவனங்களுக்கு இந்து வெறித் தலைவர்களின் பெயர்களைச் சூட்டியது இந்து ஆச்சாரங்களைக் கல்விக் கூடங்களில் திணித்தது.

இவ்வாறாக, இந்து வெறி இந்திய தேசிய காங்கிரஸை ஆக்கிரமித்தது. இந்த ஆக்கிரமிப்பு முஸ்லிம் தலைவர்களை அவமானப்படுத்தும் அளவுக்கு தலை கால் தெரியாமல் தாண்டவ மாடியது!

இந்து வெறி எந்த அளவுக்கு காங்கிரஸில் தலைக்கேறிற்று என்றால், முஸ்லிம்கள் பல நூற்றாண்டு காலமாய் சொல்லி வரும் தொழுகை அழைப்பை விடுப்பதற்கே ஓர் உத்திரவாதத்தைக் காங்கிரஸிடம் பெற வேண்டியதாயிற்று.

இவையெல்லாம் ஜின்னா போன்றவர்களை உன் மதத்தைப் பற்றி உன் இறைமறையைப் பற்றி நீ ஏன் சிந்திக்கவில்லை என்று கேட்காமல் கேட்டன. இதனால் இவர்கள் இஸ்லாத்தின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள்.


முஸ்லிம்களைக் காப்பாற்றிட திட்டம் தீட்டும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இதன் விளைவாக, மேலை நாடுகளின் எழுச்சியால், நாம் வீழ்ந்து விட்டோம் என்று நினைத்து, உலக முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே பலவீனப்படுத்திக் கொண்டிருந்த காலத்தில்...

இஸ்லாம் மீண்டும் ஒளிவீச முடியும், முஸ்லிம்கள் மீண்டும் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்ற நம்பிக்கைகளை, இந்திய முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல், உலக முஸ்லிம்களுக்கே உணர்த்துகின்ற வகையில் இயக்கம் நடத்தினார்கள் இந்திய முஸ்லிம்கள்.

இத்தனைக்கும் முஸ்லிம்களைக் கட்டாயப் படுத்தியது காங்கிரஸில் பிந்தைய நாட்களில் உருவாகிய இந்து வெறித்தனமே காரணமாகும்!

இந்தியாவின் மிகச் சிறந்த கவிஞர்களுள் ஒருவர் டாக்டர் முஹம்மத் இக்பால். இவர்



யாத்துத் தந்த ஒப்பந்த கவிதை வரிகள்தாம் சாரே ஜஹான்சே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா என்று விரிந்து செல்லும் கவிதை.

இந்த வரிகளால் பாயிரம் கூறப்பட்ட பாடல் வரிகள் தாம் நமது முதல் தேசிய கீதம். இந்த வரிகளில் ஓடிய தேசிய உணர்வையும், பெருமையையும் எந்தப் பாடல் வரிகளும் நமக்குப் பெற்றுத் தந்ததில்லை. இந்தப் பாடல் தேசிய கீதமாய் அங்கீகாரம் பெற்ற ஆரம்ப நாட்களில்நாம் பெருமை பேசினோம். ஆனாலும் இந்தப் பாடலை தேசிய கீதமாய் நீடிக்க விட வில்லை. மாற்றினோம்.

எந்தக் காரணமுமின்றி நாம் மேற்கொண்ட இந்தப் போக்குதான் தேசியவாதியாக இருந்த இக்பால் அவர்களை இஸ்லாமிய அறிஞராக மாற்றிற்று.

இவை அனைத்தும் இந்த நாட்டில் வகுப்பு வாதத்திற்கு வித்திட்டவர்கள் முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் வலிந்து இழுத்தவர்கள் இந்துக்கள்தாம் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டும் சில ஆதாரங்கள் ஆகும்.

“சிலர் முஸ்லிம்களை, அளவுக்கதிகமாக உணர்ச்சிவயப்படுபவர்கள் எனக் குறை கூறுகின்றனர். இதை ஒரு வாதத்திற்காக ஒத்துக்கொண்டால் கூட, அவர்கள் அப்படி உணர்ச்சி வயப்படுவதில் எந்தத் தவறுமில்லை என்பதை உணரலாம்.

தலித் மக்கள் இப்படி அளவுக்கதிகமாக உணர்ச்சிவயப்படாததால்தான், இந்த நாட்டின் உண்மையான மண்ணின் மைந்தர்களான அவர்கள் உயர் ஜாதிக்காரர்களின் நிரந்தர அடிமைகளாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

தலித் மக்களின் அடிமைத்தனத்திலிருந்தும் அவலங்களிலிருந்தும் முஸ்லிம்கள் பாடங்கற்றுக் கொண்டார்கள். நாம் ஒரு நொடி தூங்கி விட்டால் கூட நமது தனித்தன்மைகளை இழந்து விடுவோம், ஆதிக்கவாதிகளின் அடிமைகளாக ஆகிவிடுவோம் என்பதை முஸ்லிம்கள் உணர்ந்து கொண்டார்கள்.

இதேபோல் முஸ்லிம்கள் இன்னொன்றையும் நன்றாக அறிவார்கள். திருக்குர்ஆனுக்கு இந்துக்கள் – இந்து நீதிபதிகள் அவர்கள் பாணியில் விளக்கம் சொல்லும் போக்குக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால் வேதங்களுக்கு விளக்கம் சொல்லி தலித் மக்களை அடிமைப்படுத்தியதைப் போல் நம்மையும், நமது வேதத்தைச் சொல்லியே அடிமைப்படுத்தி விடுவார்கள் (என்பதை முஸ்லிம்கள் நன்றாக அறிவார்கள்)

இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் தங்கள் தனித்தன்மைகளைக் காப்பாற்றிட மேற்கொண்ட அறப்போரிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் நிரம்ப பாடங்கற்றுக்கொள்ள வேண்டியதிருக்கின்றது.

## ஏனைய சிறுபான்மையினரும் முஸ்லிம்களும்

இன்றைக்கு இந்தியா இருக்கின்ற சிக்கலான சூழ்நிலையில் இங்கு நித்தமும் சித்திரவதைகளுக்கும், அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் ஆளாகி நிற்கும் ஏனைய சிறுபான்மையிரான,

கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், புத்தர்கள், கூர்க்காக்கள், சூத்திரர்கள், தலித் மக்கள் – இவர்கள் அனைவரும் முஸ்லிம்களோடு கை கோர்த்து நின்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனெனில், முஸ்லிம்கள்தாம் மிகப்பெரிய சிறுபான்மையினர், நம்பிக்கைக்கு உரியவர்கள், பாதி வழியில் கை விட்டு விட்டுத் தங்கள் சுய நலத்திற்குப் பின்னால் ஓடுபவர்களல்ல. முஸ்லிம்கள் முன் வைத்த காலைப் பின் வைக்கா தவர்கள்.

இந்துத் தீவிரவாதத்தை நேருக்கு நேர் சந்தித்து ஏனைய சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் அரணாக நிற்பவர்கள். முஸ்லிம்கள் வீழ்ந்துபோனால் ஏனைய சிறுபான்மையினர் நொடியில் வீழ்த்தப்பட்டு விடுவார்கள்.

முஸ்லிம்களோடு ஏனைய சிறுபான்மையினர் கைகோர்த்து நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வது, முஸ்லிம்களுக்கு ஆதரவு திரட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு சொல்லப்படுவதல்ல.

ஏனைய சிறுபான்மையினரின் சுயநலத்தையும், நல் வாழ்வையும் மனத்திற்கொண்டே இது சொல்லப்படுகின்றது. முஸ்லிம்கள் மகிழ்ச்சியாக இல்லை என்றால் இந்தியாவும் மகிழ்ச்சியாக இருக்க இயலாது.

தலித் மக்களும், ஏனைய பிற்படுத்தப்பட்ட மக்களும் இன்னுமுள்ள சிறுபான்மையினரும், முஸ்லிம்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினரின் அடிமைகளாக ஆகிவிடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளவும், தங்கள் தனித் தன்மைகளை, பண்பாட்டை, நாகரிகத்தைக் காப்பாற்றவும் மேற்கொள்ளும் முயற்சிகளை அக்கறையுடன் படியுங்கள். அவர்களை ஆதரியுங்கள்.

ஏனெனில் உங்கள் எதிரிகள்தாம் அவர்களுக்கும் எதிரிகள். உங்கள் எதிரியை எதிர்கொள்ளும் அவர்களை ஏன் நீங்கள் ஆதரிக்கக் கூடாது. நீங்கள் தாக்கப்படுமுன்? இங்கே நடந்துகொண்டிருப்பது ஆதிக்கவாதிகளுக்கெதிரானதோர் தற்காப்புப் போர். இதில் நாமனைவரும் ஒன்றாய் ஒரே அணியில் நின்று ஏன் இந்தப் போரைத் தொடுத்திடக் கூடாது?

முஸ்லிம்கள் ஒரு காலத்தில் தங்களுக்கு ஏற்பட்ட சொந்த இழப்புகளையும் பொருட்படுத்தாமல் பிற்படுத்தப்பட்ட , தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும், உதவியாகவும் இருந்திருக்கின்றார்கள். இந்த வரலாற்று உண்மையை யாரும் மறந்துவிட வேண்டாம்.

## முஸ்லிம்கள் செய்த பேருதவிகள்

முஸ்லிம்களுக்கு நேசக்கரம் நீட்டி பொது எதிரியை நேருக்கு நேர் எதிர்கொள்வதில் தலித் மக்களுக்கு மிகவும் முக்கியமானதோர் பொறுப்பும் பணியும் இருக்கின்றது.

முதன்முதலாக அவர்கள் (தலித் மக்கள்) தங்களை முறையாக ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான எல்லா வாய்ப்புகளும் அவர்களுக்கிருக்கின்றன.

அவர்கள் (தலித் மக்கள்) உயர் ஜாதிக்காரர்களின் பாட நூல்கள் வழியாகத் தங்கள் குழந்தைகளுக்குப் பாடங்களைக் கற்றுத்தரக் கூடாது. அவர்கள் அம்பேத்கர் அவர்களின் இலக்கியங்கள், சிந்தனைகள் இவற்றின் வழியாகத்தான் தங்கள் குழந்தைகளைக் கற்பித்து வளர்த்திட வேண்டும்.

இன்று அரசு வேலைகளிலும் பொதுப் பணிகளிலும் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் பாதுகாப்பும், உத்திரவாதமும். ஏதோ உயர் ஜாதிக்காரர்கள் தங்கள் கடந்த கால பாவங்களைக் கழுவுவதற்காக விட்டுக் கொடுத்தவை அல்ல.

இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப்பட்டுள்ள பாதுகாப்பும், உத்திரவாதமும், வீரமும், விவேகமும் நிறைந்த அம்பேத்கரின் போராட்டம்.

அந்தப் போராட்டத்திற்கு உதவியாய் நின்ற முஸ்லிம்களின் உறுதி. இவற்றால் பெற்றவையே!

இந்த வெற்றிதான் புகழ்பெற்ற "பூனா ஒப்பந்தம்" (1932) அம்பேத்கர் தொடுத்த பெரும் போரில் முஸ்லிம்கள் அம்பேத்கர் அவர்களுக்குத் துணையாக நின்று ஆற்றிய பெருந்தொண்டினை வரலாறு ஒரு போதும் மறந்திடாது.

அந்த வரலாற்றை நிச்சயமாக தலித் மக்கள் ஒருபோதும் தங்கள் நினைவை விட்டு நீக்கி விட மாட்டார்கள். முஸ்லிம்களின் இந்தப் பெருந் துணை 1931இல் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் சுடர்விட்டு உலகெங்கும் பிரகாசித்தது.

1931இல் நடைபெற்ற இந்த வட்டமேஜை மாநாட்டில் இந்துக்களின் பிரதிநிதிகள், முஸ்லிம்களின் பிரதிநிதிகள், சீக்கியர்களின் பிரதிநிதிகள், கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகள், ஆங்கிலோ இந்தியர்களின் பிரதிநிதிகள், ஐரோப்பியர்களின் பிரதிநிதிகள், தலித் மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்த வட்டமேஜை மாநாட்டில் இந்துக்களின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட காந்தியடிகள் தலித் மக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்வதைத் தடுப்பதில் அயராது உழைத்தார்கள்.

ஆனால் காந்திஜியின் எதிர்பார்ப்பிற்கு எதிராக இந்துக்கள் அல்லாத (அதாவது) சிறுபான்மையினர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

இதில் தலித் மக்களும் இணைந்து கொண்டார்கள். இந்த இந்துக்கள் அல்லாதவர்கள் அனைவரும் ஒன்ற சேர்ந்து ஒரு பொது விண்ணப் பத்தைச் சமர்பித்தார்கள்.

இதில் தலித் மக்களின் கோரிக்கைகளுக்கும் அவர்களின் செயல் திட்டங்களுக்கும் முஸ்லிம்கள் ஆதரவு தரக்கூடாது என்று கோரிக்கை வைத்தார் காந்திஜி. தன்னால் இயன்ற வரை முஸ்லிம்கள் தலித் மக்களை ஆதரிப்பதைத் தடுத்திட முயன்றார் மகாத்மா காந்தி. ஆனால் அது அவரால் முடியவில்லை.

முஸ்லிம்கள், நாங்கள் தலித் மக்களை ஆதரிப்பதிலிருந்து பின் வாங்கவே மாட்டோம் என்று அறிவித்துவிட்டார்கள். தனது ஏனைய முயற்சிகள் தோற்றுப்போகவே பேரம் பேச ஆரம்பித்தார். அவ்வளவு பெரிய காந்தியடிகள். முஸ்லிம்கள் வட்டமேஜை மாநாட்டில் வைக்க இருக்கும் 14 கோரிக்கைகளையும் ஆதரிக்கின்றேன்.

அதற்கு கைமாறாக தலித் மக்களை அதாவது தீண்டத்தகாத மக்களை முஸ்லிம்கள் ஆதரிக்கக் கூடாது. அதற்கான உத்திரவாதத்தைத் தர வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்தப் பெரும் பேரத்திற்கு முஸ்லிம்கள் தாழ்த்தப்பட்டு அமுக்கப்பட்டு தீண்டத்தகாதவர்கள் என முத்திரை குத்தப்பட்டு அவமானப் படுத்தப்படும் அந்த மக்களின் இழிவு நீங்க, நாங்கள் அவர்களை ஆதரித்தே தீருவோம்.

அவர்களுக்கு துணை நிற்பதில் பின் வாங்கவே மாட்டோம். இதில் நாங்கள் வைக்கும் 14 கோரிக்கைகளும் ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்பட்டாலும் சரியே என ஒரே குரலில் உறுதியாகக் கூறிவிட்டார்கள்.

முஸ்லிம்கள் தலித் மக்களுக்கு காட்டிய ஆதரவுக்கு முன் காந்தியாரின் முயற்சி பொடிந்து போயிற்று. தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகப் பாதுகாப்பைப் பெற்றார்கள். இந்தப் பாதுகாப்பை உடைக்க இன்றும் இயலவில்லை.



முஸ்லிம்கள் செய்த இந்த மகத்தான உதவியை அம்பேத்கர் அவர்கள் இப்படி எழுதுகின்றார் :

“அவர் (காந்திஜி) முஸ்லிம்களைச் சந்தித்துப் பேசி அவர்களைத் தீண்டத் தகாத மக்களுக்கு எதிராக திருப்பிவிடுவதற்குக் கொஞ்சமும் தயங்க வில்லை. இதற்காக அவர் இந்திய தேசிய காங்கிரஸ், இந்து மகாசபை, சைமன் கமிஷன் ஆகியவற்றால் நிராகரிக்கப்பட்ட முஸ்லிம் களின் 14 கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்க ஒத்துக் கொண்டார். இதற்காக திரு. காந்தி பொதுமக்களின் கருத்துக்களையே ஒன்று திரட்டி அதை முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பத் தயாராக இருந்தாலும் கூட முஸ்லிம் கள் தீண்டத்தகாத மக்களை ஆதரிப்பதிலிருந்து பின்வாங்க மறுத்துவிட்டார்கள்.

பிரிதோர், இடத்தில் பாபா சாஹேப் அம்பேத்கர் அவர்கள் முஸ்லிம்கள் தந்த தெளிவான ஆதரவைப் பின்வரும் சொற்களால் ஏற்றுக்கொண்டு நன்றி செலுத்துகின்றார்.

காந்தி அவர்கள் மேற்கொண்ட Epic Fast என்ற உண்ணாவிரதம் குறித்து அம்பேத்கர் அவர்கள் செப்டம்பர் 19, 1932 அன்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

“முஸ்லிம்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்கள் இதுபோன்ற கறுப்பு நடவடிக் கைகளுக்கு ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இப்படி மறுத்துவிட்டதன் மூலம் அமுக்கப்பட்ட மக்களை மிகப் பெரியதோர் அழிவிலிருந்து காப்பாற்றி இருக்கின்றார்கள். காந்தியுடன் முஹம்மதியர்களும் சேர்ந்து அமுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை எதிர்த்திருந்தால் அது அமுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பெரும் அழிவையே ஏற்படுத்தி இருக்கும்.

இதேபோல் இன்னொற்றையும் தலித் மக்கள் நினைவில் நிறுத்த வேண்டும். பாபா சாஹேப் அம்பேத்கர் அவர்களை மக்கள் மாமன்றத் திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பியவர்கள் முஸ்லிம் கள்தாம். வங்காளத்திலிருந்து அவர்கள் அம்பேத் கர் அவர்களை மக்கள் பேரவைக்கு தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள்.

தலித் மக்களின் மங்காத நினைவாக இன் னொன்றும் இருந்திட வேண்டும். அது, ஔரங்கா பாத்தில் அம்பேத்கர் அவர்கள் நிறுவிட நினைத்த கல்வி நிறுவனத்திற்குத் தேவையான நிதியை அள்ளித் தந்ததும், அந்த நிறுவனங்களை நிறுவிட தேவையான நிலத்தை இலவசமாகத் தந்ததும் ஹைதராபாத் நிஜாம் அவர்கள்தாம்.

வட்டமேஜை மாநாட்டின் போதும், அதற்கு முன்னும், பின்னும் தலித் மக்களுக்கு முஸ் லிம்கள் செய்த உதவியும், அரவணைப்பும் தலித் மக்களுக்கு அளவில்லாத பலத்தைத் தந்தது.

இன்றைக்கு எழுந்துள்ள சிக்கல் நிறைந்த

சூழ்நிலையில் முஸ்லிம்களோடு கை கோர்த்து நின்று அவர்களுக்கு முழு ஆதரவையும் (தலித் மக்கள்) தந்து, அன்று முஸ்லிம்கள் செய்த பேருதவிக்குக் கை மாறு செய்திட வேண்டியது தலித் மக்களின் தலையாயக் கடமையாகும்.

முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருப்பதின் மூலம் தலித் மக்கள் தங்களுக்குத் தாங்களே ஆதரவு தேடிக் கொள்கின்றார்கள் என்றே பொருள்.

இக்கட்டான சூழ்நிலையில் துணை நிற்பதில் முஸ்லிம்கள் நேர்மையானவர்கள், விலை போகா தவர்கள், உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் போராடுபவர்கள். இந்தப் போராட்டத்தில் நெஞ்சுரத்தோடு நிற்பவர்கள்.

தலித் மக்களிடமும் இதே நன்மைகள் உண்டு. ஆகவே இருவரும் இணைந்து நின்றால் பொது எதிரி பொசுங்கிப் போவான்..

இது ஜனநாயகம் – குடியாட்சி முறையின் யுகம்! இங்கே எண்ணிக்கைகள் தாம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

முஸ்லிம்கள், தலித் மக்கள், ஏனைய பிற்படுத் தப்பட்ட மக்கள் (OBCS) இன்னுமுள்ள சிறு பான்மையினரான கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே அணியில் நின் றால் நிச்சயமாக அவர்கள்தாம் பெரும்பான்மை நாம் அனைவரும் ஒரே அணியில் நின்றால் பொது எதிரியை, அதாவது ஏதேச்சதிகாரம் செலுத்த வருபவர்களை ஒரே நொடியில் வீழ்த்திவிடலாம்.

இந்த ஒற்றுமையும் ஒன்று திரண்ட சக்தியும் கிராமப்புறங்களில் நிறைய பலன் பயக்கும். இந்தக் கிராமப்புறங்களில்தான் தலித் மக்களும் முஸ்லிம்களும் இந்த வெறியர்களால் விரட்டப் படுகின்றார்கள், வெட்டப்படுகின்றார்கள்.

தலித் மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த இடத்திலும் முஸ்லிம்களால் தலித் மக்களுக்கு எந்தத் தொல்லையுமில்லை.

அதேபோல் இரு சமுதாயத்திற்கிடையேயும் எந்த முரண்பாடும் இல்லை. தலித் மக்கள் இந்துக்களல்ல. அவர்களும் முஸ்லிம்களைப் போல் புலால் உண்பவர்களே!

வேறு எந்தச் சமுதாயத்தையும் விட நமக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நெருங்கிய பல உற வுகள் உண்டு. முஸ்லிம்களின் 80% பேர் தலித் மக்களாக இருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு முஸ்லிம்களாக மாறியவர்கள்தாம்.

## இஸ்லாம் ஓர் சமூக விடுதலை இயக்கம்

இந்த இந்தியா இந்துக்கள் – இந்துக்கள் அல்லாதவர்கள் என்ற அடிப்படையில் பிரியுமே யானால் தலித் மக்கள் இந்துக்கள் அல்ல. ஆகவே அவர்கள் இந்துக்கள் அல்லாதவர்கள் அணியில் தவறாமல் இடம் பெறுவாரக்ள்.

இந்தப் பிரிவும் – இந்தப் பிரிவின் அடிப்படை யிலான போராட்டமும் ஆரம்பமாகிவிட்டன. இது நீண்ட நெடியதொரு காலம் நீடிக்கப்போ கின்றது.

தொன்மைமிக்க பாபரி பள்ளிவாசலை கோயிலாக மாற்றிவிட்டதையும் இன்னும் பல பள்ளிவாசல்களைக் கோயிலாக மாற்றத் திட்டம் போட்டிருப்பதையும் பாருங்கள். இவை மேலே சொன்ன போராட்டத்தின் பகிரங்கமான அறிவிப்பு.

இந்தியாவின் உள்புறச் சூழல் இப்படி இருக்க உலக அரங்கில் என்ன நடக்கின்றது என்பதை நாம் சற்று ஏறெடுத்துப் பார்ப்போம். இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டு ஈரானில் ஏற்பட்ட புரட்சி அதை அடுத்து அங்கு அமைந்த இஸ்லாமிய குடியரசு.

இவை அனைத்தும், இஸ்லாம் உலக அரங்கில் ஓர் அரசியல் கொள்கையாக மீண்டும் தலையெடுத்து விட்டது என்பதைப் பறை யறிவித்தது.

இது கண்டு அஞ்சி, இஸ்லாம் மீண்டும் ஓர் அரசியல் கொள்கையாக தழைத்துவிடாமல் தடுக்க திட்டம் தீட்டியுள்ளார்கள். இந்த உலகில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள்.

இஸ்லாம் வட்டியைத் தடுக்கின்றது – எதிர்க் கின்றது. அதுபோலவே மனி தன் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்துவதையும் அடிமைப்படுத்து வதையும் எதிர்க்கின்றது.

ஒரு மனிதனை இன்னொரு மனிதன் சுரண்டுவதையும், ஒரு நாட்டை இன்னொரு நாடு சுரண்டுவதையும் இஸ்லாம் தடுக்கின்றது. மறுக்கின்றது, எதிர்க்கின்றது வட்டி, சுரண்டல்

இன்னொரன்ன அநீதிகளை எதிர்க்க என்ன விலை தந்திடவும் இஸ்லாம் தயங்குவதில்லை.

வட்டி, அடுத்த நாடுகளைச் சுரண்டி வாழ்வது ஆகியவற்றையே (அடிப்படை) ஜீவாதாரமாகக் கொண்டு வாழும் முதலாளித்துவ நாடுகளால் இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாய் உருவாவதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. ஆகவே ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய அரசு கண்டு வெதும்புகின்றார்கள். அன்று அரேபியாவில் இறைவனின் திருத்தூதர் அவர்கள் வட்டி, சுரண்டல், ஆதிக்க ஆணவம் இவற்றிற்கெதிரா கத்தான் போராடினார்கள். இவை கிஞ்சிற்றும் இல்லாத ஓர் சமுதாயத்தை அமைத்தார்கள்.

இஸ்லாம், மக்கா வாழ் மக்களிடம் குடி கொண்டிருந்த பணத்திமிர், இனத்திமிர், ஆதிக்க திமிர் அனைத்தையும் நொறுக்கி அவர்களைப் பண்புமிக்க மனிதர்களாக மாற்றிற்று.

ஈரானில் ஆட்சியில் அமர்ந்த இஸ்லாமிய அரசையும், அதன்மூலம் இஸ்லாம் உலகில் ஓர் அரசியல் கொள்கையாக மீண்டும் வளருவதை யும் முதலாளித்துவ நாடுகளால்தான் பொறுத்துக் கொள்ள இயலவில்லை என்றால், கம்யூனிஸ நாடுகளாலும் அதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. குறிப்பாக ரஷ்யாவால் இதைத் தாங்கிக் கொள்ளவே இயலவில்லை.

ஏனெனில் ரஷ்யா ஏராளமான முஸ்லிம் களைத்தான் தன் அடிவயிற்றில் கட்டிக்கொண்டு வாழ்கின்றது. அந்த முஸ்லிம்கள் நிதிர்ந்தால் அது நிமிடத்தில் இஸ்லாத்தின் பிடியில் வந்துவிடும்.

இப்படி இஸ்லாத்தை கண்டு வல்லரசுகளே அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும்போது, இங் குள்ள இந்து வெறியர்களுக்கும் அது குளிரைக் கொடுத்து நடுங்க வைத்ததில் ஆச்சர்யமில்லை.

இந்த இந்தியாவில் வாழும் இந்து வெறி யர்கள், இஸ்லாம், தலித் மக்களின் விடுதலைக் கான ஒரே மார்க்கமாகவும் ஏனைய பிற்படுத் தப்பட்ட மக்களின் இரட்சகனாகவும் இந்தியா வுக்குள் தலை நிமிர்ந்து நின்றுவிடும் என்று அஞ்சுகின்றார்கள்.

குறிப்பாக இஸ்லாத்தின் சமூகநீதி, ஆட்சி யில் ஏறி அமுலுக்கு வரும்போது இந்தியாவில் தாண்டவமாடும் ஜாதி வேற்றுமையை உடைத் தெறிந்து அனைவரையும் சமமாக்கிவிடும்.

இந்த சமத்துவத்தால் கவரப்படும், தலித் மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் இஸ்லாத்தில் இணைந்திடுவார்கள். இங்குள்ள இந்துக்களால் ஜாதி அமைப்பில்லாத ஒரு சமுதாயத்தை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

இந்தியாவுக்குள் வந்த கம்யூனிஸத்தின் மேலும் ஜாதி அமைப்பு ஏறி அமர்ந்து கொண்டது. ஆகவே இந்தியாவில் இஸ்லாம் முதலாளித்துவவாதிகளாலும், கம்யூனிஸவாதி களாலும், வகுப்புவாதிகளாலும் நிச்சயமாகத் தாக்கப்படும்.

இஸ்லாம் ஓர் அரசியல் கொள்கையாகத் தலையெடுப்பதை முளையிலேயே கிள்ளி எறிந்திட ஒரு பெரும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது..

ஆதலால்தான் இன்று இந்தியாவில் முஸ்லிம்களைக் கண்டால் வெட்டுவோம், விரட்டுவோம் என்றெல்லாம் கோஷமிடுகின்ற னர். திருடர்கள் தங்கள் நிழலைக் கண்டு நிலை நடுங்குகின்றார்கள்.

## முஸ்லிம்களுக்கோர் எச்சரிக்கை!

முஸ்லிம்கள், எதிரியை தாங்கள் மட்டுமே தனித்து நின்று எதிர்த்து வென்று விடலாம் என்று எண்ணினால் அது மிகப்பெரிய தவறு.

அவர்களால் அது முடியாது. முஸ்லிம்கள் எந்த அளவுக்கு இந்த நாட்டில் வெறுக்கப்படுகின்ற ார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

இந்து தீவிரவாதிகள், பத்திரிகைகள் வாயிலாகவும் தங்களால் திரித்து எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் வாயிலாகவும், முஸ்லிம் களுக்கெதிராக மொத்த சமுதாயத்தின் கோபத் தையும் திருப்பி விட்டிருக்கின்றாரக்ள். இந்தப் பொய் பிரச்சாரத்தில் தலித் சகோதரர்களே பெருமளவில் வீழ்ந்திருக்கின்றார்கள்.

ஆகவே தலித் மக்களைப் போல் பிற்படுத் தப்பட்ட மக்களைப் போல் அல்லல்களுக்கு ஆளாகி நிற்கும் முஸ்லிம்களின் நன்மையைக் கருதி முஸ்லிம்களைக் கோருகின்றேன். தலித் மக்களையும் உடன் இணைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தலித் மக்களுக்கு அவர்களின் பழைய வரலாற்றை எடுத்துச் சொல்லுங்கள்.

ஆசிரியர்களின் வருகைக்கு முன்னால்

அவர்கள் எத்துணை வீரம் செறிந்த சமுதாயமாக இருந்தார்கள் என்பதை எடுத்து உணர்த்துங்கள்.

அவர்களை, ஆசிரியர்கள் எப்படி எப்படி யெல்லாம் பலவீனப்படுத்தினார்கள் என்பதை விளக்கிச் சொல்லி புரிய வையுங்கள். முஸ்லிம் களின் பணமும் அறிவும் தலித் மக்களுக்கு உதவ வேண்டும்.

இந்தியாவின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் காப்பாற்றப் பட வேண்டும் என்றால் முஸ்லிம் களும் தலித் மக்களும் ஒன்றுபட்டு ஒரே அணியில் நின்று அயராது உழைத்திட வேண்டும். இல்லையேல் இந்தியா உடைந்து போகும்.

மீனாட்சிபுரம் மதமாற்றங்களுக்குப்பின், தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட 'சமத்துவ சகோ தரத்துவ சங்கம்' 'முஸ்லிம் தலித் சுரக்ஷா மகா சங்கா' என்ற பெயரில் மகாராஷ்டிராவில் அமைக்கப்பட்ட சங்கம், "ஐக்கிய சிறுபான்மை யினர் அணி" என்ற பெயரில் அஸ்ஸாமில் அமைக்கப்பட்டுள்ள இயக்கம், பெங்களூரில் அமைக்கப்பட்டுள்ள "முஸ்லிம் தலித் கூட்டணி" – இவை அனைத்தும் இந்தியாவின் வகுப்புவாத வரலாற்றில் வரையிட்டுக் காட்டப்பட வேண்டி யவையாகும்.


மகிழ்ச்சி தரத்தக்க விதத்தில் இவை அனைத் திலும் முதல் முயற்சியும் முனைப்பும் முஸ்லிம் களிடமிருந்து வந்ததே! இதுபோன்ற ஒற்றுமை அமைப்புகளை, தற்காப்பு இயக்கங்களை முஸ்லிம்களே முன்னின்று தொடர்ந்து ஏற்படுத் திட வேண்டும்.

சிறுபான்மையினர் அனைவரும், அநியாயத் திற்குள்ளாகி நிற்கும் அனைவரும் ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!

– நன்றி : தலித் வாய்ஸ்

## FOLLOWUP

**"வைகறை வெளிச்சம்" டிசம்பர் – 2020 இதழில், ஆனந்த் டெல்டும்லே அவர்களின் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம்.**



கட்டுரையின் முடிவில் ஆனந்த் டெல்டும்லே ஓர் ஆறிமுகம், என்ற தலைப்பில் பல செய்திகளைத் தந்தோம். அவர் சிறந்த அறிவாளர், பேச்சாளர், சிந்தனையாளர், ஆய்வாளர்.

அதில், அவர் மோடி அரசால் அநியாய மாகக் கைது செய்யப்பட்டிருப்பதையும் குறிப்பிட்டிருந்தோம். சிறைப்பட்ட நிலை யிலும் அவர் தலீத் விடுதலைக்கான தனது முயற்சிகளைக் கைவிட வில்லை. சிறையிலிருந்து கொணடே தன்னால் முடிந்ததை தொடர்ந்து செய்து வருகின்றார்.

இந்தப்பின்னணியில் அவர், இந்த வருடத்தின் (2020) நாயகர் என்ற சர்வதேச விருதைப் பெறுகின்றார். – இதனை "RADICALDESI" என்ற சர்வதேச இதழ் அறிவித்துள்ளது.

விருதை வழங்கியதற்கான காரணத்தைச் சொல்லும் போது, "For Courageously Speaking out against, State Violence and Repression"

அதாவது, "அரசின் வன்முறை, அடக்குமுறை ஆகியவற்றிற்கு எதிராக நெஞ்சுரத்தோடு பேசிய தற்காக" என அறிவித்துள்ளது. (ஆதாரம் : Sabrag India 10th Dec - 2020)

ஆனந்த் டெல்டும்லே அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பேத்தியை திருமணம் செய்திருப்பவர். அவரை 2020 வருடம் அம்பேத்கர் பிறந்த நாளில் கைது செய்தார்கள். "ஊபா" என்ற தடை செய்யப்பட்ட செயல் களின் தடை சட்டத்தின் கீழ் சிறை யில் அடைத்தார்கள். இந்த 'ஊபா' பாய்ந்து விட்டால் என்னதான் அப்பாவியாக இருந்தாலும், 6 மாதம் பிணை கிடையாது.

சர்வதே அளவில் அழுத்தங்கள் தந்தபோதும் அவருக்குப் பிணையும் நீதியும் மறுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், பாசிச ஊடக பயங்கரவாதிக்கு உடனேயே – பிணை – அதுவும் உச்சநீதிமன்றமே வழங்குகின்றது. இது சாதாரண விசாரணை நீதிமன்றத்தின் வேலை.

அநியாயத்திற்கு எதிராக எழுந்து நின்று பேசினால் உலக அரங்கில் விருது.

இந்தியாவில் சிறை. இதுதான் மோடி அரசு!

- MGM



மகளிர் மன்றம்...

# பெண்களின் நிலை இஸ்லாத்திற்கு முன்னும் பின்னும்

“பெண்கள் வாழ்க்கையின் சிறந்த பகுதி” என்றொரு அடைமொழியை அறிமுகப் படுத்தியதே இஸ்லாம் தான். The Better Half

இதன்மூலம் அவளுக்கொரு சிறப்பையும் அந்தச் சிறப்பின் அடிப்படையில் ஓர் கண்ணி யத்தையும் வழங்கிற்று இஸ்லாம்.

பெண்களின் தனித்தன்மைக்கு தகத்தகாய மாய அங்கீகாரத்தை வழங்கிற்று இஸ்லாம்.

பெண்களின் கண்ணியத்தை உயர்த்திட வேண்டும் என்றால் ஆண்களை மட்டம் தட்டிட வேண்டும், ஆண்களின் கண்ணியத்தை தாழ்த்திட வேண்டும் என்ற நிலைகள் இஸ்லாத் திற்கில்லை.

இஸ்லாம் இந்த உலகுக்கு வருவதற்கு முன்னால் பெண்களுக்கு சமுதாய அரங்கில் எந்த அந்தஸ்தும் இருக்கவில்லை.

அவர்கள் அங்காடியில் அறைகூவி விற்கப் படும் பொருள்களைப் போலவும், தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளப்படும் போகப் பொருளாகவும் அவர்கள் நடத்தப்பட்டார்கள்.

ஆடவர்கள் எண்ணற்ற பெண்களோடு ஆடி மகிழ்ந்தார்கள்.

எத்தனை பெண்களை மணமுடித்துக் கொள்ளலாம் என்பதற்கு எந்த வரையறையும் இருக்கவில்லை.

பெண்களை – மனைவியரை தங்கள் விருப்பம் போல் மணந்துகொள்ளலாம் என்பது மட்டுமல்ல, தாங்கள் விரும்பாதபோது எடுத்து வீசிடலாம் என்றொரு நிலையும் இருந்தது.

அடிமை முறையும் – ‘வைத்துக்கொள்ளும்’ முறையும் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட பழகக் வழக்கங்களாக இருந்து வருகின்றன.

இந்த முட்டாள்தனங்களையும், முரட்டு சமுதாய வழக்கத்தையும் இஸ்லாம் எதிர்த்தது. எடுத்து வீசியது சமுதாய வழங்கங்களிலிருந்து!

பெண்களுக்கென ஒரு பொருளாதார தனித் தன்மையை வார்த்தெடுத்துத் தந்தது இஸ்லாம்.

வாரிசுரிமை, சொத்தில் பங்கு, பெற்றோர் களின் சாத்தில் மட்டுமல்ல, சொந்த பந்தங்களின் சொத்திலும் பங்கு உண்டென உறக்க முழங்கி யது இஸ்லாம். உறவின் முறைகளிடமிருந்து உற்ற பங்கை பெற்றும் தந்தது.

தந்தை, தாய், கணவனின் சகோதரர்கள் இவர் களின் சொத்துக்களில் அவளுக்கு உறுதியான பங்கிருந்தது.

திருமணம், மணவிலக்கு இவற்றில் அவளு டைய விருப்பத்திற்கு முதலிடம் தந்தது. இந்த நிலைகளிலும் அவளுடைய விருப்பம் தனித் தன்மை – சுதந்திரம் இவை பாதுகாக்கப்பட்டன.

அன்று ஆண்கள் எண்ணற்ற பெண்களை வைத்துக் கொள்ளும் பழக்கத்தை யுடையவர்களாக இருந்தார்கள்.

இத்தனை பெண்கள் வரைத்தான் நீங்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று அந்த எண்ணற்ற நிலைக்கு அணை போட்டது இஸ்லாம்.

இதன்மூலம் அவள் உடல்மேல் நடந்த ஆணாதிக்கத்தை உடைத்தது இஸ்லாம்.!

உடலுறவு உரிமையை அவருக்கு மீட்டுத் தந்தது இஸ்லாம். ஆண்களின் அளவற்ற உரிமையை மட்டுப்படுத்தியது இஸ்லாம்.

நாகரிகத்தின் நயத்தகு முன் மாதிரிகள் என நம்பப்படும் மேலை நாடுகளில் இன்றளவும் கண்டவனைக் கொள்ளலாம் என்ற ஒரு நிலை இருப்பதை நாமறிவோம். இதுபோன்ற பழக்கங்

களை, வழக்கங்களை நாங்கள் அங்கீகரிக்க வில்லை. – அவை எங்கள் சட்டங்களுக்குப் புறம் பானவை எனக் கூறிக் கொண்டே அவர்கள், இந்த ஒழுக்கக்கேட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.

## அறிவைப் பெறும் அடிப்படை உரிமை

பெண்கள் கல்வி கற்கவும், அறிவைத் தேடிப் பெறவும் அறிவுறுத்துகின்றது இஸ்லாம்.

அறிவுறுத்துவதோடு நின்றுவிடவில்லை இஸ் லாம். ஆக்கமும் ஊக்கமும் தருகின்றது இஸ்லாம்.

அறிவைப் பெறுவதில், பெற வேண்டியதிலும் ஆண்களும் பெண்களும் ஒரே நிலையில் கடமையாற்றிட வேண்டியவர்கள். தொட்டில் முதல் புதை வரை அறிவை தேடிடுவது ஆண், பெண் இருபாலருக்கு கடமையாகும்.

உண்மையைச் சொன்னால் பெண்களை ஆண்களுக்கு இணையான துணையாயக மாற்றிட இஸ்லாம் ஏற்படுத்தித் தரும் நெறிமுறைகள் ஏராளம்! தாராளம்!!

பெண்களுக்கு இத்துணை முக்கியத்துவம் தந்த மார்க்கம் ஒன்றை இந்த உலகில் பார்த்திட இயலாது.

வரலாறு முழுவதும் கேளிக்கைப் பொருளாக பார்க்கப்பட்டு பந்தாடப்பட்ட அவளது உரிமை களை உறுதிபடுத்தி ஆண்களுக்கு அவளொன்றும் சளைத்தவளில்லை, என்பதை நிலைநிறுத்திய மார்க்கம் இஸ்லாம் மட்டுந்தான்.

இறைவன் தன் அருள்மறையில் இப்படி அறிவிக்கின்றான் :

“மனிதர்களே! (நீங்கள்) உங்கள் இறை வனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியை யும் படைத்தான். பின்னர் அவ்விருவரிலிருந்து, அனேக, ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்திப்) பரவச் செய்தான்.

ஆகவே அல்லாஹ்வை பயந்து கொள்ளுங் கள் ; அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக் கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்.

“....(உங்கள்) இரத்தங்கள் கலப்புடைய உறவினர்களையும் ஆதரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாக இருக்கின்றான்.” (அல்குர்ஆன் – 4:1)

பெண்களையும், ஒரே ஆன்மாவிலிருந்தே படைத்தோம் என இஸ்லாம் உரக்க முழங்கு கின்றது. ஆனால், மேலை நாட்டு மேதாவிகள் சிலர் இஸ்லாம் பெண்களுக்கு ஆன்மா என் றொன்று இல்லை என்று இட்டுக்கட்டுகின்றனர். இவர்கள் இஸ்லாத்தின் மேல் கொண்ட காட்டம் கசப்பும், இஸ்லாம் செய்த அடிப்படை பிரகட னங்களைக் கூட கண்டுகொள்ள இஸ்லாமல் கண்களை மறைத்துவிட்டன.

அறிவில், அன்பில், பண்பில், ஒழுக்கத்தில், ஆன்மிகத்தில் ஆண்களையும் பெண்களையும் ஒன்று போலவே பாவிக்கின்றது இஸ்லாம்.

இத்தோடு நிற்கவில்லை, இறைவன், வகுத்து வழங்கிய மார்க்கமாம் இஸ்லாம். பதிநான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே அவர்களின் ஆன்மாவையும், ஆத்மிக ஆற்றல்களையும் அறிவித்த இஸ்லாம்.

அவர்களுக்குச் சொத்துக்களில் பங்குண்டு, பெற்றப் பங்குகளை தங்களுக்கென வைத்துக் கொண்டு பராமரிக்கின்ற உரிமையுண்டு எனப் பிரகடனப்படுத்தியது.

அத்தோடு இல்லறம் சிறக்க நல்லறம் பேணப் பட பெண்களின் பங்கு மிகவும் அவசியம். அவசியம் மட்டுமல்ல ஆண்களுக்கு நிகரானது என்று அறிவுறுத்திய மார்க்கம் இஸ்லாம். உலகி லுள்ள இலக்கியங்கள் இன்றளவும் பயன்படுத்தி இருக்காதே சொல்லாட்சியை, சொல்லழகை பிரயோகித்தது இஸ்லாம்.

இலக்கிய வனப்பும் வளமும் கொழிக்கும் வான்மறை இஸ்லாம். இப்படி வருணித்தது பெண்களின் பாங்கான பங்கை!


“....அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக் கின்றீர்கள்...” (அல்குர்ஆன் – 2:187)

ஆரம்ப அறிவைப் பெற்ற ஒருவன்கூட ஆடை நமக்கு அழகையும், பாதுகாப்பையும் கண்ணியத்தையும் தருகின்ற என்பதை அறிவான்.

ஆடை இல்லாதவன்...? நிலை என்ன..? என்பதை அனைவரும் அறிவோம். இத்துணை உயர்ந்தொரு நிலையைப் பெறுகின்றாள் பெண். இஸ்லாமிய சமுதாய அமைப்பில்.

ஆணும் பெண்ணும் அந்த ஆடையை மறைக்கும் மானத்தையும் போல நெருக்கமான வர்கள் என்பதை இத்துணை சொல்லழகால் வர்ணித்த ஒரே வேதம் அல்குர்ஆன்தான்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.




# மறதியை வெல்ல மூளைக்கு வேலைக் கொடுப்போம்..!

உடலுக்கு உடற் பயிற்சி செய்கிறோம். மூளைக்கு? இந்த உலகிலிருந்து விடை பெறும் போது எல்லாவற்றையும் போலவே நம் மகத்தான மூளையையும் விட்டுச் செல்லவே போகிறோம். அதுவரை நம் மூளை ஆரோக்கிய மாக இருக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் மூளைக்கு வொர்க் அவுட்!

மூளைக்கு வேலை கொடுக்காமல் இருந்தால் என்ன ஆகும்? வயதாக ஆக மறதி அதிகமாகும். கவனம் செலுத்துவது கடினமாகும். முடிவுகள் எடுப்பதில் குழப்பம் கூடும். அல்ஸீமர் பிரச்சனை வரை கொண்டு செல்லும்.

## மூளைக்கு வேலை கொடுக்கும் வழிகள்

- குறுக்கெழுத்துப் புதிர் / சுடோகு
- ஸ்க்ராப்பிள்
- செஸ்
- புதிய மொழி கற்றுக் கொள்ளுதல்
- புதிய பொழுது போக்குகளில் ஈடுபடுதல்

“ஆனால், இந்த வயதில் இந்த விஷயங்களில் ஆர்வம் வராதே” என்கிறீர்களா? சரி... பரவா யில்லை. சுவாரசியமான வேறு இரண்டு வழிகள் இருக்கின்றன.

முதல் வழி... பரிசோதனை செயல்பாடுகள், இது ஏதோ ஆய்வுக்கூட சமாச்சாரம் இல்லை. இதில் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், போன் நம்பர் டயல் செய்தல், கம்ப்யூட்டர் மவுஸ் படுத்துதல், ஷூ வேஸ் கட்டுதல், பல் துலக்குதல், முதுகில் சோப்பு போடுதல் போன்ற எளிமையான விஷயங்கள்தான்.

இவையெல்லாம் என்ன பெரிய விஷயமா? அன்றாடம் செய்பவைதானே?

ஆமாம்... ஆனால், இவற்றை உங்கள் வலது கைக்குப் பதிலாக இடது கையால் செய்ய வேண் டும். நீங்கள் இடது கைப் பழக்கம் உடையவராக இருந்தால். வலது கையை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆரம்பத்தில் சற்று சிரமமாகத்தான் தெரியும். ஆனால், ஒரே வாரத்துக்குள் இது நமக்கு எளிதாக விடும்.

இதேபோல் கண்களை மூடிக்கொண்டே துணி மடித்து வைக்கப் பழகுங்கள். சாப்பிடும் போது பேசாமல், சைகைகளை மட்டும் கொண்டு தகவல் பரிமாற்றம் செய்யுங்கள். இப்படி வழக்கமான செயல்பாடுகளையே புதிதாக மாற்றி பரிசோதனை முயற்சிகளைச் செய்யுங்கள்.

இரண்டாவது வழி... ‘லேட்டரல் திங்கிங்’ என்கிற பக்கவாட்டுச்சிந்தனை, ஒரு சிக்கலையோ புதிரையோ நெரடியாக அணுகாமல், வேறு வழிகளில் யோசித்து தீர்ப்பதுதான் இது.

வீட்டில் எத்தனை கடிகாரங்கள் உள்ளன? இதற்கு நேரடியாக யோசித்தால் கைக் கடிகாரங் களையும் சுவர்க் கடிகாரங்களையும் மட்டுமே கணக்கிடுவோம். மாற்றி யோசித்துப் பாருங்கள். செல்போனில், கம்ப்யூட்டரில், டி.வி.யில்.... இப்படி எண்ணிக்கை அதிகரிக்கும்தானே?

இப்படி பல கேள்விகளைக் கேட்டு பதில் களைக் கற்பனை செய்யும் முயற்சியில் ஈடுபடுங் கள். ஜாலியாக இருக்கும். மறதியைத் துரத்தி மூளை சுறுசுறுப்பாகும்.

இன்றே மூளைக்கு வேலை கொடுக்கத் தொடங்குவோம்.

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று



# அவருக்கு எப்போது ஓய்வு?

பணி ஓய்வு நாள் அன்று மிக கவலையான ஓர் உணர்வுடன் வீட்டிற்கு வந்தேன். அப்போது என் மனைவி வந்தார். எனக்கு ஆறுதல் சொல்வார் என்று எதிர்பார்த்தால் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். “நீங்கள் ஓய்வு பெற்றுவிட்டீர்கள். எனக்கு எப்போது ஓய்வு?” என்றார். அதுவரை நான் அதை யோசித்தே பார்த்ததில்லை.

என் மனைவி கேட்டது எவ்வளவு உண்மை! எனக்கு அலுவலகத்தில் ஓய்வு கொடுத்து அனுப்பி விட்டார்கள். இனி வேலைக்குச் சென்று உழைக்க வேண்டிய நிர்பந்தம் இல்லை. ஆனால், மனைவி செய்யும் வேலை நாளைக்கும் அப்படியேதான் இருக்கும். எதிர்காலத்திலும் நிற்கப் போவ தில்லை. இது என் மனைவி, என் அமமா, உலகத் தில் உள்ள அத்தனை பெண்களுக்கும் பொருந் தும். ஆனால், கேள்விக்கான பதில்தான் இல்லை.

எங்கும் பெண் என்றால் உணவு என்று சிந்திக்கவே பழக்கப்படுத்தி வைத்திருக்கிறோம். உயர்பதவி வகிக்கும் பெண் அதிகாரிகள்கூட சிற்றுண்டிகளும் தேநீரும் பரிமாறுவதைப் பார்த்திருக்கிறேன்.”இது ஏன்?” என்று நண்பர் ஒருவரிடம் கேட்டேன்.

பெண் பிறக்கும்போதே இரண்டு உணவுப் பைகளுடன் பிறக்கிறான். குழந்தை தன் தாயிடம் முதல் உணவைக் கண்டு கொள்கிறது. அதுவே தொடர்ந்து, ‘பெண் என்றால் உணவு’ என்று ஆகிப்போறது. பெண் மறந்தாலும் ஆண் அதை தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருக் கிறான்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் தாய் முகத்தைப் பார்த்துக் கொண்டு பாலை உறிஞ்சுகிறது. பிறகு தாயை உறிஞ்சுகிறது. இன்னும் வளர்ந்ததும் பெண்ணினத்தை உறிஞ்சுகிறது. ஒரு பெண் படைக்கப்பட்டது. ஆயு முழுதும் உறிஞ்சப்படு வதற்குத்தான். அவளுக்கு ஓய்வு நாள் என்பது இன்னும் குறிக்கப்படவில்லை.

அதனால்தான் அல்லாஹ் கூறுகின்றான் :


தாய்மைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தான் போலும். நாம் மனிதனுக்குத் தன் பெற்றோர் இருவருக்கும் நலம் செய்ய வேண்டி யது பற்றி வலியுறுத்திக் கூறியுள்ளோம். அவனுடைய தாய் பலஹீனத்தின் மேல், பலஹீனம் கொண்டவளாக கர்ப்பத்தின்போது அவனை சுமந்தாள். இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்தலில் இரண்டு வருடங்கள் ஆகின.

ஆகவே, “நீ எனக்கும், உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்து வாயாக! என்னிடமே நீ உன் மீளுதல் இருக்கின்றது.

(அல்குர்ஆன் - 31:14)

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று

சிலுவைப் போர்கள் 2.0




தொடர்

# விஞ்ஞானக் கல்வியும் இஸ்லாமும்

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தத் தொடரில், ஐரோப்பிய நாடுகளில், இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் இட்டுக் கட்டப்படும் பொய்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்து வருகின்றோம்.

தொடரில் இடம்பெறும் தகவல்கள் ஜான் பெஃபர் என்ற அமெரிக்காவின் FOREIGN POLICY IN FOCUS - என்ற நிறுவனத்தின் இணை இயக்குநர் CO-DIRECTOR எழுதிய CRUSADE 2.0 THE WESTS - RESURGENT WAR ON ISLAM. சிலுவைப்போர் – 2.0 .

மேலே நாடுகளின் மறு உயிர்பெற்ற, இஸ்லாத்தின் மீதான போர் என்ற நூலின் பகுதிகளைத் தமிழில் தந்து வருகின்றோம்.

இடையே அண்மைக்கால செய்திகளையும் இணைத்தே தந்து வருகின்றோம். அத்தகையதொரு பகுதியே இந்த இதழில் இடம் பெறுகின்றது.

அது, விஞ்ஞான கல்வியின் முக்கியப் பகுதிகள் முஸ்லிம் மாணவர்களுக்கு மறுக்கப்பட்டதில் ஒரு பகுதி இணைக்கப்பட்டுள்ளது. - MGM

இப்படித் தீட்டிய சதித் திட்டங்களுள் ஒன்று விஞ்ஞான கல்வி முஸ்லிம்களுக்குக் கிடைக்காமல் செய்தார்கள். அவர்களை வெற்று வேட்டுகளாகவே காலமெல்லாம் வைத்திருக்க முடிவு செய்தார்கள். இதற்கு மிகவும் நிதர்சன மான எடுத்துக்காட்டு உலகில், ‘அணு ஆயுதம்’ என்றொன்றை கண்டுபிடித்து மனித இனத்தை அழித்திட தலைப்பட்டார்கள்.

இந்த ஹிரோஷிமா நாகசாகி ஆகிய இரண்டு இடங்களிலும் இந்த அணு குண்டுகளை இரண்டாம் உலகப் போரின்போது ஆகஸ்ட் (1945) மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மனித உயிர்களையும் அழகிய தோட்டங்களையும் புற்பூண்டுகளையும் அழித்தொழித்தார்கள். அதன்பின் ஐக்கிய நாடுகள் சபை, செயலில் வந்தது. 2020–இல் 75 ஆண்டுகளாகியும் அணு ஆயுதப்பரவலை தடுத்திட இயலவில்லை.

மாறாக மிகச்சில நாடுகளைத் தவிர இதர உலக நாடுகள் அனைத்தும் அணு ஆயுதம் உடைய நாடுகளாக ஆகிவிட்டன.

(SUPER POWER) என்ற வல்லரசுகளே அணு ஆயுதங்களை வைத்துக்கொண்டு இதர நாடுகள் அணு ஆயுதங்களை வைத்துக்கொள்ளக் கூடாது. அணு ஆயுத ஆராய்ச்சிகளும் ஈடுபடக் கூடாது என்றார்கள். அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சைனா ஆகிய நாடுகள்தாம் அந்த ஐந்து வல்லரசுகள்.

இந்த வல்லரசுகள் மனித இனத்தை ஒட்டுமொத்தமாக அழிக்கும் அணு ஆயுதங்களை குவித்துக் கொண்டே இருக்கும் போது, இதர நாடுகள் கைகட்டி, வாய்ப்பொத்தி இருந்திட வேண்டும் என்பது ஐக்கிய நாடுகளின் எழுதப் படாத விதி.

இப்படி ஒரு விதியை வைத்துக்கொண்டு சும்மா இருந்திடவில்லை. ஐக்கிய நாடுகள் சபையும், அதனை தங்கள் இஷ்டப்படி ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த வல்லரசுகளும். உலகிலுள்ள இதர நாடுகளிடம் ஓர் ஒப்பந்தத்தை நீட்டி தாங்கள் காட்டிய இடத்தில் கையெழுத் துப் போடுங்கள் என்றன. இந்த ஒப்பந்தத்தின்

பெயர்தான் NON - PROLIFERATION TREATY (NPT) – அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் என இதற்கு பெயர் வைக்கலாம். இது 1968 முதல் 1970 வரை உலக நாடுகளின் கையெழுத்திற்காக திறந்திருந்தது. அப்போது இந்தியாவில் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள், இதில் கையெழுத்து போட மறுத்துவிட்டார். அதேபோல் பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளும் மறுத்துவிட்டன.

இது ஒரு பொது ஒப்பந்தம் என்றாலுமே முஸ்லிம் நாடுகளைப் பொறுத்தவரை இந்த அணு ஆயுத நுணுக்கங்கள், அவற்றிற்கு கிடைத்து விடாமல் பார்த்துக்கொண்டன மேலே நாம் குறிப்பிட்ட வல்லரசுகள்.

## முஸ்லிம் நாடுகளுக்கிடையே விவாதம்

அணு ஆயுத ஆராய்ச்சியில் ஈடுபடக் கூடாத என்றொருவிவாதம்முஸ்லிம்நாடுகளுக்கிடையே ஒரு கட்டத்தில் கொழுந்துவிட்டெறிந்தது.

## இந்த விவாதத்தில் இடம்பெற்ற முக்கிய கருப்பொருள்கள்

மனித இனத்தை ஒட்டுமொத்தமாக அழிக்கும் ஆயுதங்களை நாம் கண்டுபிடித்தால் அது, அல்லாஹ்விடம் ஏற்புடைய ஒன்றாக இருக்குமா? என்பதாகும். அல்லாஹ்விடம் ஏற்புடையதாக என்பதே பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் கருத்து. இந்தக் கருத்தை முஸ்லிம் நாடுகளை ஆட்சி செய்து கொண்டிருந்த ஆட்சியாளர்களும் ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தக் கருத்திற்கு நேர் எதிராக இன்னொரு கருத்து. அது, அமெரிக்காவும் இதர வல்லரசு நாடுகளும் பகிரங்கமாக இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக இருக்கின்றார்கள். அத்தோடு இவர்கள் முஸ்லிம் நாடுகளில் ஆட்சி செய்பவர்களைத் தங்கள் கிடுக்குப் பிடிக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அமெரிக்காவின் அணு ஆயுதபலம் அதேபோல் பிரிட்டீஷ், பிரான்ஸ், இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவிகள், இவையெல்லாம் முஸ்லிம்கள் ஆட்சி செய்யும் நாடுகளின் இயற்கை வளங்களை கொள்ளை அடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. முஸ்லிம் நாடுகளை ஆளும் ஆட்சியாளர்களால் அமெரிக்காவை விஞ்சி எதுவும் செய்திட இயலவில்லை. முஸ்லிம்கள் உலகெங்கும் கொடுமைகளுக்கும் கோரங்களுக்கும், கொலை பாதகங்களுக்கும் ஆளாக்கப்படுவதற்கு எதிராக ஒரு சிறு கண்டனத்தைக் கூட தெரிவிக்க இயலுவதில்லை.

அதேபோல் அமெரிக்கா – ஐரோப்பிய நாடுகள் இவை தங்களுக்குப் பிடிக்காத முஸ்லிம் ஆட்சியாளர்களை "REGIMI CHANGE" ஆட்சி மாற்றம் என்ற பெயரில் மாற்றிக் கொண்டிருக்கின்றன. இதனால் அமெரிக்காவை விட இந்த வல்லரசு நாடுகளைவிட சிறந்த ஆயுதங்களை நாம் பெற்றிட வேண்டியது அவசியமாகின்றது. என்ற கருத்தும் அணு ஆயுத நாடுகள் மட்டுமே தலை நிமிர்ந்து தங்கள் கருத்துக்களை தைரியமாக முன் வைக்க முடிகின்றன என்ற கருத்தும், இந்த அணு ஆயுத வல்லரசுகள் எந்த நாட்டின் உள் விவகாரத்திலும் எளிதாகத் தலையிட்டுவிட முடிகின்றது. இவர்கள் ஆதரிக்கும் நாடுகள் பலம் பெறுகின்றன, இவர்கள் எதிர்க்கும் நாடுகள் பலவீனப்படுகின்றன உலக மக்கள் பார்வையில் என்ற கருத்தும் சர்வதேசிய அளவில் அணு ஆயுதத்தைப் பெற்ற நாடுகள்தாம் அதிகமாக மதிக்கப்படுகின்றன.

இன்னும் அல்லாஹ், முஸ்லிம்கள் தங்கள் எதிரிகளுக்கு எதிராக அவர்கள் (எதிரிகள்) அஞ்சும் அளவில் ஆயுத பலங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை திருக்குர்ஆனில் வலியுறுத்துகின்றான்– என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டன.

இறுதியில் இந்தக் கருத்துக்களே வென்றன. முஸ்லிம் நாடுகள் அணு ஆயுதங்களைப் பெற வேண்டும்.

ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன் ஆயிரம் முறை ஆலோசிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், ஐரோப்பிய நாடுகள் ஏற்கெனவே இஸ்லாத்தின் எதிரிகள் முடிவு செய்திருந்தபடி அந்தக் கல்வி முஸ்லிம்களுக்குக் கிடைக்காமல் செய்து விட்டனர். அந்தக் கோட்டைக்குள் புகுந்து இந்தக் கல்வியைப் பெறுவது மிகப்பெரிய சவாலாக இருந்தது.

இதனால் ஒரு கட்டத்தில் அணு ஆயுத கல்வியைக் கற்க முஸ்லிம்கள், அந்த நிறுவனங்களில் கூலி வேலைப் பார்க்கும் அல்லது ஏவலாள் எடுபிடி போன்ற கீழான வேலைகளைச்

செய்யவும் தயங்கிடக் கூடாது என முடிவு செய்தார்கள்.

இப்படி அந்தக் கல்வியைப் பெறுவதில் சில முஸ்லிம் விஞ்ஞானிகள் ஈடுபட்டபோது அவர்களை அடையாளங்கண்டு கொலை செய்தார்கள். யூதர்களின் மோசாத் என்ற கொலைகார அமைப்பும், அமெரிக்காவின் CIA யும் சி.ஐ.ஏ. என்ற உளவுத்துறையும் கொலை செய்த முஸ்லிம் விஞ்ஞானிகளுக்கு அளவில்லை.

இந்தக் கொலை பற்றிய தகவல்களை நாம் அவ்வப்போது, ''வைகறை வெளிச்சம்'' மாதஇதழில், வெளியிட்டு வந்தோம்.

விடா முயற்சிகளின் வழி தியாகங்கள் வழி முஸ்லிம்கள் இந்த யுக்தியைக் கற்றார்கள். அதில் அதிசயத்தக்க வெற்றிகளைப் பெற்றார்கள்.



முஸ்லிம்களிடம் இந்த உத்தி சென்றுவிட்டது, அதில் அவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையெல்லாம், அவர்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. முஸ்லிம்கள் கண்டுபிடித்த அணுகுண்டுகளை – 'ISLAMIC BOMB' இஸ்லாமிய குண்டுகள் என அழைக்கத் தலைப்பட்டார்கள்.

'வாஜ்பேய்' இந்தியாவின் நாடாளு மன்றத்திலேயே இதை விவாதமாக மாற்றினார். இதனை ஊடகங்கள் ஒரு கட்டத்தில் மிக அதிகமாகப் பிரபல்யப்படுத்தின. *1979*களில் ஒரு நூலும் வெளிவந்தது. அதன் பெயர் பாகிஸ்தானின் இஸ்லாமிக் பாம்.

இந்தியாவில் இராஜிவ்காந்தி காந்தி பிரதமராக இருந்தபோது, அகில உலக அளவில் *1989* ஆம் ஆண்டில் ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பிய அவர், இதே சொல்லை அதாவது, 'இஸ்லாமிக் பாம்' இஸ்லாமிய குண்டு என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அப்போது உலக பிரசித்திப் பெற்ற எழுத்தாளர் குல்தீப் நய்யார் அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்.

''முஸ்லிம் உலகில் அணு குண்டுகளைச் செய்தால் அதை முஸ்லிம் அணுகுண்டு என்றால் அமெரிக்காவில் இருக்கும் அணு குண்டுகளை முதலாளித்துவ குண்டு என்றும், ரஷ்யாவிலிருக்கும் குண்டுகளை, கம்யூனிஸ்ட் குண்டுகளென்றும் அழைப்பீர்களா?'' என்றார்கள்.

இதே கருத்தை உலகிலுள்ள பல பத்திரிகை களும் வெளியிட்டன. இராஜீவ்காந்தி கடும் விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியவரானார். அதன்பின்னர் இந்தச் சொல்லாட்சி மடிந்தது.

இப்படி இஸ்லாமே போஃபியாவை வளர்க்க முஸ்லிம்கள், விஞ்ஞானத்தில் அடைந்த முன்னேற்றங்களையும் பயன்படுத்தினார்கள்.

ஆனால், காலப்போக்கில் முஸ்லிம் நாடுகள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிய அணு ஆராய்ச்சியில் சிகரங்களை எட்டின. அனைத்தும் ஐரோப்பிய நாடுகளின் ; விஞ்ஞான தடை, பொருளாதார தடை இவற்றைத் தாண்டித்தான் சாதித்தன.

இன்றைய நாட்களில் இவர்கள் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் மிகவும் உத்திகளைக் கடைப்பிடித்து, முஸ்லிம் நாடுகளின் விஞ்ஞான வளர்ச்சியை தடுக்கின்றன. அந்த மலிவான உத்திகளுள் ஒன்று, முஸ்லிம் விஞ்ஞானிகளைக் குறி வைத்துக் கொலை செய்வது, அதை கடந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை!

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.

தலையங்கம்

# எது மக்களுக்கான ஆட்சி..?

மக்களுக்கான ஆட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளரை மக்களால் சந்திக்க முடியாத அவலநிலை இன்றைய பி.ஜே.பி. ஆட்சியில் நடந்து கொண்டு இருக்கின்றது.

2014இல் தேர்தல் வாக்குறுதிகள் பல தந்தார் மோடி. அதில் முக்கியமாக இன்று பேசப்படுவது விவசாயிகளின் தற்கொலை களைதன்னுடைய ஆட்சியில் தடுத்து நிறுத்து வேன் என்றார். National Crime Records Bureau (NCRA) அவர்களின் கணக்கெடுப் பின்படி 2016 முதல் 2019 வரை சுமார் 42664 பேர் விவசாயிகள் தற்கொலை செய்துள் ளார்கள்.

இன்றுவரை பல லட்சம் விவசாயிகள் டெல்லியை நோக்கி பயணித்துக் கொண்டு இருக்கிறார்கள். பல நாட்கள் முற்றுகை யிட்டும் 40–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் உயிர்களை இந்தப் புதிய சட்டங் களுக்கு எதிரான போராட்டத்தில் இழந்ததும் இந்திய குடிமக்களான அவர்களுக்கு தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களு டைய ஆட்சியாளரை சந்திக்க முடிய வில்லை. ஆட்சியாளருக்கும் இதுவரை மனம் வரவில்லை. விவசாயிகளின் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்வதற்கு.

2017இல் இதுபோன்ற ஓர் போராபத்தை தமிழக விவசாயிகள், இந்தியக் குடிமக்கள் டெல்லியில் போராட்டம் நடத்தினார்கள். பிரதமர் மோடியை சந்திப்பதற்காக விவசாயி களின் பிரச்சனைகளை தீர்க்க வேண்டும் என்பதற்காக மோடியின் கவனம் தங்கள் மேல் விழ வேண்டும் என்பதற்கு நூறு நாட்களுக்கும் மேலாக விதவிதமான போராட்டங்கள், புல்லை திண்பது, எலிக்கறி திண்பது, மொட்டை அடிப்பது, பாதி மீசை எடுப்பது, தூக்கில் தொங்குவது, அரை நிர்வாணமாக நடப்பது போன்று பல நாட்கள் போராடியும் உலகம் முழுவதும் அவர்கள் மேல் கவனம் செலுத்தியது. பரிதாபப்பட்டது. ஆனால், தங்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆட்சியாளர் பிரதமர் மோடி அவர்களின் கவனம், அவர்களின் மேல் விழவில்லை.

உலகில் பல நாடுகளுக்கும் பயணம் செய்த மோடியால் அருகில் உள்ள விவசாயிகளை சந்திக்க முடியவில்லை. இதே நிலைதான் இன்று போராடிக் கொண்டிருக்கும் விவசாயி களுக்கும் இப்படிப்பட்ட ஆட்சியைதான் மக்களுக்கான ஆட்சி என்கிறார்கள்.

குடிமக்கள் தங்களை சந்தித்து விடக் கூடாது என்பதற்காக தன்னுடைய எல்லை களை அடைப்பது, மீறி வந்துவிடக்கூடாது என்பதற்காக அகழ்களை வெட்டி விடுவது, காவலாளிகளைக் கொண்டு குடிமக்களை தடுப்பது, இதுதான் இன்று மக்களுக்கான ஆட்சியில் நடந்துகொண்டு இருக்கின்றது.

உண்மையில் மக்களுக்கான ஆட்சி என்பது படைத்த இறைவனுக்கு அஞ்சி அவனுடைய வழிகாட்டுதலின்படி நடக் கின்ற ஆட்சிதான் இப்படிப்பட்ட ஆட்சி உமர் (ரழி) அவர்களின் ஆட்சி.

குடிமக்களில் யாராவது ஏதேனும் ஒருமுறையீட்டைத் தெரியப்படுத்த நினைத் தால் இடையில் குறுக்கீடுகள் எதுவும் இருக்கக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை செலுத்தினார். ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் பள்ளிவாசலுக்கு வெளியே திண்ணையில் அமர்ந்து கொள்வார்கள். அந்த சமயத்தில் யார் வேண்டுமானாலும் அவரை சந்தித்து பேசலாம். யாரும் இல்லை என்றாலும் சிறிது நேரம் அமர்ந்து விட்டுப்

பிறகு செல்வார்கள். இரவு நேரங்களில் நகரை உலா வருவார்கள். தங்களின் பயணத்தில் போது எதிர்படும் வழிப் போக்கர்களிடம் நிலைமையை விசாரிப்பார்கள். அனைத்து மாகாணங்களின் நிலைமையை அறிந்து கொள்ள வருடம் ஒருமுறை அனைத்து மாகாணங்களிலும் தூதுவர்களை வர வழைத்து விசாரிப்பார்கள்.

இன்னும் மக்கள் ஆட்சியாளர்களை சந்திக்க எந்தவிதத்திலும் தடை இருக்கக் கூடாது என்பதற்காக ஆளுநர்கள் பெரிய வாசல்களைக் கட்டுவது, வாகனங்களில் காவலாளிகளை நிறுத்துவது கூடாது என கடுமையாக எச்சரித்தார்கள்.

உமர் (ரழி) அவர்கள் இரவு உலா வரும்போது ஒருதாய் தன் குழந்தையை சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தாள். உமர் (ரழி) குழந்தையின் அழுகை பற்றி விசாரித்தார்கள். அதற்கு அந்த தாய், பால் குடியை நிறுத்திவிட்ட குழந்தைகளுக்குத் தான் உதவித்தொகை என்று கலீபா உமர் (ரழி) அவர்கள் அறிவித்துவிட்டார்கள். அதனால் என்னுடைய குழந்தைக்கு பால்குடி மறக்கடித்துக் கொண்டிருக்கிறேன். குழந்தை அதை தாங்கிக் கொள்ளாமல் பாலுக்காக அழுகின்றது என்றால் அந்த தாய். அன்றைய தினமே அரசாங்க அறிவிப்பு வெளியி டானது. குழந்தை பிறக்கின்ற தேதியிலிருந்து அதற்கான உதவித்தொகை அளிக்கப்படும் என்றார்கள்.

ஒருநாள் இரவு உலா வரும்போது ஒரு பெண்மணி தான் மூன்று குழந்தைகளின் பசியினால் ஏற்பட்ட அழுகையை நிறுத்து வதற்காக வெறும் சட்டியை அடுப்பில் வைத்து சமைப்பது போன்று பாவனை செய்து, குழந்தையை சாமாதானப்படுத்திக் கொண்டு இருந்தாள். இதைக் கண்டு உமர் (ரழி) மிகவும் கவலைப்பட்டார்கள். உள்ளே அரசாங்க கருவூலத்தில் இருந்து சமைப்பதற்கான பொருட்களை தானே சுமந்து வந்து அந்த பெண்ணிடம் கொடுத்து சமைப்பதற்கு உதவி செய்தார். குழந்தை களின் பசியைப் போக்கினார். இதனால் மகிழ்ச்சி அடைந்த அந்தத் தாய் அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்கட்டும். உங்களுக் குத் தான் கலீபாவாக இருப்பதற்கு தகுதி உள்ளது. அந்த உமருக்கு இல்லை என்றார்கள்.

ஒருமுறை உமர் (ரழி) அவர்கள் உலா வரும்போது ஒரு பெண்மணி தன் கணவர் ஜிஹாதிற்கு சென்று நீண்ட நாட்கள் ஆன நிலையில் அவரை நினைத்து அழுது கவிதையாக பாடிக் கொண்டிருந்தாள். இதைக்கேட்ட உமர் (ரழி) தன் மகளிடம் சென்று ஒரு பெண் எத்தனை நாட்கள் தன் கணவனை விட்டு பிரிந்து இருப்பாள் என்றார்கள்?. 4 மாதம் என பதிலைக் கேட்டதும்,

உமர் (ரழி) அவர்கள் உடனே அரசாணை பிறப்பித்தார்கள். 4 மாதங்களுக்கு மேலாக ஜிஹாதில் உள்ள அனைத்து ஆண்களுக்கும் விடுப்பு அளிக்குமாறு உத்தரவிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“ஓர் ஆட்சித் தலைவர் அவருடைய பொறுப்பில் உள்ள குடிமக்கள் குறித்து கேள்வி கேட்கப்படுவார்.” (புகாரி)

“தன் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லா அந்த மறுமைநாளில் ஏழு வகையினருக்கு அல்லாஹ் தன் அர்ஷின் நிழலில் நிழல் தருவான். (அவர்களில் ஒருவர்) நீதி வழுவாத அரசன்” (புகாரி)

“நாம் அவர்களுக்கு பூமியில் (ஆட்சி புரியும்) வாய்ப்பை வழங்கினால், அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துவார்கள். ஜகாத் செலுத்துவார்கள். மேலும் நன்மை புரியுமாறு ஏவுவார்கள். தீமையிலிருந்து தடுப்பார்கள். (அல்ஹாஜ் : 41)

**எது மக்களுக்கான ஆட்சி**
**என்பதை சிந்திப்பீர்...**

**மாற்றத்தை நோக்கிப் பயணிப்பீர்...**



# உச்ச நீதிமன்றத்தை சீர் செய்யும் நமது முயற்சிகள் வீணாகவில்லை.!

**வைகறை வெளிச்சம் அக்டோபர் 2020 இதழில் அட்டைப்பட கட்டுரையாக, உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் பற்றி விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.**

அந்த அட்டைப்படக் கட்டுரை, முன்னாள் டெல்லி – தமிழ்நாடு நீதிபதி, அஜித் பிரகாஷ் ஷா என்ற A.P. ஷா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழ் வடிவம்.

அதேபோல் வைகறை வெளிச்சம் டிசம்பரில் இதழில், உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 2 என்ற தலைப்பில், ஓர் துணை அட்டைப் படக் கட்டுரையை வெளியிட்டிருந்தோம். இதனால் வைகறை வெளிச்சம் (வாசகர் வட்டம்) உச்ச நீதிமன்றம், திருந்தும் என எதிர்பார்க்கின் றீர்களா? என வாசகர்கள் தங்கள் வேதனையை தொலைபேசி வழி தெரிவித்தார்கள். அவர்களிடம் அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்றோம்.

இப்போது அம்மி சற்று நகர்ந்திருக்கின்றதோ என எண்ணிடத் தோன்றுகிறது.

அண்மையில் பாசிச ஊடகத் தீவிரவாதி அர்நாப் கோஸ்வாமி நமது உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கொன்றை எடுத்துச் சென்றார். வழக்கம் போல் அந்த வழக்கு ஏனைய வழக்குகளை யெல்லாம் விஞ்சி வேகமாக, விசாரணைக்குப் பட்டியலிட்டது.

## வழக்கு

அர்நாப் கோஸ்வாமி, ஒரு குடுப்பத் தலைவரை ரூபாய் 5 கோடியே 20 லட்சத்திற்கு ஏமாற்றிவிட்டார். இந்த வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார்.

உடனேயே அவர் தன் நஞ்சு ஊடக உத்தியைப் பயன்படுத்தி, காவல்துறையினர் தன்னை கைது செய்ய வந்தபோது தாக்கிவிட்டதாக ஒரு புகாரைத் தயார் செய்தார்.

தனக்கு அடால்தடியாக பிணை வழங்கிய தன்னுடைய கைத்தடி மன்றம், உச்ச நீதிமன்றம் சென்றார். அங்கே தான் கொடுத்தப் புகாரில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான ஆணை ஒன்றை மராட்டிய காவல்துறை

ஆணையருக்குக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

வழக்கம்போல் அவருடைய புகார் உடனே யே விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆனால், வெளி உலகில் தனது அவமானமான நிலையை உச்ச நீதிமன்றம் புரிந்துகொண்டதுபோல், ஒரு கூற்றை உச்ச நீதிமன்றம் கூறியது. அது எடுத்ததற் கெல்லாம் பேராசையுடன் உச்சநீதிமன்றம் வர வேண்டாம், கீழ் நீதிமன்றங்களை அணுகவும் எனக்கூறிறறு.

சாதாரணமாக இதுபோன்ற வழக்குகள் விசாரணை நீதிமன்றம் அல்லது உச்ச பட்சமாக மாவட்டமாக தலைமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். ஆனால், அர்நாப் கோஸ்வாமி கேட்டதெல்லாம் கிடைப்பதால் தும்மினால், இருமினால் உச்ச நீதிமன்றமே செல்கின்றார். இப்போது அவமானம் அர்நாப் கோஸ்வாமியை ஆரத்தழுவிக் கொண்டது. (See Annex)

இதுகுறித்து டெல்லியிலுள்ள மூத்த வழக் கறிஞர் ஒருவரிடம், உச்ச நீதிமன்றம் தனது தவறுகளை உணர்ந்து கொண்டது என எடுத்துக் கொள்ளலாமா? எனக் கேட்டேன். அவர் இப் போதைக்கு உங்களுக்குப் பேராசை வேண்டாம் என்றார்.

(அக்டோபர் மாதஇதழில், நீதி அரசர் A.P. ஷா அவர்களைக் குறிப்பிடும்போது, அவர்களை முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி எனக் குறிப்பிட்டிருந்தோம். இல்லை அவர் சென்னை மற்றும் டெல்லி உயர்நீதி மன்றங்களின் தலைமை நீதிபதியாக இருந்தவர்.)

ANNEX

அதேபோல், அர்நாப் கோஸ்வாமியின் தொலைக்காட்சியின் தலைமை செயலாளர் அண்மையில் கைது செய்யப்பட்டார், மராட்டிய மாநில காவல்துறையினர்.

அவர், அர்நாப் கோஸ்வாமியின் தொலைக் காட்சிதான் மக்களால் அதிகமாகப் பார்க்கப்படு கின்றது என்று ஒரு மாயை உருவாக்கிட மக்களுக்கு லஞ்சம் தந்தவர்.

மக்களின் அனுமதி இல்லாமலே, அவர்களின் வீடுகளில் ஒட்ட வைத்தார்கள். இந்தக் குற்ற ங்களுக்காக, அர்நாப் கோஸ்வாமியின் தலைமை செயலாளர் கைது செய்யப்பட்டார்.

உடனேயே அர்நாப் கோஸ்வாமி, உச்ச நீதிமன்றம் களத்தில் குதிக்க வேண்டும் என்றெ ல்லாம் குதித்தார். தனது 'Republic - ரிபப்ளிக்' தொலைக்காட்சியில் குதித்தார்.

ஆனால், உச்ச நீதிமன்றம், ஏறெடுத்தும் பார்க்கவில்லை. கடைசியில் மும்பையிலுள்ள ஒரு சாரார் நீதிமன்றத்தில் பிணை வாங்கினார்.

## விவசாயிகள் போராட்டம்

டெல்லியில் விவசாயிகள் அண்மையில் மத்திய அரசு கொண்டுவந்த விவசாயிகள் விரோத சட்டத்தை எதிர்த்துப் போராடி வருகின்றார்கள்.

ஒரு மாதத்திற்கு மேலாக நீண்டு வருகின்றது. 40 பேர் தங்கள் உயிரை விலையாகத் தந்து விட்டார்கள். ஊரெல்லாம், உலகமெல்லாம் அவர்களுக்கு, ஆதரவு தெரிவித்துவிட்டது. அதே நேரத்தில், உச்ச நீதிமன்றத்தை அணுகினார்கள்.

உச்சநீதிமன்றம், வெளி உலகில் தனது மானம், கப்பலேறுகின்றது என்பதைத் தெரிந்து கொண் டது. அதனால் அந்த மனுவைப் புறக்கணிக் காமல், விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. விவசாயிகளை அழைத்துப் பேச வேண்டும் என்று உத்தரவிட்டது.

கஷ்மீர் பிரச்சனையை கிடப்பில் போட்டது போல், 'ஊபா' எதிராக தொடுக்கப்பட்ட வழக்கை ஊதாசீனப்படுத்தவில்லை.

சிறைகளில் பல ஆண்டுகளாக நெழிந்துக் கொண்டிருக்கும் 3,30,000 கைதிகள் விவகா ரத்தை கிடப்பில் போட்டதுபோல் போட வில்லை.

**கோவிட்–19 வழக்குகளை கண்டு கொள்ளாமல் விட்டதுபோல், விட்டு விடவில்லை. விவசாயிகள் விவகாரத்தில் ஆணையிட்டது. உச்ச நீதிமன்றம் சீரானாதான் நீதி நிலைக்கும். அதுவரை நமது போர்த் தொடரும்.**

- MGM



# பேராசிரியர் : பெருந்தகை நிலாமுதீன் அவர்களை அல்லாஹ் (20.12.2020)இல் அழைத்துக் கொண்டான்

நமது MNP என்ற மனித நீதி பாசறையின் கடுமையான – நெருக்கடி மிகுந்த நாட்களில் எங்கும் பரபரப்பு, காரணம் ஊடகங்கள் ஒன்று மில்லாதவற்றையெல்லாம் ஊதி பெருக்கியது தான்.

சூழ்ந்து வரும் சூழ்ச்சியை வென்றிட வழி வகைகளைத் தேடி அவற்றை தூள்களாக ஆக்கி இருக்கின்றேன். அல்லாஹ்வின் பெருங் கருணையில்,

இந்நிலையில் சிலர் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதலான வார்த்தை களைச் சொல்லுவார்கள். அவர்களில் ஒருவர் பேராசிரியர் நிலாமுதீன் அவர்கள்.

நான் "வேர்கள்" வெளியீட் டகத்தின் சார்பில்பல நூல்களை (இதுவரை 57 நூல்களை) வெளி யிட்டிருக்கின்றேன். அவற்றில் சிலவற்றை அறிமுகம் செய்யும் போது, இதனை முஸ்லிம்கள் வாங்கி சகோதர சமுதாயத்தவர் களுக்குத் தந்திட வேண்டும். இது, முஸ்லிம்கள் மேல் எடுத்து வீசப்படும் பழிகளைக் களை யவும், சகோதர சமுதாயத்தவர் களோடு நெருக்கத்தை ஏற்படுத் தவும், சமுதாயப் பொது வெளி யில் விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் பயன் படும் என அறிவிப்பேன்.

அப்போதெல்லாம் தவறாமல் பேராசிரியர் நிலாமுத்தீன் அவர்களிடமிருந்து சில, பிரதி களுக்கு ஆணை வரும், பணமும் வந்துவிடும் கணக்கில் அவருடைய அன்பான அழைப்புகள் இனிவராது என்பதனால், அவருடைய மரணச் செய்தி தனிப்பட்ட முறையிலும் இழப்பு – சமுதாய வீதியில் அவர் செய்து கொண்டிருந்த பணிகள் நடந்த தளங்களிலும் வெற்றிடம்.

அவருடைய 'ஜனாசா" சென்னையிலிருந்து, அவர்பிறந்ததேங்காய்ப்பட்டணம்(குமரிமாவட் டம்) கொண்டு செல்லப்பட்டது. வழியெல்லாம் அன்பர்களை அழைத்து இயக்க சகோதரர்களை அழைத்துச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அடக்கம் நடந்தவரைஉள்ள செய்திகள் வந்து கொண்டே இருந்தன. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ்விட மிருந்தே வந்தேர், அவனிடமே மீளுவோம்.



நினைவேந்தலில் அலீகான்

## கொடிக்கால் / அலீகான்

இவர்கள் இருவரும், சீரிய சமுதாய சிந்தனை கொண்டவர்கள். இவர்கள் இருவருமிணைந்து பேராசிரியர் பெருந்தகை நிலாமுதீன் அவர் களின் பணிகள் – நெஞ்சநெகிழ்வுகள் இவற்றைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்றிற்கு 25–12–2020 அன்று ஏற்பாடு செய்தார்கள்.




திருச்சியில் நிலாமுதீன் அவர்கள் மேடையில்

இவர்கள் இருவரும் சமுதாயத்தின் மதிப்பு மிக்க ஆத்மாக்களை இழக்கின்ற போதெல் லாம் இந்த மகத்தான பணியைச் செய்து வாழும் தலைமுறைக்கு உற்சாக மூட்டு வார்கள். நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்ற புதிய தலைமுறையினர் நாடும் அதுபோல் சமுதாயத்திற்கு பயன்தரும் ஜீவன்களாக ஜீவிக்க வேண்டும் என்ற உணர்வைப் பெறுவார்கள்.

இப்படித்தான் சூரங்குடியைச் சார்ந்த சமுதாய களப்பணியாளன், உடன் பிறப்பு பாசில் அலீ—ஐ அல்லாஹ் அழைத்துக் கொண்ட போது, செய்தார்கள். ஆகஸ்ட் – 20, 2019 ஆம் ஆண்டிலும் அதையே நடத்தி இருக்கின்றார்கள். பாராட்டுக்கள்.

அவர்கள் நடத்திய பேராசிரியர், பெருமை மிகு நிலாமுத்தீன் அவர்களின் சாதனைகளை நினைவு கூறும் நிகழ்ச்சியைப் பற்றி தகவல் களைப் பதிய வேண்டும் எனப் பேசியபோது, நானும், பேராசிரியர் அவர்களும் சந்தித்த ஓர் பழங்கால செய்தியைச் சொன்னார். அதை அவரே குறிப்பிட்டுக்காட்டி இருக்கின்றார். அவரது கட்டுரையை கவனிக்கவும் 1980களில் இருக்கலாம். இத்துணை பாரம்பரியமிக்க நட்பு : சமுதாயத் தொண்டு. அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாவின் உங்கள் தூதுவன் பத்திரிகையின் பெயர் சூட்டும் விழா.

இந்த நிகழ்வுகள் MNP. இன் தொடக்கத்திற்கு வெகு நாட்களுக்கு முன் நடந்தது.

அதேபோல், "Who Killed Karkare" The Real Face of Terrorism in India. என்ற நூலை தமிழில் மொழிப் பெயர்த்து, “இந்திய தீவிர வாதத்தின் உண்மை முகம்” தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் வெளியிட்டோம். அதே போல் திருச்சியிலும் வெளியிட்டோம். அங்கே பார்வையாளராக வந்தார்கள். நீங்களே தலைமை ஏற்று நடத்துங்களே என்றோம். அட்டி இன்றி ஏற்றுக் கொண்டு, நிகழ்வை நடத்தினார்கள்

அவர்களுடையப் பெயரை நாம், போஸ்ட் டர்களில் போடவில்லை. அழைப்பிதழிலும் போடவில்லை. அதுபோன்ற சாங்கியங்களை அவர்கள் எதிர்பார்க்கவுமில்லை. நல்லது நடந்தால் போதும், நான் அதில் பங்கேற்கவும் தயார், தலைமை ஏற்க வேண்டும் என்றால், அதற்கும் நான் தயார் என்பதே அவரது நிலைப் பாடு. அவர் ஓர் யதார்த்தமான ஆன்மா என்பதை பாங்குறி செயலில் காட்டினார்கள்.

அதேபோல் நாகர்கோவில் அதே நிகழ்ச்சியை நூலாசிரியர் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களை வரவழைத்து நடத்தினோம். அப்போது முஷ்ரிஃப் அவர்களை நேரில் சந்தித்தார்கள். சந்திப்பில் இருவரும் மகிழ்ந்தார்கள்.

அன்புச் சகோதரர் அலீகான் அவர்களும் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லா அவர்களும் இணைந்து நடத்திய நினைவு நாளில் The Chief Sub - Editor of Tamil Hindu - தமிழ் தி இந்து நாளிதழின் தலைமை துணை ஆசிரியர்அவர்கள் ஆற்றிய உரை அனைவரையும் கவர்ந்தது. அதனை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.



# டாக்டர் கி. நிலாமுதீன்

# அரசமைப்புச் சட்டத்தின் ஆராதகர்

– செல்வ புவியரசன்
தமிழ் தி இந்து நாளிதழின் தலைமை துணை ஆசிரியர்



கொடிக்கால் ஷேக் அப்துல்லாவாக செல்லப்பா மாறியதற்குக் காரணகர்த்தா நிலாமுதீன் என்று அப்துல்லா அய்யாவே சொல்லும் வரை எனக்குத் தெரியாது. தோப்பில் முகம்மது மீரானைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவரும் அவர்தான் என்று 'தி இந்து' தமிழ் நாளிதழில் மீரான் பேட்டியைப் படிப்பதற்கு முன்பு எனக்குத் தெரியாது. மலையாளத்தில் எழுதப்பட்ட தோப்பிலின் கதையைத் தமிழில்மொழி பெயர்த்ததோடு அது பத்திரிகையில் வெளிவருவதற்கும் நிலாமுதீன் காரணமாக இருந்திக்கிறார். கல்லூரி நாட்களில் பேராசிரியருடனான உரையாடல்களின் போது அவர் அடிக்கடி நினைவுகூறும் பெயர்களில் இவர்களும் இருந்தார்கள்.



நினைவேந்தலில் செல்வப்புவியரசன்


சட்டக் கல்லூரியில் அரசியல், இலக்கியம் தொடர்பிலும் உரையாடக்கூடிய பேராசிரியராக நிலாமுதீன் இருந்தார். 'மைலாஞ்சி' கவிதைத் தொகுப்புக்காக ஹெச்.ஜி.ரசூல் நடவடிக்கைகளுக்கு உள்ளானது குறித்தும் கருத்துரிமைக்கான கட்டுப்பாடுகள் குறித்தும் அவரைக் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்திருக்கிறேன்.

மிகவும் பொறுமையாகப் பதிலளித்தார் என்றாலும் ரசூலுக்கு எதிரான நடவடிக்கைகளை அவர் ஆதரிக்கவில்லை. ஆனால், பின்பு ஒரு தடவை என்னிடம் அவராகவே ஒரு தகவலைச் சொன்னார்: 'புவியரசன்... உங்களுக்குத் தெரியுமா? ரசூல் ஒரு ஜமாத்தில் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்' நான் கேட்ட கடுமையான கேள்விகளுக்கு உட் பொருளை உணர்த்தும் தணிவான பதிலொன்றை அளித்துவிட்டதாக அவர் நினைத்திருக்கலாம்.

எல்லா மாணவர்களையும் முழுப் பெயரைச் சொல்லி அழைப்பது அவரது வழக்கம். அவரிடம் படித்த முன்னாள் மாணவர்கள் பலரையும் பார்த்த மாத்திரத்தில் பெயர் சொல்லி அழைப்பார். அவர்கள் எங்கெங்கு, என்னென்ன பணியிலிருக்கிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் நினைவில் வைத்திருப்பார். பல சமயங்களில், உடன் படித்த மாணவர்களுக்கும்கூட அந்தத் தகவல்கள் தெரிந்திருக்காது. நூற்றுக்கணக்கான மாணவர்களின் திருமண விழாக்களில் அவர் கலந்துகொண்டிருக்கிறார்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்லூரியின் கடைசி நாட்களில் அவர் எழுதிக் கொடுத்த கவிதை நடையிலான வாழ்த்துக் குறிப்புகளை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் இறந்தபோது சில மாணவர்கள் அத்தகைய குறிப்புகளை சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொண்டிருந்தார்கள்.

பச்சை மையில் அவரது கையெழுத்து மிகத் தெளிவாகவும் அழகாகவும் இருக்கும். ஒவ்வொரு மாணவரின் தனித்திறன்களையும் குறிப்பிட்டு அவர்களுக்கான வழிகாட்டுதல்







*25–12–2020 நிகழ்ச்சியின்போது*

களுடன் வாழ்த்தியிருப்பார். எல்லாக் குறிப்பு களிலும் பொதுவான வார்த்தை ஒன்று இடம் பெற்றிருக்குமானால் அது 'ஒழுக்கம்' என்பது மட்டும்தான். ஒரு வார காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அவர் வாழ்த்துக் குறிப்புகளை எழுதுவார். தீவிர வாசிப்பாளரான அவர், கட்டுரைகளை எழுதுவதில் அவ்வளவாக ஆர்வம் காட்டியதில்லை என்று அவரிடமே நான் ஒருமுறை குறைப்பட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால், எழுதுவதில் அவருக்குத் தயக்கமோ தடையோ இல்லை, எழுதுவதைக் காட்டிலும் அவர் மாணவர்களுடன் கலந்துரையாடுவதையே பெரும்பாலும் விரும்பினார் என்பது இப்போது புரிகிறது.

திருச்சி சட்டக் கல்லூரியில் நான் படித்த நாட்களில் ஐந்தாண்டு படிப்புக்கு மொத்த கல்விக் கட்டணமே நான்காயிரம் ரூபாய்தான். அதைக் கட்ட முடியாத மாணவர்களும்கூட அந்தக் கல்லூரியில் படித்தார்கள். சில மாண வர்கள் மாலை நேரங்களில் ஆட்டோ ஓட்டிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் இரவு உணவகங்களில் சிப்பந்திகளாக இருந்தார்கள்.

ஒரு சில பேர், அறுவடைக் காலங்களில் விவசாயக் கூலிகளாக வேலைக்குப் போனார்கள். ஆனால், இன்னொருபக்கம் திருச்சியின் பெரும் செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளும் அரசியல் தலைவர்களின் வீட்டுப் பிள்ளைகளும்கூட எங்களோடு படித்தார்கள். அவர்களில் சிலர் பாதுகாப்புக்காக உதவியாளர்களையும் கூடவே அழைத்துவருவதுண்டு. நிலாமுதீன் எல்லா மாணவர்களிடத்தும் ஒரே வகையில்தான் அன்பு செலுத்தினார். ஏழை, பணக்காரன்; ஆண், பெண் என்று எந்த வித்தியாசமும் காட்டியதில்லை. என் வகுப்பில் இஸ்லாமியர்கள் யாரும் படித்ததாக நினைவில்லை. அவர், எல்லோருக்கும் பொது வானவராகவே இருந்தார். பெயரில் மட்டுமே அவரது சமய அடையாளம் வெளிப்பட்டது.

நிலாமுதீனின் வகுப்பெடுக்கும் பாணி குறிப் பிட்டுச் சொல்லப்பட வேண்டியது. பெரும் பாலான பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே வகுப்பெடுப்பார்கள். கிராமப்புற மாணவர் களைக் கருத்தில்கொண்டு தமிழ், ஆங்கிலம் இரண்டிலுமே வகுப்பெடுப்பார் நிலாமுதீன். அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளைத் தமிழில் விரிவாக விளக்கிவிட்டு, ஆங்கிலத்திலும் அதைத் திரும்பிச் சொல்லும்போது தமிழ், ஆங்கிலம் என இரண்டுமொழிகளிலும் மாண வர்கள் கலைச்சொற்களை எளிதாகக் கற்றுக் கொள்வார்கள்.

அரசமைப்புச்சட்ட கூறுகள் ஒவ்வொன்றை யும் விளக்கும்போது அரசமைப்புச் சட்ட அவையில் நடந்த விவாதங்கள், திருத்தங் களுக்குக் காரணமான போராட்டங்கள், அதை யொட்டிய அரசியல் விவாதங்கள், அரசமைப் புச் சட்டம் தொடர்பிலான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு விவரங்கள் என்று வரலாற்றையும் நினைவு கூர்வார்.

அரசமைப்புச்சட்டம் சார்ந்த விவாதங்கள் எழுகிறபோது அன்றைய நாளிதழ்களில் வெளி வந்திருக்கும் கட்டுரைகளையும் கூட விவாதிப் பார். நான் படித்த காலத்தில் ராஜீவ் தவான் 'தி இந்து' ஏட்டில் 'லா அன்ட் சொசைட்டி' என்ற தலைப்பில் ஒரு பத்தி எழுதிக்கொண்டிருந்தார். நாட்டின் முக்கிய பொறுப்புகளை வகிப்போ ருக்கு வி.ஆர்.கிருஷ்ணய்யர் திறந்த மடல்களை எழுதிக்கொண்டிருந்தார். அவற்றை அன்றே வகுப்பறையில் விவாதிப்பது அவரது வழக்க மாக இருந்தது. உச்ச நீதிமன்றத்தின் முன்னாள்

நீதிபதிகளான பகவதியின் பெயரையும் கிருஷ்ணய்யரின் பெயரையும் சொல்லாமல் அவரது வகுப்பு ஒன்றுகூட நிறைவுபெற்றதில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் மீது அவருக்கு விமர்சனங்கள் இல்லாமலும் இல்லை. ஆனால், அதற்கான தீர்வுகளும்கூட அச்சட்டத்துக்குள்ளேயே அடங்கியிருப்பதாக நம்பினார். உதாரணத்துக்கு, அரசமைப்புச் சட்டத்தின் ஒரு கூறாக இருக்கும் பொது சிவில் சட்டமானது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவத்துக்கே எதிரானது என்று அவர் வாதித்தார். அது குறித்து அவர் எழுதிய சில கட்டுரைகள் முக்கியமானவை. இந்தியாவில் இன்றைய சட்டக் கல்வியின் நிலை குறித்து 'காலச்சுவடு' உயர்கல்வி சிறப்பிதழில் அவர் எழுதிய கட்டுரையொன்றும் மிக முக்கியமானது. தமிழில் இப்பொருளைக் குறித்து வெளிவந்த மிகவும் அரிதான கட்டுரை அது.

பிற்படுத்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், பெண்கள், சிறுபான்மையினர் என பாதிக்கப்பட்ட யாவருக்கும் அரசமைப்புச் சட்டமே போராடுவதற்கான ஆயுதமும் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான கேடயமும் ஆகும் என்ற செய்திதான் அவரது விரிவுரைகளின் மையமாக இருந்தது. ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரு சட்டப் பேராசிரியராக அந்தச் செய்தியை தனது மாணவர்களுக்கு இடைவிடாமல் போதித்துக்கொண்டிருந்தார். அரசு சட்டக் கல்லூரியிலிருந்து பணி ஓய்வு பெற்றதும் சாஸ்த்ரா சட்டப் பள்ளியில் முதல்வராகப் பொறுப்பேற்றார். அங்கு, மிகப் பெரும் எண்ணிக்கையில் இலவச சட்ட உதவி முகாம்களை நடத்தியதில் அவர் மனநிறைவு கொண்டார் என்பதை அவருடனான உரையாடல்களிலிருந்து உணர்ந்துகொண்டிருக்கிறேன்.

அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னும் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற பொருளாதார நிர்ப்பந்தங்கள் எதுவும் அவருக்கு இல்லை. மிகவும் வசதியான குடும்பப் பின்னணியிலிருந்து அன்றைக்கு அவ்வளவாக ஊதிய வாய்ப்புகள் இல்லாத சட்டக் கல்லூரிப் பேராசிரியர் பணியை அவர் ஏற்றுக்கொண்டதே ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. பணி ஓய்வுக்குப் பிறகு திருச்சியிலிருந்து தினந்தோறும் தஞ்சை பேருந்தில் பயணித்து சாஸ்த்ரா சட்டப் பள்ளிக்குச் சென்றுவந்ததற்கு வகுப்புகள் எடுப்பதிலும் மாணவர்களைச் சந்திப்பதிலும் அவருக்கு இருந்த அளவற்ற ஆர்வமே காரணம்.

பெருந்தொற்றுக் காலத்துக்கு சற்று முன்பு, நண்பர் ஒரத்தநாடு விஜயகுமாருடன் பேராசிரியர் நிலாமுதீனை கிரஸெண்ட் சட்டப் பள்ளி வளாகக் குடியிருப்பில் சந்தித்தபோது தனது மகளுடனான ஒரு உரையாடலை அவர் நினைவுகூர்ந்தார். அவரது நண்பர்களில் பெரும்பாலானவர்கள் நீதிபதிகளாக இருக்க, அவர் மட்டும் ஏன் பேராசிரியர் பணியே போதும் என்று முடிவெடுத்தார் என்ற மகளின் கேள்விக்கு அவர் சொன்ன பதில், 'நான் ஆண்டுதோறும் பல நீதிபதிகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறேன்' என்பது. ஆசிரியப் பணியை அவர் அவ்வளவு நேசித்தார்.

நீதிபதிகளான பிறகும் அவரது மாணவர்கள் அவரைத் தொலைபேசியில் அழைத்து ஆலோசனைகள் கேட்பார்கள். அதேபோல, ஓர் இளம் வழக்கறிஞர்களும்கூட அவரிடம் அறிவுரைகள் கேட்பார்கள். நீதித்துறையில் மட்டுமல்ல, ஆட்சி நிர்வாகத் துறையிலும் காவல் துறையிலும்கூட அவரது மாணவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கும் அவர் ஆலோசனைகளை வழங்குவார். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கும் முன்னாள் மாணவர்களும் அவரிடம் குறிப்புகளைப் பெற்று அவைகளில் தங்களது விவாதங்களை முன்வைத்தார்கள். அரசின் முதன்மையான அங்கங்களான சட்டமியற்றும் அவை, நிர்வாகம், நீதி ஆகிய மூன்றிலுமே அவரது மாணவர்கள் பணியாற்றி வருகிறார்கள். மந்தையிலிருந்து தப்பிய ஆடுகளாக என்னைப் போன்ற ஒரு சிலர், நான்காவது தூணையும் சார்ந்திருக்கிறோம்.

அவரைப் பார்க்கிறபோதெல்லாம் கடைசியாக தான் படித்த முக்கியமான புத்தகங்களின் தலைப்புகளைச் சொல்லி அவற்றின் உள்ளடக்கத்தைப் பகிர்ந்துகொள்வதை வழக்கமாக வைத்திருந்தார். அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகமாக இருந்தால், அதையும் தவறாது பரிந்துரைப்பார். நாம் கடைசியாக வாசித்த புத்தகங்கள் பற்றியும் கேட்டறிவார். வாசிப்பதில் எப்போதுமே அவருக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது.

‘ஏணி, தோணி, ஆசிரியர்’ என்றொரு சொல் வழக்கு உண்டு. அடுத்தக் கட்டத்துக்கு நம்மை நகர்த்தியதும் விடைபெற்றுச் செல்லக் கூடிய ஆசிரியராக அவர் இருக்கவில்லை. தொடர் வாசிப்பில், துறைசார்ந்த நிபுணத்துவத்தில் தனது மாணவர்களைக் காட்டிலும் எப்போதுமே அவர் முன்னால் சென்றுகொண்டிருந்தார்.

கல்லூரி வளாகத்துடன் அவரது பணி நிறைவு பெற்று விடவில்லை. என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு எப்போதுமே அவர் வழிகாட்டியாக இருந்தார். அவர்களுக்கு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் லட்சியக் கனவை நினைவுபடுத்திக்கொண்டே இருந்தார். உரிமைகளைக் காக்கும் வாளும் கேடயமும் இந்திய அரசமைப்புச் சட்டமே என்ற நற்செய்தியின் தூதுவராக அவர் வாழ்ந்து மறைந்திருக்கிறார். அவர் சட்டத் துறை மாணவர்களிடம் கையளித்த அந்தச் செய்தி அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நம்பிக்கையோடும் பெருமிதத்தோடும் கடத்தப்படும்.

*டிசம். 25, 2020 அன்று நாகர்கோவில் பாரதி புத்தகாலயத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையின் எழுத்துவடிவம்.*

## தமிழகத்தின் அம்பேத்கர்
## டாக்டர் கே. நிலாமுதீன், M.A.,M.L.,Ph.D.,

- **டாக்டர் M.S. அலிகான்**
(தாளாளர் – ஆக்ஸ்போர்ட் மேல்நிலைப் பள்ளி)

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டணத்தில் ஒரு கடற்கரை சூழலில் பிறந்து வளர்ந்து தமிழக அளவில் சட்ட நுணுக்கங்களை ஜாதி மதம் பாராமல் எல்லா திசைகளுக்கும் எடுத்துவைத்த பேராசிரியர் டாக்டர் நிலாமுதீன் அவர்களின் மறைவுச் செய்தி என்போன்ற அவருடைய நண்பர்களுக்கு மிகப்பெரிய துக்கத்தை வந்துவிட்டது.

1975 களுக்கு பின்னால் குமரி மாவட்ட சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பட்டி தொட்டிகளில் எல்லாம் பயணித்த ஒரு பண்பாளர் அவர்கள். ஆரம்ப கட்டத்தில் பட்டணம் கே நிலாமுதீன் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு பல்வேறு கட்டுரைகளின் மூலமாக ஆக்கங்களைத் தந்தவர். ஆயிரத்து 980 களுக்கு பின்னால் குமரி மாவட்ட ஜமாத் பேரவையின் உடைய பொதுச் செயலாளராக களப்பணி ஆற்றியவர்.

1982இல் மாவட்ட இஸ்லாமிய இளைஞர் பேரவை என்கின்ற ஊர் அமைப்பை நாங்கள் இளைஞர்களாக இருக்கக்கூடிய காலகட்டத்தில் நாகர்கோவில் ஆசாத் ஹோட்டலில் வைத்து முதல் கூட்டத்தை கூட்டி நடத்தினோம். பேரவையின் சட்ட ஆலோசகராக பேராசிரியர் இருந்தார்கள். மாவட்டத்தினுடைய அனைத்து ஜமாத்களுக்கும் நாங்கள் பயணித்து ஒவ்வொரு ஊரிலும் இளைஞர் பேரவை உருவாக்கினோம்.

ஜமாத் பேரவைக்கும் இளைஞர் பேரவை ஒரு இணைப்பு பாலத்தை அமைத்ததன் விளைவாக பெரியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நல்ல உறவுகளை ஏற்படுத்த முடிந்தது.

பேராசிரியர் அவர்கள் தன்னுடைய 36 வயதில் தான் சட்டக்கல்லூரியில் பணியில் இணைந்தார்கள். பிறகும் அவர் மரணிக்கும் வரை எங்களோடு தொடர்பில் இருந்தார்கள். திருச்சி சட்ட கல்லூரியில் பணியாற்றுகின்ற போது தமிழகத்தினுடைய அத்துணை பகுதிகளுக்கும் சட்ட முகாம்களை உருவாக்கி பாமர மக்களும் சட்ட நுணுக்கங்களை அறிவதற்கு பாடுபட்டார்கள். அவரிடத்தில் பயின்ற மாணவர்களுக்கு எந்த நேரத்திலும் பாடம் சார்ந்த விவரங்களும் ஆலோசனைகளும் வழங்கி ஒரு சிறப்பான சமூகத்தை உருவாக்குவதில் பேராசிரியர் அவர்கள் பெரும் பணியாற்றியுள்ளார்.

ஒரு பேராசிரியர் மாணவர்கள் இடத்திலும் சக ஆசிரியர்கள் இடத்திலும் கல்லூரி முதல்வர் இடத்திலும் நிர்வாகத்திலும் எவ்வித வேறுபாடின்றி ஒரு கேப்டனாக மாலுமியாக செயல்பட்டு வந்தார்கள். 1993ல் நான் துவங்கிய இஸ்லாமிய மாதிரி பள்ளியின் அறங்காவலர்கள் அவர் ஒருவர்.

அவரோடு 9 நபர்கள் மாதிரிப்பள்ளி என்னுடைய அறங்காவலர்களாக இருக்கின்றோம். பணி ஓய்வுக்குப் பின்னால் அவருடைய வசதி வாய்ப்புகளுக்கு வீட்டிலேயே இருந்திருக்கலாம் ஆனால் நாம் பெற்ற கல்வியை எல்லோருக்கும்

கொடுக்கவேண்டும்என்றஆர்வத்தில்தொடர்ந்து இறுதிவரை பணியாற்றி வந்தார்கள். அவர் பணி யாற்றுகின்ற காலத்தில் அவரிடத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றார்கள். அவரு டைய மாணவர்கள் இன்றைக்கு சட்டத்துறையில் மிகப்பெரிய அளவிலே பணியாற்றி வருவது பேராசிரியருக்கு கிடைத்த பாக்கியமாகும்.

ஒரு காலத்தில் ஒரு நிகழ்வை நடத்திக் கொண்டு நானும் அண்ணன் குலாம் முகமது அவர்களும் நிலாமுதீன் அவர்களும் பேசிக் கொண்டு இருக்கின்ற போது பத்திரிகைகளைப் பற்றியான பேச்சு வந்தது இஸ்லாமிய சமூகத்தில் பத்திரிகைகளின் பெயர்கள் முழுக்க முழுக்க இஸ்லாமிய பெயர்களை தாங்கிய இருக்கும் குறிப்பாக சிராஜ், மதினா, முஸ்லிம் முரசு, நர்கிஸ் என்பன போன்ற பெயர்கள்தான். இதிலிருந்து வேறுபட்டு எல்லா சமூக மக்களும் ஏற்றுக்கொள்கின்ற ஒரு பொதுப் பெயரில் ஒரு புத்தகத்தை துவங்குங்கள் என பேராசிரியர் அவர்கள் என்னிடம் சொல்ல அண்ணன் குலாம் முஹம்மத் அவர்களும் அதை வழிமொழிய உங்கள் தூதுவன் என்கின்ற பெயரில் நான் பதிவு செய்து தியாகி கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்கள் பத்திரிகையை சீரும் சிறப்புமாக ஒரு புதுப்பொலிவுடன்நடத்திவந்தார்கள். நடமாடும் சட்டக் களஞ்சியம் என்கின்ற அடைமொழியை பேராசிரியர் அவர்களுக்கு திருச்சி சட்டக் கல்லூரிகளுடைய முதல்வர் டாக்டர் அழகர் சாமி அவர்கள் குறிப்பிட்டு சொல்வது மிகப் பெரிய பொருத்தமாகும்.

எங்கும் எப்போதும் சட்டம் சம்பந்தமான விவரங்களை நுணுக்கங்களை யாருக்கும் அளிப்ப தற்கு பேராசிரியர் அவர்கள் தயங்கியதில்லை. அதற்காக அவர் எந்த கட்டணத்தையும் பெற் றதும் இல்லை. ஆதலால்தான் இன்றைய அவரு டைய மரணம் பேசும் பொருளாக மாறி இருக் கிறது. அவர் வாழ்ந்த காலத்தில் மிகச்சிறப் பான முறையில் ஏழை பணக்காரன் என்கின்ற பேதம் இல்லாமல் பழகுபவர். ஓரிடத்திலும் அன்பு காட்டக் கூடியவர். இன்றைக்கு தமிழகத் தினுடைய மிகப்பெரிய சட்ட மேதையை நாம் இழந்திருக்கின்றோம். நம்முடைய தேவை சட்ட மேதைகள் என்பதை நாம் அறிவோம்.

சட்டத்துறையில் நம்முடைய பங்களிப்பு மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது. ஆதலால்தான் பேராசிரியர் உடைய மரணத்துக்குப் பின்ன ால் பேசிய சிந்தனையாளர் சிக்கந்தர் அவர்கள் தமிழகத்தினுடைய சட்ட ஒளிவிளக்காக விளங் கிய நிலாமுதீன் அவர்கள் மறைந்து விட்டார்கள். இன்றைக்கு தமிழக அளவிலேயே பல நூறு நிலாமுதீன் கள் உருவாக வேண்டும் எனச் சொன்னார். ஆதலால் நாம் வாழ்கின்ற காலத்தில் பேராசிரியர் அவர்கள் விட்டுச்சென்ற சட்டப் பணிகளை நிறைவேற்றிட சபதம் ஏற்போம். பணியாற்றுவோம்.

## நிலாமுதீன் எனும் மனிதநேயர்...

**- கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்**

சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மாலை வேளை. நான் அப்போது பொது வுடைமை அரசியலில் இருந்து சற்று ஒதுங்கி இளையபெருமாள் தலைமையில மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுக்க துவங்கி யிருந்த காலம்..

தேங்காய்பட்டணத்தில் நடைபெற்ற மீலாது விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த அப்துல்லா அடியாரும் நானும் நிலாமுதீனுடன் காரில் பயணித்தோம்..

மக்ரிப் தொழுகைக்கு பின் நிகழ்ச்சி துவங்கியது. திருக்குர்ஆன் வசனங்களை தனது இனிமையான குரலால் கிராஅத் ஓதிய இளைஞரின் பாங்கு மேடையில் அமர்ந்திருந்த எல்லோருடைய கவனத்தை ஈரத்ததுடன் என்னையும் வசீகரித்தது.

எனது அருகிலிருந்த நிலாமுதீனிடம் அந்த இளைஞர் குறித்து விசாரித்த போது

'சில வருடங்களுக்கு முன்பு மீனாட்சிபுரத்தில் இஸ்லாத்தை தழுவியவர்களில் ஒருவர்.

அரபி மதரசாவில் ஓதிய பின்பு இங்குள்ள மசூதியில் முஅத்தீனாக பணியாற்றி வருகிறார்' என்று கூறிய பதிலைக் கேட்டு பரவசம் அடைந்தேன்.. தொடர்ந்து மேடையில் அமர்ந்து மீலாது நிகழ்ச்சியில் ஆற்றும் உரைகளை கவனித்தபடி இருந்தேன்.

அடுத்து கொடிக்கால் செல்லப்பா ஒருசில

வார்த்தைகள் பேசுவார் என்று திடீர்னு நிலா முத்தீன் வேண்டுகோள் வைக்க எனக்கு பேசு வதற்கு வார்த்தைகள் வரவில்லை..

ஆனாலும் நிகழ்ச்சியை வாழ்த்தி பேசிவிட்டு

'இந்த நிகழ்ச்சி ஆரம்பத்தில் குரான் வசனங் களை ஓதி அனைவரையும் கவர்ந்த மீனாட்சிபுரம் இளைஞருக்கு இறைவன் வழங்கியுள்ள சமத்துவ வாழ்வியல் எனக்கும் கிடைத்திட இறைவனை பிரார்த்திக்கிறேன்' என்று பேசிவிட்டு அமர்ந் தேன்...

நான் கலந்துகொண்ட முதல் இஸ்லாமிய மேடை தேங்காய்பாட்டணம் மீலாது மேடை என்பதும், என்னுள் இஸ்லாமிய சமத்துவம் குறித்த வேட்கையை தூண்டியதும் அந்த மேடை என்பதுடன் அதற்கு தூண்டுதலாக இருந்தவர் மறைந்த பட்டணம் கே. நிலாமுதீன் என்பதும் நெஞ்சில் நிழலாடுகிறது..

## சட்டத்துறை சாதனையாளர், முனைவர், பேராசிரியர்

# டாக்டர் கே. நிலாமுதீன், M.A.,M.L.,Ph.D.,

- **ஆலிம் கவிஞர் தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹி**

இந்தியாவின் தென்முனையாம் குமரி மாவட் டத்தின் தென்மேற்கு கரையில் அமைந்த தேங்காய்ப்பட்டணம் எனும் கடலோர கிராமத் தில் புகழோங்க வாழ்ந்த "முளமூட்டு முதலாளி" என்று அழைக்கப்பட்டு வந்த நிலச்சுவான்தாரின் மூத்த மகனார் கிழ்ரு முஹம்மது என்பவரின் ஒரே மகன்தார் பேராசிரியர் கே.நிலாமுதீன் ஆவார். பிறந்த இரண்டாம் ஆண்டிலேயே தந்தையை இழந்த இவரின் தாயார், தேங்காய்ப் பட்டணதிதின் முதல் ஆங்கில பட்டதாரியும், நெல்லை மாவட்ட கல்வி அதிகாரியுமான (DEO) S.P. ஜெய்னுலாப்தீன், B.A.,B.T., அவர்களால் மறுமணம் செய்யப்பட்டார்.

இளமையிலேயே கல்வி கேள்வியில் சிறந்து விளங்கிய இவர், சட்டத்துறை கல்வியில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இதன் விளைவாக சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று, சட்டத் துறையில் இளநிலை (B.L.) பயின்று பட்டம் பெற்றார். அதைத் தொடர்ந்து சர்வதேச சட்டம் என்ற இயலிலும், சர்வதேச அரசமைப்புச் சட்டம் என்ற இயலிலும் தனித்தனியே முதுநிலை (M.L) பட்டம் பெற்றார். தொடக்கத்தில் நாகர் கோவிலில் மாவட்ட நீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதிமன்றத்தலும் வழக்கறிஞராக பணியாற்றி வந்த இவர் 1987 இல் இருந்து 25 ஆண்டுகள் திருச்சி சட்டக் கல்லூரியில் தேர்வு நிலை பேராசிரியராகப் பணியாற்றினார். அதற்குப் பிறகு தஞ்சாவூருக்கு அருகில் திருச்சி நெடுஞ் சாலையில் அமைந்த சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தில் சட்டப்பள்ளி பேராசிரியராகப் பணி யாற்றி வந்தார். அங்கிருந்து ஓய்வு பெற்றபின் சென்னை வண்டலூரில் உள்ள கிரசென்ட் பல்கலைக்கழகத்தின் சட்டப்புலன் துறையின் முதல்வராகப் (டீன்) பணியாற்றி, தன் இறுதிகால பேராசிரியராகப் பணியை நிறைவு செய்தார். சட்டஅறிவியலில்இவரதுபுலமைஅபாரமானது. மாணவர்களுக்காக பல சட்ட நூல்களையும் எழுதியுள்ளார்.




தேங்கையார் உரையாற்றுகிறார். உடன் நிலாமுதீன் மகன்கள்

சென்னையிலுள்ளடாக்டர்அம்பேத்கர்சட்ட பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு (Syndicate) உறுப்பினராகவும், செனட் உறுப்பினராகவும் இவர்தேர்வுசெய்யப்பட்டார். சென்னைடாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கோழிக்கோடு பல்கலைக்கழகம்ஆகிய 3 பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டக்குழு உறுப்பினராகவும் இவர் பணியாற்றி வந்தார். மும்பையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வந்த அகில இந்திய சட்டப் பேராசிரியர் குழுமத்தில் இவர்

ஒரு உறுப்பினராகப் பணியாற்றினார். குடும்பச் சட்டம் என்ற தலைப்பில் இவர் எழுதிய நூல் பொதுமக்களுக்கும் பயன்தரும் நன்னூல் ஆகும்.

MGR ஆட்சிக் காலத்து தமிழக அமைச்சரும், தற்போது அகில இந்திய காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர்களில் ஒருவருமாகிய திருநாவுக்கரசர் MP அவர்கள் இவரின் கல்லூரித் தோழராவார். தி.மு.க.வின் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா அவர்களும், நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் திருச்சி சிவா M.P. அவர்களும், தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்களும் பா.ஜ.க.வின் முன்னாள் தேசிய செயலாளர் எச்.ராஜா அவர்களும் இவரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவராவார்கள். சென்னை சட்டப் பல்கலைக்கழகத்துக்கான துணை வேந்தர் பதவிக்கு இவரின் பெயரும் முன்மொழியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் தனியார் சட்டம் (Muslim Personal Law) குறித்து ஆய்வு செய்து இவர் முனைவர் பட்டம் (Ph.D) பெற்றார். தமிழ்நாட்டிலேயே முஸ்லிம் தனியார் சட்டம் குறித்து ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற ஒரே பேராசிரியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் குமரி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பு வகித்த இவர், தன்னுடைய உற்ற நண்பர், வழக்கறிஞர் உதுமான் முகைதீன் அவர்களுடன் இணைந்து ஐக்கிய முன்னேற்றப் பேரவை (UDF) எனும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி மாவட்ட முஸ்லிம் கல்வி மாநாடு மற்றும் மாவட்ட முஸ்லிம் பெண்கள் கல்வி மாநாடு ஆகிய 2 மாநாடுகளை நடத்தினார். இந்த மாநாட்டின் பயனாக இவ்விருவரும் குமரி மாவட்டம், திருவிதாங்கோடு எனும் ஊரில் IMS எனப்படும் இஸ்லாமிய மாதிரிப் பள்ளியை நிறுவினார். இவையெல்லாம் இவரின் கல்விப் பணிக்கு எடுத்துக்காட்டாகும். குமரி மாவட்ட அனைத்து முஸ்லிம் ஜமாஅத் கூட்டமைப்பு என்ற அமைப்புக்கு பைலா எனப்படும் துணை விதி அமைப்புக் குழுவில் உறுப்பினராக இடம் பெற்றிருந்த இவர், பின்னர் இந்த அனைத்து முஸ்லிம் ஜமாஅத் கூட்டமைப்புக்கு பொதுச்



செயலாளர் என்ற பொறுப்பையும் ஏற்று சிறப்பாக செயல்பட்டார். அத்துடன் குமரி மாவட்ட இஸ்லாமிய இளைஞர் பேரவை என்ற அமைப்பின் அமைப்பாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். இவை இவரின் சமூகப் பணிக்கு எடுத்துக் காட்டாகும்.

தேங்காய்ப்பட்டணத்தில் பிறந்த பெரும் புலவர் குஞ்சு மூசு கவிராஜர் அவர்கள் ஒரு புரட்சிப் புலவர் ஆவார். ஏனென்றால் பொதுவாக வீரர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, காப்பியங்கள் இயற்றப்பட்ட காலத்தில் “செய்யிதத்து” மற்றும் “ஸல்கா” ஆகிய இரண்டு வீராங்கனைகளை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இரண்டு காப்பியங்கள் இயற்றிய புலவர் குஞ்சு மூசு ஆவார்கள். இத்தகைய பெரும்புலவருக்கு தேங்காய்ப்பட்டணத்தில் இரண்டு மாநாடுகள் நடத்திய முனைவர் பேராசிரியர் திருமலர் மீரான் பிள்ளை அவர்களுக்கு வலக்கரமாக நின்று, துணை புரிந்து அந்த மாநாடு சிறக்க இவர் பாடுபட்டார். இது இவரின் இலக்கிய ஆர்வத்துக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்ட இவரின் ஆக்கங்கள், தினமலர், தேவி, இதயம் பேசுகிறது, முஸ்லிம் முரசு, முன்னேற்ற முரசு போன்ற மாத – வார மற்றும் நாளிதழ்களில் வெளி வந்துள்ளன. இத்தகைய சட்டத்துறையின் வல்லவரும், சமுதாய நலம் நாடிய நல்லவருமாகிய பேராசிரியர் கே.நிலாமுதீன் அவர்களின் மறைவு சமுதாயத்திற்க ஒரு பேரிழப்பாகும்.

எல்லாம் வல்ல இறைவன் இவரின் பிழைகளைப் பொறுத்து இனிய சுவனத்தில் இவரை இடம் பெறச் செய்வானாக!

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.